பக்கங்கள்: இருபத்திரண்டு

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 ஆவணி 07 ஞாயிற்றுக்கிழமை (23.08.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 270

## ஒரு டசின் ஆயுதக் கப்பலை அழித்து

# அரசாங்கம் புலிகளை வென்றமைக்கு இந்தியாவின் உதவியே காரணமாம்!

### அமசடக்கமாகவும், இரகசியமாகவும் நிறைவேறியது

புதுடில்லி, ஒகஸ்ட் 23

இலங்கை அரசாங்கம் போரில் வெல்வதற்கு இந்தியா இரகசியமாகவும், அமசடக்கமாகவும், மூடிமறைத்தும் வழங்கிய உதவிகளே காரணம்.

இலங்கைக்கு தாக்குதல் ஆயுதம் எதனையும் தான் வழங்கவில்லை என்று இந்திய அரசு வெளியே கூறி வந்தாலும், சத்தம் போடாமல் அவற்றை அனுப்பி வந்தது.

இந்தப் புதிய தகவல்கள் நிற்றின் ஏ.கோகலே எழுதிய 'ஸ்ரீலங்கா - போரில் இருந்து அமைதிக்கு' என்ற நூலில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

விடுதலைப் புலிகளுக்கு ஆயுதங்களை ஏற்றி வந்த கப்பல்கள் குறித்த புலனாய்வுத் தகவல்களை வழங்கியும் கப்பல்கள் தங்கி நின்ற அமைவிடங்களையும் ஏனைய துல்லியமான விவரங்களையும் இந்திய அரசு இலங்கைக்கு அமசடக்கமாகத் தெரிவித்தமை விடுதலைப் புலிகளை ஒடுக்குவதற்குப் பெருமளவில் உதவியது என்றும் கோகலே தமது நூலில் புட்டுக் காட்டியுள்ளார்.

இலங்கைக்கு தாக்குதல் ஆயுதங்கள்

(22 ஆம் பக்கம் பார்க்க)

### குடாநாட்டில் மொத்தம் 9,277 மாணவர்கள் இன்று பரீட்சை எழுதுவர்

யாழ்ப்பாணம், ஒக.23

இன்று நடைபெறவிருக்கும் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கு யாழ்ப்பாண மாவட்டத்தில் 84 நிலையங்களில் 9,277 மாணவர்கள் தோற்றுகின்றனர்.

யாழ்ப்பாணம், தென்மராட்சி, தீவுப் பகுதி

(22 ஆம் பக்கம் பார்க்க)

மாணவச் செல்வங்களே!

இன்று (23.08.2009 இல்) நடைபெறும் தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் அன்புக்குரிய மாணவ மணிகள், பெற்றோரும் மற்றோரும் மெச்சும் விதத்தில் சிறப்புச் சித்திகள் பெற்றுப் பெருமையுற உதயனின் நல்வாழ்த்துக்கள்.

### நாட்டில் சகல பிரதேசங்களிலும் பாதுகாப்பு இப்போது முற்றிலும் படைகளின் கையில்

#### அதனால் ஆளணி அதிகரிப்பு அவசியம் என்கிறார் பொன்சேகா

கொழும்பு, ஒக. 23

புதிதாக விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் பாதுகாப்பை உறுதிசெய்ய படைகளுக்கு மேலும் ஆள்களைச் சேர்க்க வேண்டும். முப்படைகளின் பிரதம அதிகாரி ஜெனரல் சரத்பொன்சேகா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நேற்று மாலை இடம் பெற்ற வைபவம் ஒன்றில் பேசுகையில் அவர் இதனை எடுத்துக் கூறினார். (22 ஆம் பக்கம் பார்க்க)

### முகாம்களில் நிலத்தில் இருந்தும் சில மாணவர்கள் பரீட்சை எழுத ஏற்பாடு; 'காட்போட்'கள் வழங்கப்படும்

வவுனியா, ஒக. 23

இன்று நடைபெறும் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கு வவுனியா அகதி முகாம்களைச் சேர்ந்த 5,300 மாணவர்கள் தோற்றுகிறார்கள்.

பரீட்சை நடைபெற ஏற்பாடகியுள்ள கூடாரங்களில் தளபாட வசதி இல்லாத இடங்களில் மாணவர்கள் தரையில் இருந்து எழுத வேண்டும். மழை ஒழுக்கு அல்லது நிலத்தில் ஈரம் காணப்பட்டால், பாதிப்பின்றி அவர்கள் பரீட்சை எழுதுவதற்காக 'காட்போட்' துண்டுகள் வழங்கப்பட்டுள்ளன.

வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி வி.ஆர்.ஏ. ஒஸ்வால்ட் இத்தகவலைத் தெரிவித்தார்.

இன்றைய பரீட்சைக்குச் செய்யப்பட்ட வசதிகள் மற்றும் ஏற்பாடுகள் குறித்து அவர் மேலும் கூறியதாவது :

மாணவர்களுக்கு அவர்கள் தங்கியுள்ள முகாம்களிலேயே, அவர்களை பரீட்சைக்

(22 ஆம் பக்கம் பார்க்க)

#### அமெரிக்க அதிகாரிகளுக்கு அமைச்சர் யாப்பா பதிலடி

### எவரது அழுத்தம் கருத்தியும் முகாம் மக்களை உடனடியாக மீளக்குடியமர்த்த மாட்டோம்

#### சுதந்திர நடமாட்ட அனுமதியையும் வழங்கமுடியாது

கொழும்பு, ஒக 23

எவரது அழுத்தம் காரணமாகவும் இடம் பெயர்ந்து வவுனியா நலன்புரி நிலையங்களில் தங்கியிருக்கும் மக்களை உடனடியாக மீளக் குடியேற்றிவிட முடியாது. அந்த மக்களின் பாதுகாப்பை உறுதிசெய்ய வேண்டியது அரசின் பொறுப்பாகும்.

நிவாரணக் கிராமத்தில் உள்ள மக்களுக்கு சுதந்திர நடமாட்டத்துக்கான அனுமதியை உடன் வழங்க முடியாது. அரசாங்கத்தின் சார்பில் இவ்வாறு மிகவும் திட்டவட்டமாக தெரிவித்திருக்கிறார் ஊடகத்துறை அமைச்சர் லக்ஷமன் யாப்பா அபேவர்த்தன.

போரின் போது இடம்பெயர்ந்து வவு

(22 ஆம் பக்கம் பார்க்க)

### யாழ்.மாவட்டப் பாடசாலைகளின் அபிவிருத்திக்கு 1,035 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது

#### கல்வி அமைச்சர் நாடாளுமன்றில் தகவல்

கொழும்பு, ஒக. 23

யாழ்.மாவட்ட பாடசாலைகளை அபிவிருத்தி செய்வதற்கு 1,035 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது என்று கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் உரையாற்றுகையில் அவர் இப்படிக் கூறினார்.

அப்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

யாழ்.மாவட்டத்தில் உள்ள 31 பாடசாலைகள் இசுறு பாடசாலை திட்டத்தின்

(22 ஆம் பக்கம் பார்க்க)

### ஜி.சீ.ஈ. உயர்தர விடைத்தாள் திருத்தும் பணி நான்கு வருடங்களின் பின்னர் இம்முறை யாழ்ப்பாணத்தில்

யாழ்ப்பாணம், ஒக. 23

இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஜி.சீ.ஈ (உயர்தர) பரீட்சையின் விடைத்தாள் திருத்தும் பணிகள் நான்கு வருடங்களின் பின்னர் இம் முறை யாழ்ப்பாணத்தில் நடைபெறும்.

ஆகக் கடைசியாக 2005 ஆம் ஆண்டில்

(22 ஆம் பக்கம் பார்க்க)

யாழ்மாவட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட முகவர்

FedEx Express

உள்நாடு, வெளிநாடுகளுக்கு கடிதங்கள், அன்பளிப்புப் பொருள்கள், உணவுப்பொருள்கள், உடுபுடவைகள் மற்றும் VDO பிரதிகள், CD க்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்படும்.

குறிப்பிட்ட முகவரியில் ஒப்படைக்கப்படும்

விரைவு பாதுகாப்பு நம்பகத்தன்மை

குறைந்த கட்டணத்திலான உள்நாடு வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை

திருமுருகன் கொம் ஸநற்

259, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். T.P- 2227835 (ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ் முன்பாக)

46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. (நல்லூர் ப.நோ.கூ. சங்கம் முன்பாக)

TCN EXPRESS

2B, Nelsan Place, Colombo -06

வாடிக்கையாளரின் நலன்கருதி 10% - 25 % விசேட கழிவு

லண்டன், சுவிஸ், பிரான்ஸ் நாடுகளுக்கு 3 கிலோவுக்கு குறையாத பொதிகளிற்கு 1Kg 550/=ரூபா வீதமும். கனடாவுக்கான 3 கிலோவுக்கு குறையாத 1Kg பொதிகளிற்கு 550/= ரூபா வரையான விசேட சலுகை

ஞாயிறு விடுமுறை தினங்களிலும் சேவைகளை பெற்றுக்கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்டெடுக்கப்பட்டுள்ளது

தெய்வேந்திரம் தனேஸ்வரி என்பவரது அடையாள அட்டை உட்பட கைப்பை கண்டெடுக்கப்பட்டுள்ளது. அ.அ.இல 596143687V ஆதாரம் காட்டி பெறவும்.

தொடர்புகளுக்கு : 077 9361250
(88158) (ப. ஜெயபதிதரன்)

## மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பம், 1975 ஆம் ஆண்டு, பூரட்டாதி நட்சத் திரம், செவ்வாய்க்குற்றமற்ற, கிரகபாவம் 48, லண்டனில் வதிவிட உரிமையுடைய மணமகனுக்கு (மணமகன் செப்ரெம்பர் மாதம் இலங்கை வரவுள்ளார்) மணமகள் தேவை.
தொடர்பு : 060 221 2961 (C/560430)

## மணமகன் தேவை

Jaffna Hindu, 29 வயது, சித்திரை நட்சத்திரம் MBA, BCA, Very Beauty Bride expecting educated Groom. 4 இல் செவ்வாய் உள்ளது. மூன்று சுற்றுக் கிரகபாவம் 26, இது ஒரு திருமண சேவை (www. thaalee.com) Profile Number 6052. போன் :- 2523127.

## மணமகன் தேவை

Jaffna Hindu, 26 வயது, திருவோணம் நட்சத்திரம் Dental Ductor, Fair, Silm, Beauty Bride Wanted educated Groom. 8 இல் செவ்வாய் உள்ளது. மூன்று சுற்றுக் கிரகபாவம் 73, இது ஒரு திருமண சேவை (www. thaalee.com) Profile Number 5820. போன் :- 2523127.

## மணமகன் தேவை

Colombo, 29 வயது, சித்திரை நட்சத்திரம், Educated, Living in UK With Temporary Visa, Very Fair, Slim briede expecting Groom. செவ்வாய் தோஷம் இல்லை. மூன்று சுற்றுக்கிரகபாவம் 15, இது ஒரு திருமண சேவை (www.thaalee.com) Profile Number 4875. போன் :- 2520619.

## மணமகள் தேவை

Jaffna Hindu, 32 வயது, பூச நட்சத்திரம் MSC, UK Citizen, மணமகனுக்கு மணப் பெண் தேவை .7 இல் செவ்வாய் உள்ளது. மூன்று சுற்றுக்கிரகபாவம் 88, இது ஒரு திருமண சேவை (www. thaalee.com) Profile Number 6561. போன் :- 2520619.

## மணமகன் தேவை

Jaffna Hindu, 24 வயது, சுவாதி நட்சத்திரம் HND in Software Engineering, Very beauty Fair, Slim bride expecting Foreign Groom. 12 இல் செவ்வாய் உள்ளது. மூன்று சுற்றுக் கிரகபாவம் 34, இது ஒரு திருமண சேவை (www. thaalee.com) Profile Number 6619. போன் :- 2523127.

மணமக்களே www. thaalee.com என்கிற Website இல் பல்லாயிரக்கணக்கான மணமக்களுடைய முழுமையான விவரங்கள், ஜாதகங்கள், புகைப்ப டங்கள் உள்ளன. நீங்களாகவே உங்களுக்குப் பொருத்தமானவர்களைத் தெரிவு செய்து கொண்டு எம்மை நாடினால் நாங்கள் ஆவனசெய்வோம். உங்களுடைய விவரங்களையும் நீங்களாகவே பதிவு செய்து கொள்ள முடியும். மேலதிக விவரங்களுக்கு தொ.பே.: 2523127, 2520619. Address: 45/1, மாதம்பிட்டிய வீதி, கொழும்பு - 15


# மறவன்புலோ பிரதேசத்தில் திருடர்களின் கைவரிசை அதிகரிப்பு

நாவற்குழி, ஓக. 23

உயர்பாதுகாப்பு வலயமாக இருந்து அண்மையில் மீள்குடியமர அனுமதிக்கப்பட்ட மறவன்புலோ பிரதேசத்தில் கடந்த சில நாள்களாக திருடர்களின் கைவரிசை அதிகரித்திருப்பதாக அங்குள்ள மக்கள் தெரிவித்திருக்கின்றனர்.

தினமும் அதிகாலை நேரத்தில் இப் பகுதிக்குள் நுழையும் இக்கும்பல் அங்குள்ள மக்களால் சேகரித்து வைக்கப்பட்டுள்ள விறகுகளை அபகரிப்பதுடன் வேறு பயன்தரு மரங்களையும் கண்டபடி வெட்டி உழவு இயந்திரம் மற்றும் 'ஹன்டர்' வாகனங்களில் ஏற்றிச் செல்கின்றனர். அத்துடன் வேறொரு கும்பல் அப்பகுதிக்குள் நிற்கும் மாடுகளைப் பிடித்து இறைச்சிக்காக வெட்டுவதுடன் பின்னர் அங்கிருந்து செல்லும்போது ஏனைய மாடுகளையும் தடம்போட்டுப் பிடித்துக் கொண்டு செல்வதாகவும் கூறப்படுகின்றது.

இதேவேளை, இப்பகுதியைச் சேர்ந்த பலர் இடம்பெயர்ந்து வலிகாமப் பிரதேசத்தில் வசித்து வருகின்றமையால் அவர்கள் காலை வேளைகளில் தமது வாழ்விடங்களைப் பார்க்க வரும் முன்னர் இத் திருட்டுக் கும்பல் இப் பிரதேசத்தில் இறங்கித் தமது கைவரிசையைக் காட்டி வருவதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

எனவே, இவ் விடயத்தில் அரச உயர் அதிகாரிகளும், இராணுவ சிவில் அதிகாரிகளும் உடனடிக் கவனமெடுத்து இத் திருட்டைத் தடுப்பதுடன் இம் மக்களின் மீளக் குடியமர்வு விடயத்தில் கரிசனை எடுக்க வேண்டும் என வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

(50-288)


## வீடு காணி விற்பனைக்கு

மூத்தவிநாயகர் கோயிலுக்கும் ஆனைக்கோட்டைச் சந்திக்கும் இடையில் நவாலி வீதியில் 4 பரப்புக்காணி சுற்றுமதிலுடன் கூடிய நல்லநிலையில் உள்ள வீட்டுடன் விற்பனைக்கு உண்டு. ரூ.100 லட்சம் பெறுமதி. பேசித்தீர்க்கலாம். தொடர்பு:- 0776029164

## தேவை

யாழ் நகரில் இயங்கும் பிரபல ஜவுளி நிறுவனம் ஒன்றிற்கு பழகிய ஆண், பெண் ஊழியர்கள் தேவை.

தொடர்புகொள்ளவும்:- ஆசிரி மாட் டுர் 0772850753

## வாடகைக்கு

பருத்தித்துறை வீதி, 48/3, 1ஆம் ஒழுங்கையில் வீடு வாடகைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய தொலை பேசி இலக்கம் 0726705547 (88154)

## காணி விற்பனைக்கு

மானிப்பாய் சந்தைக்கு மிக அண்மை யில் அமைதியான சூழலில் விசாலமான 4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு : 077 6916929 (88157)





# மரண அறிவித்தல்கள்

## அப்பாப்பிள்ளை துரைராஜா



வேலணையைப் பிறப்பிடமாகவும் கொழும்புத்துறை, அரியாலையை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட அப்பாப்பிள்ளை துரைராஜா நேற்றுக் (22.08.2009) காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.08.2009) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் இடம்பெற்று அவரின் பூதவுடல் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அன்னங்கை ஒழுங்கை, அரியாலை. தகவல்: து.அருள்தாஸ் (மகன் - சுசி)
தொலை.பேசி:- 021 5100048 (88162) முத்தையா பேக்கரி, பஸ்ரியன் சந்தி.

## சின்னத்தம்பி செல்லத்துரை



நல்லூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி செல்லத்துரை (21.08.2009) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் லோகேஸ்வரியின் அன்புக் கணவரும் சுஜிதாவின் அன்புத் தந்தையும் விஜேரட்ணத்தின் அன்பு மாமனாரும் ஆர்த்திகா, வைஸ்ணவி, அனித்தா, கம்ஷா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.08.2009) ஞாயிற்றுக்கிழமை பி.ப 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*555/7, பருத்தித்துறை வீதி,* தகவல்:
*நல்லூர்.* (88161) மருமகன் (விஜயன்).

## கிறிஸ்தோப்பிள்ளை லூர்த்தம்மா



தோலகட்டி, வசாவிளானைப் பிறப்பிடமாகவும் கோப்பாய் தெற்கை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட கிறிஸ்தோப்பிள்ளை லூர்த்தம்மா கடந்த (21.08.2009) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வலத்தீஸ் - சபிராசி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான பாவிலு - பிரான்சிஸ்காவின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற கிறிஸ்தோப்பிள்ளையின் (றெயில்வே ஊழியர்) பாசமிகு மனைவியும் காலஞ்சென்றவர்களான தேவசகாயம், அருளானந்தம், பாக்கியராசா, மற்றும் மேரி அருள்மணி (நேசமணி - கொழும்பு) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் மேரி இராசமலர், அன்ரன் செல்வரட்ணம் (ஜேர்மனி), மேரி ஜெயமலர் (வவுனியா), மேரி றோஸ்மலர், அன்ரன் சீவரட்ணம், அன்ரன் தவறட்ணம், அன்ரன் இராசறட்ணம், மரினா ஜெயறோஸ் (வவுனியா) ஆகியோரின் அன்புத் தாயும் எட்மனின் (சசி - கொலண்ட்) பாசமிகு பெரியம்மாவும் ஜெயராசா, சுசி, பத்மராசா, பிரான்சிஸ் பெர்ணான்டோ, மஞ்சீத்தா (ஆசிரியர்), செல்வஅமுதினி, ரெம்சி ஆகியோரின் மாமியும் கெனடி, சுகந்தினி, யூட், கனியூட், லக்ஸ்ஷன், றொகான், றெஜினா, சகானா, நீருஜா, கில்டா, நீருஜன், டன்சன், டக்சனா, பெல்சீனா, சர்மினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.


அன்னாரின் இறுதி ஆராதனைகள் இன்று (23.08.2009) ஞாயிற்றுக்கிழமை பி.ப 2 மணியளவில் கோப்பாய் புனித மரியன்னை ஆலயத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்திற்காக கோப்பாய் புனித மரியன்னை சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கோப்பாய் தெற்கு,* தகவல்:
T.P: 0776991805 (88141) குடும்பத்தினர்

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

| பிறப்பு | | மறைவு |
|---|---|---|
| 12 | | 03 |
| ★ | | ★ |
| 08 | | 09 |
| ★ | | ★ |
| 1946 | | 2008 |



அமரர்

## பெருமாள்பிள்ளை சேதுராமன்

பாசத்தின் வடிவமதாய் பார்த்திருந்த என்
துணைவனே!
அன்புக்கும் அமைதிக்கும் உறைவிடமான
எங்கள் தந்தையே!
எங்கள் உயிரும் உணர்வும் இருக்கும் வரை
உங்கள் பாசத்தை மறக்க முடியுமா?

*அன்னாரின் நினைவாக இன்று (23.08.2009) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

*இல. 17/2, பிள்ளையார் வீதி,* மனைவி, பிள்ளைகள்,
*திருநெல்வேலி.* (88149) மைத்துனர் ([illegible])


## கண்ணிவெடியகற்றல் சம்பந்தமாக பெண்கள் பயிற்சி பெறுவதற்கான வாய்ப்பு

THE HALO TRUST

HALO Trust சமவாய்ப்புக்களை வழங்கும் நோக்கிலும், எதிர்காலத்தில் மனித செயல் கண்ணிவெடியகற்றுபவராக தொழில்வாய்ப்பு வழங்கமுடியுமென்ற எண்ணத்துடனும், 24 பெண் விண்ணப்பதாரிகளுக்கு இருவாரகால கண்ணிவெடியகற்றும் பயிற்சியினை வழங்கவுள்ளது.

பெண் கண்ணிவெடியகற்றுனர் தங்களுடைய ஆண் சகாக்களைப் போன்று மிகச் சரியாக அதே கடமைகளைச் செய்யவேண்டியிருக்கும்.

விண்ணப்பதாரிகள் விளங்கிக்கொள்ளவேண்டியது, கண்ணிவெடி அகற்றல் துப்புரவற்றதும், தேகவலுவை அதிகம் பிரயோகிக்கும் மிகக் கடினமான வேலையென்றும் அறிந்திருந்தாலும், எமது தரமான நடவடிக்கைகள் கண்ணிவெடி அகற்றுதலிலுள்ள அபாயத்தை இயலுமான அளவு குறைத்துக்கொள்ளும். அவை இவற்றை முற்றாக நீக்க முடியாது.

எனவே, கருத்திற்கொள்ளப்படவேண்டிய விண்ணப்பதாரிகள் எவரிடமிருந்தும் பலமான அர்ப்பணிப்பு உணர்வு எதிர்பார்க்கப்படுகிறது.

பயிற்சியாளர்களுக்கு இருவார காலப் பயிற்சிக்கு மட்டுமே கொடுப்பனவு வழங்கப்படும். அதன் பின்னர், அவர்கள் வெற்றிடம் வரும்வரை காத்திருக்க வேண்டியேற்படும். எதிர்கால தொழில் வாய்ப்பு என்பது முற்று முழுதாக மேலதிக நிதியைப் பெற்றுக் கொள்வதிலேயே தங்கியுள்ளது. பயிற்சியின் முடிவில் தொழில்வாய்ப்பு கிடைக்குமென்பதில் உத்தரவாதமில்லை.

பயிற்சியினை புரட்டாதி மாத ஆரம்பத்தில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. சரியான திகதி உறுதிப்படுத்தப்படும்.


*விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:-*
**The HALO Trust**
*இல: 12, நல்லூர் குறுக்கு வீதி,*
*யாழ்ப்பாணம்.* (88146)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போரால் நலிந்துபோன நலன்புரி நிலைய மக்களை வெள்ள நீரால் அவதியுற வைத்த அடைமழை........!

" அடுத்த மழை எப்போது பெய்யப் போகின்றதோ என்று பயமாக இருக்கின்றது. சேறாகிப்போன வீட்டில் மழை வெள்ளத்தை வெட்டி விடுதற்காக கையில் மண் வெட்டியுடன் எல்லோரும் காத்திருக்கின்றோம். அவலம் எங்களோடு கூடவே குடும்பம் நடத்து கின்றது" என்று துயர் கசியும் வார்த்தைகளை நலன்புரி நிலையத்தில் வசிப்பவர் ஒருவரிடம் இருந்து கேட்கமுடிந்தது.

துக்கத்தின் குழந்தைகளாக மாறியிருக்கும் வன்னி அகதிகளின் அவலம் இன்னமும் முடிந்த பாடாக இல்லை. அவர்களைச் சூழ்ந்துள்ள துயரத்தின் வேகம் அதிகரித்தபடியே உள்ளதே தவிர குறைந் தபாடாக இல்லை. போரின் வடுக்களைத் தாங்கி ஒரு நரக வாழ்வில் இருந்து மீண்ட நிம்மதிகூட அவர்களிடத்தே இன்னமும் உண்டாக வில்லை. மேலும் மேலும் வெவ்வேறு வடிவங்களில் அவர்கள் துன்பத்துக்குள் அமிழ்ந்தபடியே இருக்கிறார்கள். அவர்களின்



துயரம் கண்டுவானத்தாய் மழையாய் அழுதுவடித்த வெள்ளத்தில் அவர்களின் இன்னல்கள் மறைவதற்குப் பதிலாக வெள்ளத்தின் பாதிப்புக்குள் மூழ்கவேண்டியதாயிற்று. கடந்தவாரம் வடபகுதி எங்கும் கொட்டித் தீர்த்த பெருமழை பெரும்வெள்ளக் காட்டினை உண்டாக்கிய பின்னரே ஓய்ந்தது. இதனால் நலன்புரி நிலையங்களில் ஒடுங்கிக் கிடந்த பல்லாயிரக் கணக்கான குடும்பங்கள் வெள்ளத்தின் கோரத்தில் இருந்து தப்பிக்கும் வழி தெரியாது, முள்கம்பி வேலிக்கால் தப்பி ஓடவும் முடியாது குறுக்கப்பட்ட பகுதிக் குள்ளேயே - வெள்ளக்காட்டுக்குள் ளேயே - தொடர்ந்தும் வாழ நிர்ப்பந்திக் கப்பட்டுள்ளனர். நலன்புரி நிலையங் களில் உள்ள மக்களின் நாளாந்தச் செயற்பாடுகளை அல்லது அவர்கள் எதிர் கொள்ளும் அவலங்களை வாழ்க்கை என்ற வரையறைக்குள் அடக்கிவிட முடியாதுதான்.

### பலப்பல சந்தேகங்களையும் உண்டாக்குகின்றது.....

வன்னிமீதான இறுதி யுத்தத்தின் போது அங்குல நிலம்கூட இடைவெளியின்றி வீழ்ந்து வெடித்த குண்டுகளாலும், ஒரு வாய் சோற்றுக்குக்கூட பொருள்களைப் பெற முடியாத பட்டினியாலும், இனியும் இருந்தால் உயிரையும் இழக்க வேண்டும் என்ற தவிப்பாலும் இதுதான் நமக்குள்ள ஒரே ஒரு கடைசித்தெரிவு என்ற சூழமைவில் அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் இலட்சக்கணக்கான மக்கள் வந்து சேர்ந்தனர். அவ்வாறு வரும்போது தாம் நலன்புரி நிலையங்கள் என்று பெயரிடப்பட்ட திறந்தவெளி தடுப்புக் காவலில் வைக்கப்படுவோம் என அவர்கள் கனவிலும் நினைத்திருக்க மாட்டார்கள். வழமைபோல சோதனை செய்துவிட்டு, சந்தேகப்பட்டவர்களை விசாரித்துவிட்டு இயல்பான வாழ்வுக்குள் மக்களை அரசாங்கம் அனுமதிக்கும் என்பதே அவர்களின் எதிர்பார்ப்பாக இருந் தது. ஆயினும் நடந்தது அவர்கள் எதிர்பார்த்ததை விடவும் மிகவும் அவலமானதாக அமைந்துள்ளது. அவர்கள் மிருகக்காட்சி சாலையிலுள்ள விலங்குகள்போல நலன்புரி நிலையங்களில் சிறுசிறு வீடுகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். நலன்புரி நிலையங்களில் உள்ள வீடுகளை கூடாரங்கள் என்று சொல்வது மாத்திரமே பொருத்தமானது. வெறும் கூரை விரிப்புகளைக் கொண்டு மேற்புறம் மூடியிருக்க மக்கி அல்லது மண் கொண்டு தனிப்பகுதி நிரவப்பட்டிருக்கும். மற்றும்

படி அதை வாழிடம் என்று ஒப்புக்கொள்வதற்கு எல்லோருக்கும் தயக்கம் இருக்கவே செய்யும். மேலும் நலன்புரி நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ள இடங்களின் புவியியல் அமைப்பு உண்மையில் ஆரோக்கியமான மனித வாழ்வுக்கு உகந்தவையல்ல. அதிகூடிய வெப்பப் பிரதேசங்களிலேயே பிளாஸ்ரிக் காலான தரைவிரிப்புகளால் உண்டாக்கப் பட்ட கூடாரங்களை உள்ளடக்கிய நலன்புரி நிலையங்கள் நிறுவப்பட்டன. இதனால் அண்மைக்காலம் வரை நலன்புரி நிலையங்களில் உள்ள மக்கள் தொடர்ச்சியான நோய்த்தாக்கங்களுக்கு உட்பட்டு வந்தனர். அந்நோய்களில் பெரும்பாலானவை அம்மை, செங்கண் மாரி முதலான அதிகளவு வெப்பத்தால் உண்டாகக்கூடிய நோய்கள் தான். அதிகூடிய வெப்பம் நிலவும் இடத்தில் அதற்குச் சற்றும் பொருந்தம் இல்லாத பிளாஸ்ரிக் கூரை விரிப்புகளைக் கொண்ட கூடாரங் களில் வசித்ததால் தான் அவர்க ளுக்கு இத்தகைய வெம்மை சார்ந்த நோய்கள் உண்டாகின என்பது சிறு பிள்ளைக்கும் புரிகின்ற யதார்த்தமாகும். ஆயினும் இதுபற்றி பொறுப்பான அரச அதிகாரிகள் எவரும் அலட்டிக் கொண்

## தாழ்ந்த பிரதேசங்கள் எனத் தெரிந்தும் மக்கள் வேண்டுமென்றே தங்க வைக்கப்பட்டார்களா?

டதாகத் தெரிய வில்லை. அத்து டன் எல்லா நலன்புரி நிலையங் களும் அமைந்துள்ள தரைப்பகுதி கடல்நீர் மட்டத்தை விடவும். மிகவும் தாழ்வான தாகவே அமைந்திருந்தன. எனவே மாரி காலம் தொடங்கினால் நலன்புரி நிலையங்களில் உள்ள மக்கள் பெரும் இன்னல்களுக்கு ஆளாக நேரிடும் என்ற எச்சரிக்கை பல்வேறு தரப்புகளில் இருந்தும் விடுக்கப்பட்டபோதும் அதற்கும் எவரும்செவிசாய்த்ததாகத் தெரிய வில்லை. அதன் பலனை இப்போது அப்பாவி மக்கள்தான் அனுபவிக்க வேண்டியிருக் கிறது.

கடல்மட்டத்தை விடவும் தாழ்வான நிலப்பகுதியில் அமைந்துள்ள நலன்புரி நிலையங்களில் சிறுமழைக்கே பெரு வெள்ளம் ஏற்பட்டு விடும். ஏனெனில் பிற பகுதிகளில் உள்ள வெள்ளம் எல்லாம் தாழ்வான இப்பிர தேசங்களுக்கே வழிந் தோடிவரும். அதுவே பெரும் மழையானால் வார்த் தைகளால் வர்ணிக்க முடியாத அளவுக்கு இப்பிரதேசம் முழு துமே வெள்ளத்தில் மூழ்கி விடும். அத்த கைய தன்மை வாய்ந்த புவியியல் அமைப்பைக் கொண்ட பிரதேசத் தில் மக்கள் வேண் டும் என்றே குடிய [illegible] என்ற சந்தேக [illegible]



அவ்வாறு இல்லையெனில் நலன்புரி நிலையங்களை அமைப்பதற்கான இடத் தெரிவினை மேற்கொண்டவர்களின் பூகோள 'விற்பன்னத்தை' என்ன வென்பது? ஏனெனில் எல்லாப் பருவகாலங் களிலும் மனிதர்களுக்கு ஒவ்வாத நிலையே இப்பிரதேசத்தில் உள்ளது. மழை, வெயில் என்பன மிகத் தீவிரத்துடனேயே உணரப் படுகின்ற இப்பகுதியில் மிகநீண்ட கால நோக்கோடு எதற்காக நலன்புரி நிலையங்கள் அமைக்கப்பட்டன என்பது எவருக்குமே புரியவில்லை. வெறு நிலங்களாக எத்தனையோ நல்ல இடங்கள் இருக்க தேடிப் பிடித்து இந்த இடங்களில் நலன்புரி நிலையங்களை அமைக்க வேண்டிய அவசியம் என்ன? என்ற கேள்வியும் எழுகின்றது; பலப்பல சந்தேகங்களையும் இது உண்டாக்கு கின் றது. எல்லோரிடமும் கேள்விக் குறிகள் மட்டுமே பேருருவம் பெற்று நிற்கின்றன.



### வெள்ளக் கடலாக மாறிய கூடாரங்களுக்குள் குழந்தைகளைத் தோளில் சுமந்து நின்ற பரிதாபம்

அண்மையில் பெய்த கடும் மழையின் முன்னால் தாக்குப்பிடிக்க முடியாத பிளாஸ்ரிக் கூரைவிரிப்புகள் சரணாகதி அடைந்து விட மேலிருந்தும் கீழிருந்தும் வெள்ளம் குபுகுபு என உட்புகுந்தது. கையில் கிடைத்ததைக் காவிக்கொண்டு கூடாரங்களை விட்டு வெளியே வந்த மக்கள் நலன்புரி நிலையங்களை விட்டு வெளியேற அனுமதிக்கப்படவே இல்லை. இன்னமும் அவதிப்படவே முடிந்தது. சில பொதுமக்கள் நிலைமை யின் கொடுமை தாங்க முடியாது முட்கம்பி வேலிகளை உடைத்துக் கொண்டு வெளி யேற முற்பட்டபோதும் அவர்களது முயற்சி பலனளிக்கவில்லை. தண்ணீர் கடலாய் மாறி நிற்கும் கூடாரங்களுக் குள்ளேயே குந்தியிருந்து தமது மழைக் காலத்தை அவர்கள் கழிக்க வேண்டி வந்தது. குழந்தைகளை தமது தோள்களிலும் முதுகிலும் சுமந்தபடி தண்ணீரில் தேகம் சுவறி ஈரத்தில் உடல் நடுங்க நடுங்க நலன்புரி நிலையத்தில் உள்ள மக்கள் அந்த மழையை வெறுப்போடு திட்டத்தான் முடிந்தது. பசிக்கு உணவுகூட இல்லை. வவுனியா மெனிக் பாம் நலன்புரி நிலையங் களில் உணவுப் பொருள்களை சேமித்து வைத்திருந்த களஞ்சியங் களில்கூட நீர் உட்புகுந் திருந்தது. குவித்து வைக்கப்பட் டிருந்த விறகுக் கட்டுகளில் இருந்து நீர் [illegible]ண்டிருந்தது. இதனைவிட அடுப்பு வைப்பதற்கு ஓர் இடத்தைத்தானும் வெள்ளம் விட்டு வைக்கவில்லை. வெளியில் இருந்து உணவினை சமைத்து நலன்புரி நிலையங்களுக்குள் கொண்டு வரவும் வழியில்லை. ஏனெனில் எல்லா வழிகளிலும் வெள்ளம் மேலுயர்ந்து அவற்றினைத் தடை செய்திருந்தது. அத்தோடு மழை வெள்ளத்தில் ஊறிப்போன வவுனியாவின் தரைப்பகுதி முழுவதும் சதுப்பு நிலமாகி வாகனங்கள் எல்லாம் புதையத் தொடங்கின.

எனவே வெளியில் உணவுப் பொருள்களைக் கொண்டு செல்வதும் சாத்திய மற்றதாகி விட்டது. இதனால் மழைபெய்த நாள்களில் மக்கள் பட்டினியோடும் குளிரோடும் போராட வேண்டியிருந்தது. பால் கேட்டு அழுத பச்சிளங்குழந் தைகளுக்குக் கூட ஒருசொட்டு குடி தண்ணீர் கூட இல்லாத அவலம் எங்கும் தோன்றியது. இதைவிட சீரற்ற வடிகால் அமைப்பு இல்லாததால் நலன்புரி நிலை யங்களில் வெள்ளத்தின் நீர்மட்டம் உயர்ந்து கொண்டே இருந்தது. மலசல கூட கழிவுகள் எல்லாம் நீரில் அடித்து வரப்பட்டு எல்லாக் கூடாரங் களுக்குள்ளும் அழையா விருந்தாளி களாக உள் நுழையத் தொடங்கின. இதைவிட தென்மராட்சியில் உள்ள நலன்புரி நிலையங்களில் பயன்படுத்த முடியாத நிலைக்கு மலசலகூடங்கள் மாறிவிட்டன. ஓடும் வெள்ளமே மலசலகூடங்களாக மாறின. நாற்றமடிக்கும் நரக வாழ்வுக்குள் மக்களின் நாளாந்த வாழ்வு சிதைந்து போயிற்று. அவர்களை நலன்புரி நிலையங்களில் இருந்து வெளியேற எவருமே அனுமதிக்கவில்லை. ஒருவாறு மழை ஓய்ந்ததால் மக்களின் பிரச்சி னைகள் தற்காலிகமாக ஒரு சுமுக நிலையை எட்டியுள்ளன.

### அந்தோ!..மழை நாள்களில் பசியோடும் பட்டினியோடும் போராடிய அகதிகள்

இந்நிலையில் இனிவரப்போகும் மாரி காலத்துக்கு முன்னராவது நலன்புரி நிலையங்களில் உள்ள மக்களின் அவலங்கள் பற்றி தூரநோக்கோடு சிந்தித்து அவர்களையும் ஏனைய மக்கள்போல இயல்பு வாழ்வு வாழ அனுமதிக்க வேண்டும்.

- ஓளண்யன் -

அதைவிடுத்து மழை வெள்ளம் ஏற்பட ஐ.நா.அமைப்புகளே காரணம் என்று அரசும், அரசு தான் காரணம் என பொது அமைப்புகளும் குடுமிப்பிடிச் சண்டையில் தொடர்ந்தும் ஈடுபட்டால் அடுத்த மழைக்கும் அகப்பட்டு அவலப்படப்போவது அப்பாவி மக்கள்தான். எனவே மக்கள்மீது இனியா வது கரிசனை கொண்டு மாரி காலம் தொடங்கும் முன்னர் அவர் களது மீட்பான வாழ்க்கைக்கு வலியுறுத்தி அரசியல் வேறுபாடுகள், சுயவிருப்பு வெறுப்புகள் என்பவற்றை மறந்து மக்கள் நலனை மனதில்க் கொண்டு குரல் கொர்டுக்க எல்லோரும் முன்வர வேண்டும். அப்போதாவது அரசின் விழிகள் திறந்து மக்களுக்கான நல்வாழ்வு மலரலாம். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவாலி வடக்கு தேற்றா மரத்தடி ஸ்ரீ ஞானவைரவர் ஆலய மஹா கும்பாபிஷேகச் சிறப்புமலர் - 23.08.2009

## கும்பாபிஷேகக் குருவின் ஆசி

நவாலியூர் என்னும் சிறப்புறப்பெயர் கொண்ட இக்கிராமத்தில் கோயில் கொண்டு தம்மை அண்டியவர்களின் துயர் துடைத்து அருள்சுரந்து வீற்றிருக்கும் தேற்றாமரத்தடி ஸ்ரீஞான வைரவப் பெருமானுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் கும்பாபிஷேகம் நிகழ்வது சாலச்சிறந்தது.

இந்த ஆலயத்தைச் சேர்ந்தவர்களுக்கும் அடியவர்களுக்கும் ஊர்மக்களுக்கும் சிறந்த வாழ்வு, குறைவற்ற செல்வம், நிம்மதியான நிலை கிடைக்கவேண்டுமென்று பிரார்த்தித்து ஆசி கூறி விடைபெறுகின்றேன்.

**பிரம்மஸ்ரீ ச.சி. பாலசண்முக குருக்கள்,**
கட்டுடை.

## அந்நியர் ஆட்சிக்காலத்தில் எமது பண்பாட்டினைக் காத்த வைரவர் வழிபாடு என்றும் சிறப்புடைத்து



யாழ்ப்பாணத்து சைவ பண்பாட்டின் உயிர்ப்பிலும் இருப்பிலும் வைரவப்பெருமான் வழிபாட்டின் இடம் குறிப்பிடத்தக்கது. அந்நியராட்சிக் காலத்து சுயபண்பாட்டினைக் காத்த பண்பாட்டின் தெய்வமாக வைரவ வழிபாட்டின் இன்றைய சமூக பண்பாட்டியல் ஆய்வுகள் பதிவு செய்கின்றன.

மேன்மையான இந்த பண்பாட்டு வரலாற்றில் இன்று நவாலி தேற்றா மரத்தடியில் அமர்ந்தருளும் ஞானவைரவர் ஆலயம் மகாகும்பாபிஷேகம் காணும் செய்தி மனதுக்கு மகிழ்ச்சியும் நிறைவும் தருகின்றது.

சூழமைவின் இடர்களையெல்லாம் தாண்டி அழகிய நாளையைப் படைக்கும் எங்கள் பணி பிடை வைரவப் பெருமான் துணை நிற்க பக்தியுடன் அவரை இறைஞ்சுவோம்.

ஆலயத்திருப்பணியில் முன்னின்று உழைக்கும் அறங்காவலரும், இளைப்பாறிய இலங்கை வங்கி உதவி முகாமையாளருமான திரு.இராஜேஸ்வரன் அவர்களின் அயராப்பணியைப் போற்றுவோம்.

அவனருளாலே அவன் தாள் வணங்கி
ஆற்றல் பெருக்கிடுவோம்
ஆற்றலினாலே அனைவர்க்கும் வாழ்வெனும்
அழகினைப் படைத்திடுவோம்

**பேராசிரியர் நாகுலிங்கம் சண்முகலிங்கன்,**
துணை வேந்தர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.



விரோதி வருஷம் ஆவணி மாதம் 7 ஆம் திகதி (23.08.2009) ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 6 மணிக்கு கிரியைகள் ஆரம்பமாகி காலை 7 மணி 52 நிமிடம் தொடக்கம் 9 மணி 21 நிமிடம் வரை நிகழும் கன்னி லக்கின சுப நேரத்தில் கும்பாபிஷேகம் நடைபெறும். கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து வைரவப் பெருமானுக்கு சகஸ்ரநாம (1008) அர்ச்சனையும் நடைபெற்று, விஷேச பூசையைத் தொடர்ந்து மகேஸ்வரப் பூசையும் (அன்னதானம்) இடம்பெறும். கும்[illegible]ஷேக கிரியைகள் யாவும் பிரம்மஸ்ரீ க.ச .பாலசண்முகக் குருக்கள் (கட்டுடை) தலைமையில் நடைபெறும்.

பிரமன் தன் சிரமரிந்த பெரியோய் போற்றி
பெண்ணுருவோடு ஆணுருவாய் நின்றாய் போற்றி
கரநான்கும் முக்கண்ணும் உடையாய் போற்றி
காதலிப்பார்க் காற்ற எளியாய் போற்றி
அருமந்த தேவர்க்கு அரசே போற்றி
அன்று அரக்கன் அஞ்ஞானகு தோளும் தாளும்
சிரதெரித்த சேவடியாய் போற்றி போற்றி
திருமூலட்டானனே போற்றி போற்றி

சங்கரன்கான் சங்கரமாற்கு அருள்செய் தான்கான்
தருணேந்து சேகரன்கான் தலைவன் தான்கான்
அங்கமலத் தயன்சிரங்கள் ஐந்தில் ஒன்றை
அறுத்தவன் கான்
அணிபொழில் சூழ் ஐயாற்றான் கான்
எங்கள் பெருமான் கான் என் இடர்கள் போக
அருள்செய்யு மிறைவன் கான் இமையோ ரேத்தும்
செங்கமல வயல் புடைசூழ் திருவாரூரிற்
திருமூலட்டானத்தெம் செல்வன் தானே

பரமனை மதித்திடாப் பங்கையாசனன்
ஒருதலை கிள்ளியே ஒளித்த வானவர்
குருதியும் அகந்தையும் கொண்டு தண்டமும்
புரிதரு வடுகரைப் போற்றி செய்குவாம்.

## அனைத்துச் சிறப்பும் பெருகட்டும்



"கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்ற முதுமொழிக்கிணங்க, எமது யாழ். மண்ணில் மக்கள் வாழும் கிராமங்கள் அனைத்திலும் கோயில்களை அமைத்து, குலதெய்வங்களை வழிபட்டுவரும் பாரம்பரியம் சிறப்புறப் பேணப்பட்டு வருகின்றது.

இந்த வகையில் நவாலி வடக்கு, தேற்றாமரத்தடி ஸ்ரீஞானவைரவர் கோயில், அவ்வூர் வாழ் மக்களால் பரம்பரை பரம்பரையாய்ப் பேணப்பட்டு வருகின்றது.

ஸ்ரீஞானவைரவப் பெருமானினால் அருள்பாலிக்கப்பட்டு வரும் அவ்வூர் மக்கள், தம் பெருமானின் கோயிலைப் புனரமைத்து, மகா கும்பாபிஷேகம் செய்யத் திருவுளம் கொண்ட எண்ணம் இன்று அகிலமெலாம் கொண்டாடும் ஆவணிச் சதுர்த்தி நாளில் நிறைவேறுகின்றது.

நவாலி வடக்கு, தேற்றா மரத்தடி ஞானவைரவர் கோயில் மகா கும்பாபிஷேகம் மங்கல்கரமாய் நிகழும் இந்நாளின் நிகழ்வுகள் அனைத்தும் சிறப்புற நிகழ்ந்திட எல்லாம்வல்ல வைரவப் பெருமானை வணங்கி வாழ்த்துகின்றேன்.

**க.கணேஷ்,**
அரசாங்க அதிபர்/ மாவட்டச் செயலர்,
யாழ்.மாவட்டம்.

## கருணையும் அன்பும் நிறைந்த இறைவா!



எல்லா உயிர்களிலும் ஊடுவிருவி, எங்கும் நிறைந்த சர்வவல்லமையும் பொருந்திய சர்வ ஞான சச்சிதானந்தப் பரம்பொருளாம் உம்மை வணங்கிப் பணிகின்றோம்.

மெய்ப்பொருள் காணும் உள்ளம், சம நோக்கு நிறைபெற்ற மனம், சிரத்தை, பக்தி, ஞானம் இவற்றை எங்களுக்கு அருள்வீராக!

ஆணவம், காமம், பேராசை, கோபம், வெறுப்பு இவற்றிலிருந்து எங்களை விடுவித்து எங்கள் உள்ளங்களில் தூய தெய்வீகக் குணங்களை நிரப்புவீராக!

எல்லா உருவங்களிலும் பெயர்களிலும்
உம்மையே தரிசித்து சேவைசெய்வோமாக!
எந்தநேரமும் உம்மையே சிந்திப்போமாக!
என்றென்றும் உமது புகழைப் பாடுவோமாக!
எப்பொழுதும் எங்கள் நாவினில் உமது திருநாமம் விளங்குக!
என்றும் உம்முன்னே நிலைபெற்று விளங்குவோமாக.

**சிவக்கொழுந்து இராஜேஸ்வரன்,**
பரம்பரை அறங்காவலர்,
தேற்றா மரத்தடி ஸ்ரீ ஞானவைரவர் கோயில்,
நவாலி வடக்கு.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கில் வென்ற அமெரிக்க ஏவுகணை அழிக்கப்பட்ட 'தலிபான்' தலைவர்!

பாகிஸ்தானின் வடமேற்கு எல்லை, அதை ஒட்டியுள்ள ஆப்கானிஸ்தான் பகுதிகளில் பஷ்து, மெஹசூத் போன்ற மலை சாதியினர் வாழ்கின்றனர். அவர்களை தன்னுடைய தீவிரவாதத் தாக்குதல்களுக்குப் பயன்படுத்தி வருகிறது தாலிபன் இயக்கம். அந்த மலைசாதி மக்களில் ஒருவராக, பாகிஸ்தானின் வடமேற்கு எல்லைப் பகுதியில் உள்ள பாணூ கிராமத்தில் 1974 இல் பிறந்தவர் பைதுல்லா மெஹசூத். முஸ்லிம் மதத்தில் தீவிர பற்றுக் கொண்ட மெஹசூத்தை, தலிபான்களின் 'ஷரீயத் சட்ட ஆட்சி' அதிகமாக ஈர்த்தது.

இதே கொள்கையை பாகிஸ்தானிலும் அமுல்படுத்த வடமேற்கு எல்லைப் பகுதியில் பல்வேறு அமைப்புகள் போராடி வந்தன. அவற்றில் 13 அமைப்புகளை ஒன்று சேர்த்து ஒரு படையை உருவாக்கிய மெஹசூத், அதற்கு தலைவர் ஆனார். டிசம்பர் 2007 இல் இதற்கு 'தெஹரீக்-ஏ-தலிபான்-பாகிஸ்தான்' எனப் பெயரும் வைத்தார்.

இந்த அமைப்புக்கு ஆப்கன் தலிபான் தலைவர் முல்லா உமரின் அங்கீகாரம் எளிதாகக் கிடைத்தது. தன்னை எதிர்த்த சுமார் 300 மலை சாதித் தலைவர்களைப் போட்டுத் தள்ளிய மெஹசூத், அல்-கைடா உட்பட பல்வேறு தீவிரவாத அமைப்புகளுடனும் நட்பு வளையத்தை உருவாக்கிக்கொண்டானர்.

2007 இல் பாகிஸ்தானின் சிவப்பு மசூதியை தாக்கி, நூற்றுக்கும் மேற்பட்டவர்களைக் கொன்ற சம்பவம்தான் மெஹசூத்தை உலகுக்கு அறிமுகப்படுத்தியது. அதே வருடம் பாகிஸ்தானின் 300 இராணுவத்தினரை பணயக் கைதிகளாகப் பிடித்து, பாகிஸ்தானையே படபடக்க வைத்தனர். ஒரு கட்டத்தில், 'மெஹசூத் இந்திய அரசின் ஓர் உளவு ஏஜென்ட்' எனவும் ஒரு முறை சந்தேகப்பட்டது பாகிஸ்தான். கடைசியில் மெஹசூத்தைக் கொல்ல, அமெரிக்காவின் உதவியை நாடியது.

இதையடுத்து அமெரிக்க ராணுவம் வஜீரஸ்தான் பகுதியில் நடத்திய தேடுதல் வேட்டைக்குக் கடந்த 5 ஆம் திகதி வெற்றி கிடைத்துள்ளது.

அன்று, தென் வஜீரஸ்தானின் லாதாவுக்கு 15 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள தன் இரண்டாவது மனைவி வீட்டில் சிகிச்சை பெற்றுக் கொண்டிருந்தார் மெஹசூத். அப்போது அங்கே பறந்து வந்த அமெரிக்காவின் ஆள் இல்லா விமானம், ஏவுகணைத் தாக்குதல் நடத்தியது. அதிலிருந்து தப்பி ஓடிய மெஹசூத், அடுத்து வந்த தாக்குதலில் மாட்டிக் கொண்டார். மெஹசூத்தின் உடல் பல துண்டுகளாகச் சிதற, உடன் இருந்த அவருடைய இரண்டாவது மனைவி மற்றும் ஏழு பாதுகாவலர்களும் மடிந்தனர். இந்தத் தகவலை இரண்டு நாட்களுக்குப் பின் தலிபானின் கொமாண்டர் கைய் பயத்துல்லா அமெரிக்கச் செய்தி நிறுவனத்திடம் உறுதி செய்தார்.

"ஆரம்பத்தில் வடமேற்கு எல்லைப் பகுதியில் ஷரீயத் ஆட்சி கேட்டுக் கிளம்பிய புரட்சியை அடக்க பாகிஸ்தான் இராணுவத்தின் கொமாண்டராக இருந்தவர் மெஹசூத். இதற்காக, 'அமைதி வீரன்' என பாகிஸ்தான் அதிபரால் பாராட்டப்பட்டவர். பெனாசிர் பூட்டோ, ஷரீயத் சட்டத்துக்கு எதிரானவர் என்பதால், அவரை மெஹசூத் கொலை செய்தார். அமெரிக்காவுக்குப் புலம்பெயர்ந்த மலை சாதியினர்தான் மெஹசூத்தின் இருப்பிடத்தை அமெரிக்காவிடம் காட்டிக்கொடுத்தனர்!" என பாகிஸ்தான் இணைய தளங்கள் கூறுகின்றன.



அடுத்து, மெஹசூத்தின் இடத்துக்கு யார் வருவது என போட்டியாகி... அந்த அமைப்பல் உள்ளவர்களே, ஒருவருக்கொருவர் சுட்டுக் கொண்டு சாக... யார் தலைவராக வந்தாலும் அவருக்கென ஆள் இல்லா ஏவுகணையை ஆயத்தமாக வைத்துக் காத்திருக்கிறது அமெரிக்கா! ★

## பின்வாங்குதல் வேண்டாம்

அவர்களுடைய சீடர் பலர் இதைக்கேட்டு "இதை ஏற்றுக் கொள்வது கடினம்; இப் பேச்சை இன்னும் கேட்டுக்கொண்டிருக்க முடியுமா?" என்று பேசிக் கொண்டனர். (யோவா 6:60)

இறைமகன் இயேசுவோடு ஒன்றாக பயணித்த சீடர்கள், அவர் தண்ணீரை திராட்சை இரசமாக மாற்றியபோது அதனை பருகி சுவை கண்ட சீடர்கள், அவர் பலவிதமான நோயாளர்களைச் சுகப்படுத்திய போது அதனை நேரில் பார்த்து வியந்த சீடர்கள், அவர் ஐந்து அப்பங்களையும் இரண்டு மீன்களையும் எடுத்து ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட மக்களுக்கு உண்ணக் கொடுத்த போது தாமும் அதனை உண்டு பசி தீர்த்த சீடர்கள் பின்னர் அவரது போதனையைக் கேட்டபொழுது மனக்குழப்பமடைந்து முணுமுணுக்கின்றார்கள்.

இறைமகன் இயேசுவின் அற்புதங்களைக் கண்டு விசுவசித்த சீடர்களால் அவரது போதனையை ஏன் ஏற்றுக்கொள்ள முடியவில்லை? போதனைகளை ஏற்றுக்கொள்ளுகின்ற போது அதன்படி வாழ வேண்டும். அப்படி வாழவேண்டுமாக இருந்தால் தமது பழைய வாழ்க்கை முறைகளை முழுமையாக கைவிட்டு புதுப் படைப்பாக வேண்டும். அதற்கு அவர்கள் தயாராகவில்லை. இதனால் தான் "கடினமான உபதேசம்" என்று கூறி பின்வாங்குகின்றார்கள்.




இதேநிலையில்தான் கிறிஸ்தவர்களாகிய நாமும் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். இறைமகன் இயேசு எமது மன்றாட்டுக்களை ஏற்று எமக்கு உதவி செய்யவேண்டும். என்று விரும்புகின்றோமே தவிர அவர் எமக்கிட்ட கட்டளைகளை ஏற்று வாழ்வதில் பின்வாங்குகின்றோம்.

கிறிஸ்தவ வாழ்க்கை என்பது சொகுசான, உல்லாசமான பயணமல்ல, அது சோதனை மிக்க கடினமான பயணத்தைக் கொண்டது. இப்பயணத்தை மேற்கொள்ள விரும்வோர் தமது பாவ வாழ்வை உதறித் தள்ளிவிட்டு தன்னலம் துறந்து இறைமகன் கற்பித்த அன்பு, பகிர்வு, மன்னிப்பு ஆகிய நற்காரியங்களை தமது மார்புக் கவசமாகத் தரித்து புதுப்படைப்பாக பயணிக்கின்ற போது தான் உண்மையான கிறிஸ்தவ வாழ்வின் அர்த்தத்தை நம்மால் உணர்ந்து கொள்ள முடியும்.

க.அருள்நேசன், குருநகர்.

# வடமுனையில் பொருளாதாரத்தை ஊக்குவிப்பதற்காக யாழ்ப்பாணத்தில் கால்பதிக்கின்றது சம்பத் வங்கி

## குடாநாட்டு இளைஞர், யுவதிகளுக்கு வேலை வாய்ப்பையும் அது வழங்குகின்றது

ஒரு உண்மையான தேசிய நிறுவனம் என்ற தனது நிலையமைப்பிற்கு அமைவாக சம்பத் வங்கியானது சிவில் யுத்தம் முடிவிற்கு வந்த பின்னர் தனது வங்கிச்சேவையினை முதன் முதலிலே அப்பிரதேசத்திலே ஆரம்பித்து வைக்கின்ற வங்கி என்ற பெருமையுடன் யாழ்ப்பாணத்தினை எட்டியுள்ளது. மக்களே மகத்தான சொத்தும் மகத்தான தூதுவர்களாகவும் விளங்குகின்றனர் என்பதற்கு இணங்க "வடக்கின் வசந்தம்" என்ற அரசாங்கத்தினது அபிவிருத்தித் திட்டத்தின் கீழே வடக்கின் அபிவிருத்திக்கு அர்த்தமுள்ள வழியிலே பங்களிப்பு நல்குவதற்காக தனது புதிய கிளைக்கு யாழ்ப்பாணத்திலே வசிக்கின்ற தகைமையுடையவர்களையே சேர்த்துக்கொள்வதற்கு முடிவு செய்துள்ளது.

நிதியியல் பிரிவிலே விசேடத்துவத்துடன் வியாபார நிர்வாகமானிப் பட்டதாரியான தெரிவு செய்யப்பட்ட ஒரு விண்ணப்பதாரியான சுகந்தன், அப்புதிய தொழிலானது தன்னைப் பொறுத்தவரையிலே தனது நிரந்தர தொழிலாக அமையவுள்ளது என்றும் இந்த வேலைவாய்ப்புத் தொடர்பாக தான் தனது நண்பர் மூலமாகவே அறிந்துகொண்டதாகவும் குறிப்பிட்டார். 'ஆரம்பகட்ட நேர்முகப் பரீட்சையிலே பெருந்திரளானோர் கலந்துகொண்டிருந்தமையினால் நான் சிறிது கலவரப்பட்டேன். ஆனால் நான் தெரிவு செய்யப்படுவேன் என்ற தன்னம்பிக்கை எனக்குள் இருந்ததுடன் சம்பத் வங்கி அணியிலே ஒரு உறுப்பினராக இருப்பதனையிட்டு பெருமையடைகின்றேன். உள்ளகப் பயிற்சியின் ஒரு அங்கமாக நாங்கள் தெற்கிலுள்ள அனைத்துக் கிளைகளுக்கும் அழைத்துச் செல்லப்பட்டதுடன், வங்கித் தொகுதியின் உட்கட்டமைப்பினை அறிந்து உண்மையிலேயே வியப்படைந்தேன். தொழில்நுட்பவியல் திறன், புத்தாக்கத்தினை கருதுகையிலே வடக்கிலே நிச்சயமாக சம்பத்வங்கிக்கு நிகராக எந்தப் போட்டியும் கிடையாது" என்று தொடர்ந்தும் கூறினார்.

உள்ளூர் நிதியியல் தொழிற்துறையிலேயே வேலைவாய்ப்பினைத் தேடிக்கொள்ள வேண்டும் என்ற பிரதீப்பின் கனவானது வங்கியிலே அவரது விண்ணப்பம் வெற்றிகரமாக ஏற்றுக்கொள்ளப்பட்டதன் மூலமாக நனவாகியுள்ளது. கணக்கியலிலே விசேடத்துவத்துடன் ஒரு முதல் வகுப்பு வர்த்தகமானிப் பட்டதாரியான அவர் ஒரு முன்னோடி நிதியியல் நிறுவனம் என்பதனால் வங்கிக்கு தனது விண்ணப்பத்தினை அனுப்பிவைக்கும் போது மிகவும் ஊக்கமடைந்தார். "சம்பத் வங்கியானது மிக விரைவாக வளர்ச்சியடைந்து வருகின்ற - எதிர்காலத்தினைப் பற்றிய சிறந்த கண்ணோட்டத்துடனான வங்கியாகும். அந்தக் காரணத்தினாலேயே யுத்தத்திற்குப் பின்னர் இப் பிராந்தியத்திற்குள் நுழைந்து கொண்ட முதலாவது வங்கியாகக் காணப்படுகின்றது. புத்தாக்கம் மற்றும் புரட்சி ஆகியவற்றின் மீதான தெளிவான நோக்கத்திற்கு மத்தியிலும் ஒரு வலிமையான பாரம்பரியம் மற்றும் கலாசாரத்தினை அவர்கள் வலியுறுத்துவதனை நான் மிகவும் நேசிக்கின்றேன். சம்பத் வங்கியானது வடக்கினுள் நுழைந்து கொண்டுள்ளதன் மூலமாக அங்கு போட்டித்திறன் அதிகரிக்கும் என நான் நிச்சயமாகக் கருதுவதுடன் இதன் மூலமாக அங்குள்ள ஏனைய வங்கிகளும் தமது சேவைகளைச் சிறப்பாக வழங்கப்படும் நிலைக்குத் தள்ளப்படும். இந்த வெற்றியான வியாபார உருவாக்கத்திலே அங்கம் வகிப்பதற்கு நான் மிகுந்த ஆவலாக உள்ளேன்" என்று குறிப்பிட்டார்.

ஒரு கவனமான முற்றுமுழுதான நேர்முகப் பரீட்சைத் தொழிற்பாட்டுக் கட்டமைப்பின் கீழே 2,000 இற்கும் மேற்பட்ட விண்ணப்பதாரிகளிலிருந்து யாழ்ப்பாணத்திலுள்ள வங்கியினது முதலாவது கிளைக்காக 27 உறுப்பினர்களைத் தெரிவுசெய்ததுடன், இம் முதற் தொகுதியினர் சம்பத் வங்கியினைப் பொறுத்தவரையிலே பல வழிகளிலே முதன்மை என்பதனையும் நிரூபித்துள்ளனர். "முன்னோடி நேர்முகப் பரீட்சைகள் முதல் திறமைகாண் பரீட்சைகள், புத்திகூர்மைப் பரீட்சைகள் மற்றும் நிர்வாக வடிவமைப்புப் பரீட்சைகள்வரை கிட்டத்தட்ட அனைத்து விண்ணப்பதாரிகளுக்குமே ஒரு புதுமையான அனுபவம் கிடைக்கப்பெற்றதுடன், நிராகரிக்கப்பட்ட விண்ணப்பதாரிகள் தங்களுக்குக் கிடைக்கப்பெற்ற நேர்முகப் பரீட்சை அனுபவத்தினையிட்டு எமக்கு நன்றியையும் தெரிவித்தனர். தெரிவு செய்யப்பட்ட 27 பேரில் 16 பேர் பட்டதாரிகளாக உள்ளதுடன், முதற்தடவையாக எமது வங்கியமைப்பிலே அதிக எண்ணிக்கையிலான பட்டதாரிகள் தொகுதியாக இது அமையப்பெறுகின்றது. அவர்களில் பலர் பல்வேறு துறைகளில் முதல் வகுப்பு பட்டங்களைக் கொண்டுள்ளனர். இத்தொகுதியானது சமத்துவமான பால் நிலையமைப்பினையும் கொண்டுள்ளதுடன், 17 பெண்களையும், 10 ஆண்களையும் அது உள்ளடக்கியுள்ளது. எமது [illegible] மிக்க வேறுபட்ட [illegible] மாக உயர் தகைமைவாய்ந்த ஊழியர்களை வேலைக்கமர்த்தியமையினையிட்டு நாம் மிகுந்த மகிழ்ச்சியடைவதுடன், எதிர்காலத்திலே அவர்கள் ஒரு பெறுமதிமிக்க சொத்தாக விளங்குவர் என்பதனையும் நிரூபிப்பர் என்று சம்பத் வங்கியின் மனிதவள அபிவிருத்தியின் உதவிப் பொது முகாமையாளரான நீல் போஹகலந்த குறிப்பிட்டார்.

சிறப்பாகக் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைத் தொழிற்பாடானது மிகவும் நேர்மையான வழியிலே இடம்பெற்றதுடன், அது ஒரு புதிய அனுபவமாகவும் இருந்தது என்று விளக்கிய மற்றுமொரு தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரியான லக்ஸாயினி அண்மையிலேயே உயிரியல் துறையிலே தனது உயர்தரப் பரீட்சையினைப் பூர்த்திசெய்திருந்ததுடன், தற்போது தனது தொழில் வாழ்க்கைக்காக வங்கிச்சேவையினைத் தெரிவுசெய்துள்ளார். வங்கியினாலே அமுல்படுத்தப்பட்டிருந்த "சிநேகபூர்வ தொகுதிமுறை" ஆனது கொழும்பிலே இடம்பெற்ற தமது அறிமுக நிகழ்ச்சித் திட்டத்தின் போது புதிதாக சேர்க்கப்பட்டவர்களுக்கு சிறப்பாக பரீட்சயமாகிக் கொள்ளும் வாய்ப்பிற்கும் உதவியது என்றும் குறிப்பிட்டார். "எம் ஒருவருக்கும் ஒரு நண்பர் என்ற ரீதியிலே ஒதுக்கப்பட்டு பழைய மற்றும் புதிய ஊழியர்களுக்கிடையிலே இடைத்தொடர்பினைக் கட்டியெழுப்புதல், சிறப்பான புரிந்துணர்வினை வளர்த்தெடுத்தல் போன்றன ஊக்குவிக்கப்பட்டன. வங்கியினைப் பற்றி சிறப்பான புரிந்துணர்வினை ஏற்படுத்திக் கொள்வதற்கு அவர்கள் எமக்கு உதவினர். அதனது செயற்பாடுகளும், கலாசாரமும் எம்மை ஊக்குவித்ததற்கு அப்பாலே எமது பணியினைப் பற்றிச் சிறப்பாகப் புரிந்துகொள்வதற்கும் உதவின. எமக்கென ஒதுக்கப்பட்டிருந்த நண்பர்கள் எமது குடும்ப அங்கத்தவர்கள் போன்றே பழகினர்" என்றும் குறிப்பிட்டார்.

நுண்கலைப்பிரிவிலே கலை மற்றும் வடிவமைப்புப் பட்டதாரியான வத்சலா மற்றும் விவசாயப் பிரிவிலே முதல் வகுப்பு விஞ்ஞானமானிப் பட்டதாரியான சிந்துஜா ஆகிய இரு புதிய ஊழியர்களும், சம்பத் வங்கியானது யாழ்ப்பாண தீபகற்பத்தினுள் நுழைந்து கொள்வதன் மூலமாக அப் பிரதேசத்திற்கும் அங்குள்ள மக்களுக்கும் குறிப்பிடத்தக்க அளவிலே பயனளிக்கும் என்று தமது எண்ணத்தினை வெளிப்படுத்தினர். "யாழ்ப்பாணத்திலே நன்கு அபிவிருத்தியடைந்த உட்கட்டமைப்பு குறைவாகவே உள்ளது. அதற்கென குறிப்பாக வடிவமைக்கப்பட்ட கடன் வசதிகள் மூலமாக விவசாய மற்றும் சுற்றுச்சூழல் துறைகள் அபிவிருத்தியடைவதற்கு உதவியளிப்பதுடன், யாழ்ப்பாணத்தை அபிவிருத்தி செய்யும் வகையிலே சம்பத் வங்கிக்கு எமது பிரதேசத்திலே உள்ள நிபுணத்துவத்தினை வழங்கி ஆதரவளிப்பதற்காக நாம் ஆர்வத்துடன் உள்ளோம்" என்றும் கூறினர்.

## புரட்டஸ்தாந்து மதம் இலங்கையில் பரவத் தொடங்கியது

**1658 ஒகஸ்ட் 29**

1617ஆம் ஆண்டு சங்கிலியனிடமிருந்து யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய போர்த்துக்கீசர் 1658ஆம் ஆண்டுவரை ஆட்சி செய்தனர். 1658ஆம் ஆண்டு ஒல்லாந்தர் போர்த்துக்கீசரிடமிருந்து யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றினர்.

ஒல்லாந்தரின் வருகையைத் தொடர்ந்து புரட்டஸ்தாந்து மதம் இலங்கையில் பரவத் தொடங்கியது. 1658ஆம் ஆண்டு ஒகஸ்ட் 29ஆம் திகதி பிலிப் பால்டியஸ் பாதிரியார் புரட்டஸ்தாந்து மதத்தை யாழ்ப்பாணத்தில் அறிமுகம் செய்தார். புரட்டஸ்தாந்து மதம் சீர்திருந்திய சமயம் (Reform Religion) எனவும் அழைக்கப்படுகிறது.

**இன்றும் நினைவில் கொள்ள.... அன்றைய ஞாபகம் இங்கே....!**

போர்த்துக்கீசர் காலத்தில் அமைக்கப்பட்ட கத்தோலிக்க தேவாலயங்கள் புரட்டஸ்தாந்து தேவாலயங்களாக மாற்றப்பட்டன. தமிழிலும் ஒல்லாந்த மொழியிலும் பிரசங்கங்கள் நடைபெற்றன. மதப் பிரசாரத்திற்கு வரும் பாதிரிமாருக்குத் தேவையான உணவு முதலியவற்றை அந்தந்தக் கிராம மக்களே வழங்கவேண்டுமென உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது. பால்டியஸ் பாதிரியாரின் [illegible] ஒல்லாந்தர் கால வரலாற்றை எமது கண்முன்னே கொண்டு வந்து நிறுத்துகின்றன. பால்டியஸ் பாதிரியாருக்கு யாழ்ப்பாணச் சமூகம் என்றென்றும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளது.

தாண்டவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# VACANCY

## Post of FIELD OFFICER (Contract Basis)

Applications are invited from candidates for the post of field officer.

Applicant should be able to communicate in English and sumit reports independently and posses working knowledge on Gender and HIV/AIDS.

Eligible candidates are requested to send their applications and bio - data to the address given below.

Closing date of Application: 30th August 2009

Minimum Qualification: Completed G.C.E A/L
Experience: Minimum 03 years in the relevant field.

Salary: Negotiable

Female candidates are encouraged to apply.

Chairman,
The Refugees Rehabilitation Organization (TRRO),
106, 4th Cross Street, Jaffna.
Telephone No.: 021 2222416

(C/560418)

## விற்பனைக்கு

நிசான் பிக்அப் 53- XXXX விற்பனைக்குண்டு. விலை 850 000
தொடர்பு:- 0777 570124 (88114)

## டயானா பிளாஸ்ரிக் தொழிலகம்

சகல விதமான மோட்டார் சைக்கிள் மற்றும் வாகனங்களின் உடைந்த பிளாஸ்ரிக்கிலான பொருள்கள் அனைத்தும் மீள் திருத்தம் செய்து கொடுக்கப்படும்.
இல.6, கனகசபைலேன், சிவலிங்கப்புளியடி, K.K.S றோட், யாழ். தொ.பே.: 021 2228680

## வாடகைக்கு அறைகள்

மாணவர்களுக்கு மட்டும் யாழ்.மருத்துவ பீடத்துக்கு முன்பாக உணவுவசதிகளுடன் அறைகள் உண்டு.

தொடர்பு:-
5/6, கருவப்புலம் லேன்,
ஆடியபாதம் றோட்,
கொக்குவில்.
T.P: 0771877035

(88151)

## APPLICATION FOR TRAINING OF PSYCHOLOGICAL COUNSELLORS

The applications are called for training of counsellors. This is a one year, week - end (Saturday & Sunday) course that consists of 450 hours. The applicants should have the following prerequisites to apply for this course.

1. Knowledge of English as to read, write and understand.
2. A pass in Advanced Level
3. Age between 25 and 45 years.
4. Interested in social Activities.

The applicants will have to buy the special application form at our office and submit them before the 6th of September. Only 25 applicants will be selected to follow this training.

For further details please contact:

"AHAVOLI"
INSTITUTE OF COUNSELLING PSYCHOLOGY
Affiliated to National University of Ireland, Galway,
St.Patrick's Road, Jaffna.
Contact No.: 021-222-2856

(87996)

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
18 . 06 . 1937

உதிர்வு
28 . 08 . 2006

### திருமதி கோபாலபிள்ளை பரமேஸ்வரி

திதி: 23.08.2009

வையகத்தில் வாழ்ந்த வானுறை தெய்வமே!
அன்பின் வடிவமே!
நீங்கள் எம்மைப் பிரிந்து ஆண்டுகள் மூன்றாயினும்
நீங்கா நினைவுகளாய் நிலைத்து
நிற்கும் நினைவுகள்.

உங்கள் ஆத்ம சாந்திக்காய்ப் பிரார்த்திக்கும்:
கணவர், மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
சகோதரர்கள்.

இல.:15, சங்கிலியன் வீதி,
நல்லூர்.
(88038)

## மாங்கல்யா திருமண சேவை

இந்து, கிறிஸ்தவ மணமக்கள் எம்மிடம் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் இருபாலாரும் உண்டு. திருப்தியான, நம்பிக்கையான, துரிதமான சேவை. குறிப்புகள் பல பாகங்களிலும் இருந்து கிடைத்த வண்ணமே உள்ளன. தேர்விற்கு சகல நாள்களிலும் ஒரு மணிக்குப் பின் தொடர்பு கொள்ளலாம்.

ஆ.திருலிங்கம்
இல.90, சட்டநாதர் கோயில் வீதி, நல்லூர் வடக்கு.
தொ.பே: 021 222 6043, மோ/இல: 077 1386846

(87866)


## சந்நிதியான் ஆச்சிரமத்தில் ஆன்மீக நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஓக.23

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய வருடாந்தப் பெருந்திருவிழாவை முன்னிட்டு ஆலயச் சுற்றாடலில் உள்ள சந்நிதியான் ஆச்சிரமத்தில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள ஆன்மீக நிகழ்வு வரிசையில் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு ''வேல் வெற்றிவேல்'' என்னும் தலைப்பில் சொற்பொழிவு இடம்பெறும்.

இச்சொற்பொழிவை அகில இலங்கை சைவப்புலவர் சங்கச் செயலாளரான சைவப் புலவர் செ.கந்த சத்தியதாசன் நிகழ்த்துவார்.

நாளை திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு 'தீராத விளையாட்டுப்பிள்ளை' என்னும் தலைப்பில் சைவப்புலவர் க.நித்தியதசீதரனின் சிறப்புச் சொற்பொழிவு இடம் பெறும். நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை ஆசிரியர் கே.கைலைநாதன் வழங்கும் 'பிரணவம் உரைத்தோன்' என்னும் தலைப்பில் சொற்பொழிவு இடம்பெறவுள்ளது. (201)


## 6ஆம் ஆண்டு நினைவலைகள்

தாயின் மடியில் சேயாக
29 ★ 01 ★ 1984



லொறிப் பாதகனின் அழிப்பில்
30 ★ 08 ★ 2003

### மகாதேவா தனரூபன் (செல்வா)

திதி: திருதியை

அன்பானவனே பாசமிகு சகோதரனே
நீ எங்களை விட்டுப் பிரிந்து ஆண்டுகள்
ஆறு ஆனாலும் ஆறவில்லை எம் துயரம்
செல்வமே எங்களை ஆறாத் துயரில்
ஆழ்த்திவிட்டு மீளாத்துயில் கொண்டு
விட்டாய் உன்னை நினைத்து நாம்
துடிக்கிறோம் எப்போது ஐயா
நீ எங்களிடம் வருவாய்
உன் புதிய வரவுக்காகக் காத்திருக்கும்...

கலைவாணி வீதி,
கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில். (88128)

உன் பிரிவால் வாடும்:
அப்பா, சகோதரர்கள், அண்ணா
தனராஜ் (இ.போ.சபை காரைநகர் சாலை)

## உடுப்பிட்டி காட்டுத் தோட்டம் ஞானவைரவர் ஆலய மகாகும்பாபிஷேகம்

மெய்யடியார்களே!

ஸ்வஸ்தி நிகழும் மங்களகரமான விரோதி வருஷம் ஆவணித்திங்கள் 7ஆம் நாள் (23.08.2009). ஞாயிற்றுக்கிழமை காலை 7.52 முதல் 9.27மணி மணிவரையுள்ள சுபமுகூர்த்த வேளையில் ஸ்ரீ ஞானவைரவப் பெருமானுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் மகாகும்பாபிஷேகம் நடைபெறத் திருவருள் கூடியுள்ளது.

அடியார்கள் கலந்து கொண்டு எம்பெருமானின் இஷ்ட சித்திகளைப் பெற்று அன்று நடைபெறும் அன்னதானத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு பக்த அடியார்களை அன்புடன் அழைக்கின்றோம்.

சந்தை வீதி,
உடுப்பிட்டி. (88126)

பொன்.சோமசுந்தரம்
குடும்பத்தினர்

## HIGHER STUDIES IN INDIA, BANGLADESH, SINGAPORE & UK

◎ MEDICINE ◎ ENGINEERING
◎ MANAGEMENT ◎ LIFE SCIENCE

PhD, MSc, MBA, MBBS, Advance Diploma, Diploma, Para Medical, Pre-University

O/L & A/L Students Can Apply
Easy Payment Scheme / Loan Facility Available

Interviews at

27th August 2009 at 10.00 a.m. to 2.00 p.m.
BMICH Colombo 07.
Room No. (2G-03)

Inquires: Institute Of Vocational Studies (Pvt) Ltd.
No. 476, Kandy Road, Dalugama, Kelaniya, Sri Lanka.
Tel: 0777444500 / 0773401290 / 5757276 / 4925640 / 2910323
E-mail: ivsltd@hotmail.com Web: www.ivstudies.com

Branch Offices:

NEW LEXICON - KURUNEGALA - Thilak Rajakaruna (Chemistry Lecture) (Saman 071-8218967)
MONTANA - GAMPAHA - Mahinda Bandaranayaka (Bio Science Lecture)
SASIP - NUGEGODA - Amith Pussella (Physics Lecture)
SCIENCE CENTER - RATNAPURA - Nihal Devapriya (Chemistry Lecture)(Rasika 072-2520570)
SIPARA - GALLE /SIPYANA - MATARA - Udayakantha Kariyawasam (Economic Lecture) (091-2223869 after 6.00p.m.)
SHILPA SHALIKA - AMBALANGODA - I. V. L. Jayaweera (Lalith sir 071-8282669)
TRINCOMALEE - No. 155, Dockyard Rd, Trincomalee. - Mr. Pahalavan (071-8034803)
JAFFNA - Family Medicine, 125, Main Street, Jaffna. - Mr. S. P. Sivathasan (071-4471655)

Immediate Departure


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன் 'சிறுவர்கதிர்' பரிசளிப்பு நிகழ்வின் போது.....

உதயன் 'சிறுவர்கதிர்' பரிசளிப்பு நிகழ்வு கடந்த 12.07.2009 ஞாயிற்றுக்கிழமையன்று உதயன் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் ர.ஸகிஷ்ணா, ச.விமலா, ஜெ.துவாரகா, தி.சுதன், தி.நிரோஷன், ஓ.நிதுரஷன், ஆகியோருக்கு யாழ்.கல்வி வலய ஆரம்பப் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் ந.விமலநாதன் பரிசில் வழங்குவதைப் படங்களில் காணலாம். [படங்கள்:லக்ஸ்மன்]



## உங்களுக்கும் பரிசில்கள்

### விடை தெரியுமா? -28

01. ஹிரோசிமா நகர்மீது அணுகுண்டு வீசப்பட்ட நாள் எது?
02. முதலாவது கிரிக்கெட் போட்டி எப்போது எந்த எந்த அணிகளுக்கிடையே நடைபெற்றது?
03. தேம்ஸ் நதியில் மென் படகு ஓட்டும் போட்டி எப்போது ஆரம்பிக்கப்பட்டது?
04. பின்புறமாக மரத்தில் ஏறக்கூடிய விலங்கு எது?
05. பிரான்ஸ் அரசாங்கத்தால் வழங்கப்படும் அதியுயர் விருதான 'செவாலியர்'விருதினை அண்மையில் பெற்ற யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பெண் கல்வியியலாளரின் பெயர் என்ன?

**விடை தெரியுமா?**

தெரிந்தால் 03.09.2009 இற்கு முன்னர் சரியான விடைகள் அனுப்பும் 6 மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா 150, ரூபா 125 மற்றும் 100 வீதமும் ஏனைய மூவருக்கும் தலா ரூபா 75 வீதமும் பரிசுகள் நூல்களாக வழங்கப்படும்.

### விடை தெரியுமா? -26
**சரியான விடைகள்**

01. 1945 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 6 ஆம் திகதி
02. பில் கிளின்டன்
03. முத்தையா முரளிதரன்
04. வடமராட்சி உடுப்பிட்டி கெருடாவில் பகுதியில்
05. தம்பெலினா

**பரிசுபெறுவோர்**

01. ச.தர்சன், தரம் - 5D, யா/மத்திய கல்லூரி.
02. ஜெ.யதுர்ஷன், தரம் - 8D, வியாபாரி மூலை, பருத்தித்துறை.
03. சா.பவிதா, தரம் - 6, யா/கோண்டாவில் இராமகிருஸ்ண ம.வித்தி.
04. ம.பிரகாசினி, தரம் - 6E, யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.
05. பா.யுகந்தன், புனித பத்திரிசியார் கல்லூரி.
06. ச.கஜருபன், தரம் - 9D, யா/மத்திய கல்லூரி.




மாயக்கிழவிக்கு ஆத்திரம் மேலிட்டது. வெண்ணெய் திரண்டு வரும் நேரத்தில் தாழி உடைந்த கதையாக பலிகொடுக்கும் நேரத்தில் இளவரசர்கள் இருவரும் காணாமல் போனதால் பெரும் குழப்பமடைந்தாள். எனினும் சட்டெனத் தன்னைச் சுதாகரித்துக் கொண்டு மாயக் கண்ணாடியை வெளியே எடுத்தாள்.

"ஏய் மாயக்கண்ணாடியே! அந்த இரண்டு குட்டிச் சாத்தான்களும் எங்கே ஒளிந்திருக்கிறார்கள் என்று காட்டு" என்று கூவினாள். ஆனால் அதற்கிடையில் பலிகொடுக்கும் இடத்திற்கு அண்மையாகவுள்ள சிறு குன்று ஒன்றில் இருந்து ஒலித்த இந்திரவர்மனின் குரல் அவளைத் திடுக்கிட வைத்தது.

"கிழவியே! எங்களைப் பிடிக்க உன்னால் முடியாது" என்று கூறிக்கொண்டே தன் கையில் இருந்த சக்திவாய்ந்த வாளை உயரச் சுழற்றினான் இந்திரவர்மன்.



"அட! அற்பப் பதர்களே! என்னுடைய வசியப் புகையில் இருந்து எப்படித் தப்பினீர்கள்" என்று ஆச்சரியமும் ஆத்திரமும் கலந்து குரலில் கேட்டாள் மந்திரக்கிழவி. அதற்கு பதில் ஒன்றும் கூறாமல் வெறும் சிரிப்பை மட்டுமே உதிர்த்தான் இந்திரவர்மன். உடனே மந்திரக்கிழவி திரும்பவும் தன்னுடைய மாயக்கோலைச் சுழற்றி இளம் பச்சைநிற வசியப் புகையை உண்டுபண்ணி இளவரசர்களை நோக்கி ஏவினாள்.

"கிழவியே! உன்னுடைய மாயப்புகை எங்களை ஒன்றும் செய்யாது. நீ முன்னர் வசியப் புகையை ஏவியபோது நாம் எமது குருநாதரை நினைத்து உச்சரித்த மந்திரங்கள் எம்மைக் காப்பாற்றின. எனவே இப்போதும் எங்களால் உன்னிடமிருந்து இலகுவாகத் தப்பிக்க முடியும்" என்று சிரித்தபடியே கூறினான் சுந்திரவர்மன். [தொடரும்]

## பொது அறிவு

01. தாஜ்மகால் கட்ட அத்திவாரம் போட்ட ஆண்டு?
**1652**
02. தாஜ்மகால் எத்தனை ஆண்டுகளில் கட்டி முடிக்கப்பட்டது?
**21 ஆண்டுகள்**
03. இந்தியாவில் நூலகங்கள் அதிகம் உள்ள மாநிலம் எது?
**கேரளா**
04. இந்தியாவின் முதல் சீக்கிய பிரதமர் யார்?
**மன்மோகன்சிங்**
05. சூரியனைச் சுற்றி எத்தனை வாயு வளையங்கள் உள்ளன?
**4 வாயு வளையங்கள்**
06. இமயமலைத்தொடர் செல்லும் 7 நாடுகளும் எவை?
**1. பாகிஸ்தான் 2. நேபாளம் 3. திபெத் 4. சீனா 5. பர்மா 6. பங்களாதேஷ் 7. இந்தியா.**
07. சதுரங்க விளையாட்டின் நடுவரை எவ்வாறு அழைப்பர்?
**ஆர்பிட்டர்.**

**நா.கீர்த்திகா,** தரம் 7, யா/இணுவில் மத்திய கல்லூரி.

## மாணவர் தூரிகை



ம.கீதாஞ்சலி, தரம் -3 A, யா/சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை.



ஜெ.ஜெகபாலினி, தரம் - 8 F, யா/ இந்து மகளிர் கல்லூரி.



ச.மதுஷன், தரம் -6 A,, யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்.



ம.கோபிராஜ், தரம் -6 B, யா/ ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்.

## அப்பா

அப்பா எங்கள் அப்பா - என்றும்
அன்பு கொண்ட அப்பா
என்னைத் தூக்கி வளர்த்த - மிக
இனிமையான அப்பா
கனவுகள் கொண்ட அப்பா - என்னை
காத்து வரும் அப்பா
மழலைக் கதைகள் கூறி - எனக்கு
மகிழ்வூட்டும் அப்பா
செல்லக் குறும்புகளுடனே - எந்தன்
சிந்தை அள்ளும் அப்பா
எங்கள் அப்பா பாலனை - நான்
என்றென்றும் நேசிப்பேன்.

அ. துலக்சனா,
தரம் -7 A, கண்டுக்குளி மகளிர் கல்லூரி.

## நீங்களும் எழுதலாம்

(தரம் 9 - இற்கு உட்பட்ட மாணவர்கள் மாத்திரம்)

மாணவர்களே!

'சிறுவர் கதிரில்' உங்களின் கதைகள், கட்டுரைகள், கவிதைகள், விடுகதைகள், பொன்மொழிகள், பொது அறிவு விடயங்கள், ஓவியங்கள் போன்ற ஆக்கங்கள் பிரசுரமாக வேண்டுமா? அப்படியானால் கீழுள்ள படிவத்தை பூர்த்தி செய்து, உங்கள் ஆக்கங்களோடு இணைத்து அனுப்பிவையுங்கள். தரமானவை பிரசுரமாகும். அனுப்ப வேண்டிய முகவரி:-

'சிறுவர் கதிர்', உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

மாணவர் பெயர் :-..............................
தரம் :-..............................
பாடசாலை :-..............................
..............................

இத்தோடு இணைக்கப்பட்டுள்ள ஆக்கம், குறித்த மாணவரின் சுய ஆக்கமென சிபார்சு செய்கின்றேன்.

.................. ..............................
திகதி வகுப்பாசிரியர் கையொப்பம்

## விடுகதை சொல்லப்போறோம்...

01. துடிப்பான அண்ணன், இருகுரல் மன்னன், சின்னக்கூண்டுக்குள் சிறைப் பட்டுக் கிடக்கின்றான். அவன் யார்? **இதயம்**
02. எழுந்து விழுந்து தாவும், இரவும் பகலும் கூவும். அது என்ன? **கடல்அலை**
03. சாட்டை போல உருவம், சட்டைமாற்றும் பருவம், நடை பழகாத ஒருவன் படைநடுங்க வருவான். அவன் யார்? **பாம்பு**
04. இடுக்கிலே வாழ்வான், இரவிலே வருவான், உதிரத்தைக் குடிப்பான், உறக்கத்தைக் கெடுப்பான். அவன் யார்? **நுளம்பு**
05. நின்றபடி தூங்குவான், நினைத்தபடி ஓடுவான், சரித்திரத்தில் புகுந்தவன். அவன் யார்? **குதிரை**
06. வீடு தேடி வருவான், விவரம் பல தருபவன், வாய்பேசாச் சின்னவன், வரலாற்றின் சின்னமவன். அவன் யார்? **பத்திரிகை**
07. அடர்ந்த காட்டுக்குள் நுழைவான், அலைந்து திரிந்து அழகுபடுத்துவான். அவன் யார்? **சீப்பு**
08. மண்ணிலே பிறந்து, விண்ணிலே மறையும், வாசனை தந்து நெஞ்சிலே நிறையும். அது என்ன? **ஊதுபத்தி**
09. அண்ணன் கல்வியில் வாங்காதது, தம்பிகடையில் வாங்கியது. அது என்ன? **பட்டம்**
10. இருந்த இடத்தில் இருந்தபடி காலம் காட்டுவாள் அவள் யார்? **நாள்காட்டி**

சி. நிசாந்தன், தரம் -4E, யா/ இந்து ஆரம்பப் பாடசாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனிதா! உன்னை எச்சரிக்கிறேன்!.... என்னைத் தின்னாதே! உனக்கே ஆபத்து....

மனிதா!
ஆதி முதலாய்
பிறப்பு முதல் இறப்பு வரை
உந்தன் வாழ்வு
எந்தன் மடியில்
பின்னிக் கிடக்கிறது.
நீ வாழக் குடியிருப்பும்
குடிப்பதற்குச் சுமும்
என் முற்றமே உனக்கு
உவந்தளிக்கிறது
விருத்தி கண்ட நீ
சாம்ராஜ்ய விஸ்தரிப்புக்காய்
என் பெயரால்
சண்டைகள் செய்யும் போது
உன் குருதி வெள்ளம்
என் உடலை நனைக்க
மனமும் நடுங்குகிறது.
எண்ணிக்கை இல்லாமல்
உன் வர்க்கம்
விழுகின்ற போது
எரிக்கவும் புதைக்கவும்
என் மடியே உனக்கு
இடம் தருகிறது.
அது போக....
என் செந்நீரைப்
பாலாக உனக்கு(ப்)
பருகத் தரும் போது
பரவசம் அடைந்தேன்.
என் கண்ணீரை நீ பாய்ச்சி
பயிர் செய்யும் போது
பரவாயில்லையென(ச்)
சமாதானம் அடைந்தேன்.
ஆனால்.....
வடிவம் மாறி
என் செந்நீரைக் குடிக்கவென்று
நீ குடியிருந்த வயிற்றை
குத்த நினைக்கும் போது
விக்கித்துப் போகின்றேன் - நான்
வெள்ளை நிறமாய்
இருக்கின்ற தோஷத்தால்
இருந்து வளர்ந்து
உதைத்து எழுந்த
மடியென்றும் எண்ணாமல்
உப்புத் தரவையென
இழக்காரம் பேசி நீ
கை விட்ட இடமெல்லாம்
ஆழக் கிடங்கெடுத்து
வேரோடு கிளறி
இலை தழையும் குப்பையும்
சேர்த்தே வாரி
எடுக்கின்ற போது
என் அடிவயிறு பற்றி எரிகின்றது
எனக்காகவல்ல, உனக்காகவே தான்
அன்றொரு நாள்
உன்னில் ஒருவன்
"அகழ்வாரைத் தாங்கும் நிலம்" என
எனக்கு அடைமொழி வைத்ததை(ப்)
பரிசோதனை செய்ய நீ
துணிகின்ற வேளை...
என்ன இது?
உப்புக் கரிக்கிறது?
என் கண்ணீரா....?
இல்லை இல்லை அது கடல் நீர்.
மனிதனே!
எச்சரிக்கின்றேன் உன்னை.
என்னை விற்றுப்
பெற்ற பணமும்
என்னைக் கொட்டிக் கட்டிய வீடும்
கபாட புரம் போல
பூம்புகார் நகர் போல(க்)
கடலுக்குள் அமிழும் நாள்
கன தூரத்தில் இல்லை.

-சின்மயி

ஈழத்துத் தமிழ்ப் புனைகதைத் துறையில் மலையக எழுத்தாளர் வரிசையில் முக்கிய இடம் வகித்தவர் மாத்தளை சோமு. தமது பிறந்த இடமான மாத்தளையைத் தம் பெயரின் முன்னால் இணைத்துக் கொண்டு எழுதி வந்தவர். எழுபதுகளின் ஆரம்பகால கட்டத்திலிருந்து எழுதி வந்த இவரது சிறுகதைகள் உட்பட வேறிரு மாத்தளை எழுத்தாளர்களது சிறுகதைகளையும் உள்ளடக்கிய சிறுகதைத் தொகுதி 'தோட்டக் காட்டினிலே' 1979 ஆம் ஆண்டில் வெளிவந்தது.

மூன்று சிறுகதைத் தொகுதிகள், மூன்று நாவல்கள், ஈழத்துச் சர்ணபரம்பரைக் கதையொன்று என இவரது வெளியீடுகள் வெளிவந்தன. மலைநாட்டு எழுத்தாளர் மன்றச் சிறுகதைப் போட்டியில் பரிசு பெற்றவர். தமது நாவலொன்றுக்காகச் சாகித்திய விருதும் பெற்றவர். தற்போது அவுஸ்திரேலியாவில் வாழும் இவரது 'நமக்கென்றொரு பூமி' சிறுகதை இங்கு பிரசுரமாகிறது.

**மூத்த ஈழத்து எழுத்தாளர்களின் சிறுகதை வரிசை: 112**

# நமக்கென்றொரு பூமி

சிறுகதை

மேட்டு வலயத்திற்குப் போகிற படிக்கட்டுகளில் ஏறிக் கொண்டிருந்த வேலுவின் காதில் பணிய லயத்திலிருந்து கிளம்பிய சங்கின் ஒலியும் 'தப்பின்' சத்தமும் காற்று வாக்கில் வந்து விழுந்தது. வேலு ஒரு தடவை படிக்கட்டுகளில் நின்று, பணிய லயத்தைத் திரும்பிப் பார்த்தான். பணிய லயத்தில் கடைசிக் காம்பராவில் ஒரு கூட்டம் கூடியிருந்தது. கூட்டத்தின் உள்ளே 'சங்கோடு'ராசுவும் 'தப்போடு' முருகையாவும் நின்று கொண்டிருந்தார்கள். பெற்ரோல் மெக்ஸ் எரிந்து கொண்டிருந்தது. இந்த வெளிச்சத்தில் வெள்ளைக் கொடியொன்று லயத்துக் கூரையில் பறப்பது தெரிந்தது.

அது மருத்துவிச்சிக் கிழவியின் சாவு வீடு. இன்றைக்கோ நாளைக்கோ என்று ஒரு வார மாக இழுத்துக் கொண்டு கிடந்த கிழவி இன்று பகல் மூச்சுவிட மறந்தே போய்விட்டாள். படுக்கையில் விழுவதற்கு முந்திய நாள்வரை பிரசவம் பார்த்த கிழவி எந்த ஆஸ்பத்திரியிலும் வேலை செய்யவில்லை; எந்த டாக்டரிடமும் வேலை பழகவில்லை. ஆனால் அனுபவப்படிப்பில் முதல்தர சித்தி அடைந்திருந்தாள். அவள் கைபட்டதுமே ஆபரேசன் பண்ண வேண்டிய கேஸ்கூட சாதாரண கேஸாகி சுகமாகப் பிரசவித்திருக்கிறது. அந்தளவுக்கு அருமையான கைராசி கிழவிக்கு. அந்தக் கைராசியினால் கிழவி என்ற பெயர் மருத்துவிச்சிக் கிழவி என்று விரிவாகியது. அந்தத் தோட்டத்தில் மட்டுமல்ல அந்த வட்டாரத்திலேயே பிரசவம் என்றால் அவளைத் தான் அழைப்பார்கள். சில நேரத்தில் தோட்டத்தைச் சுற்றியிருக்கிற கிராமத்துச் சிங்களவர்கள் கூட அவளைக் கூட்டிப் போவார்கள்.

கடைசியாகப் பிரசவம் பார்த்தது கிழவியிருக்கிற காம்பராவிற்குப் பக்கத்தில் இருக்கிற மீனாட்சிக்குத்தான். மீனாட்சிக்கு ஐந்து பெண்கள். நாலாவது பிள்ளைக்குப் பிரசவம் பார்த்தபோது "கல்யாணம் பண்ணி அஞ்சுவருசத்தில் நாலு பிள்ளையாச்சி. இத்தோட நிப்பாட்டிக்க. இல்லே... குலேசர் மாதிரி வரிசையா பிள்ளை பொறக்கும். குலேசருக்கு கண்ணன் ஒதவி செஞ்சான்.... ஒனக்கு யாரு இருக்கா?... ரெண்டு மூனோட நிப்பாட்டிக்க..." என்று அறிவுரை சொன்னாள்... அதற்கு மீனாட்சி "நான் என்னா செய்யிரது? ஆம்பளப் பிள்ள வேணும்னுதான் அவரு விடுராறா இல்ல.... நான் என்னா செய்யட்டும்" என்றாள்.

ஐந்தாவதும் அவளுக்குப் பெண் பிள்ளையே பிறந்தது. ஆனாலும் அவர்கள் முயற்சியைக் கைவிடவில்லை. அடுத்த முறையும் 'கர்ப்பம்' தரித்தாள்... இந்த முறைதான் ஆண்பிள்ளை பிறந்தது. அந்தப் பிள்ளைக்குக் கிழவிதான் 'அன்னராஜா' என்று பெயரும் வைத்தாள். மீனாட்சியின் புருஷனும் ஆண்பிள்ளை பிறந்த மகிழ்ச்சியில் கிழவிக்குப் புதுச்சேலை வாங்கிக் கொடுத்தான். இன்று அந்தச் சேலையோடுதான் காம்பராவில் கண்ணைமூடிக்கொண்டுகிடக்கிறாள்.

வேலு மறுபடியும் படிக்கட்டுகளில் நடக்க ஆரம்பித்தான். அவனுடைய பார்வை மேட்டு லயத்திற்கு ஓடி பணிய லயத்திலிருந்து வந்தது. ஆனால் அவனுடைய நினைவுகளோ பணிய லயத்தில் கிடக்கிற கிழவியையே சுற்றிச் சுற்றி வந்தன.

ஒரு தடவை மேட்டு லயத்திற்கும், பணிய லயத்திற்கும் பெரிய தகராறு வந்து விட்டது. மேட்டு லயத்தைச் சேர்ந்த ஒருத்தரின் ஆடு பணிய லயத்தைச் சேர்ந்த ஒருத்தரின் காய்கறித் தோட்டத்தில் நுழைந்து ஓடித்திரிந்து முளைவிட்டிருந்த செடிகளை மிதித்து, நசுக்கி விட்டது. வாயில்லா ஜீவன் தவறு செய்து விட்டது. அதற்காக வாயுள்ள ஜீவன்கள் வாய்க்கு வந்தபடி பேசித்தீர்த்தன. 'அடி தடி'யில் இறங்கின. முதலில் தனிமனிதர் சண்டையாகி, மாறி குடும்பத்துச் சண்டையாகி, மாறி கடைசியில் 'லயத்துச் சண்டையாக' மாறியது. இரு லயத்திற்குமிருந்த தொடர்பு அறுந்தது. இரு லயத்தாரும் ஒருத்தரின் முகத்தை ஒருத்தர் பார்ப்பது கூட இல்லை.

அந்த நேரத்தில் தான் மேட்டு லயத்தில் ஒருத்திக்குப் பிரசவ வேதனை. கைராசிக்காரக் கிழவி பணிய லயத்தில் இருந்ததால் எப்படிப் போவான்? எப்படிக் கூப்பிடுவது? கிழவியோடு யாருக்கும் சண்டையில்லை. ஆனால் அவள் இருப்பது பணிய லயமாயிற்றே! என்ன செய்வது?... என்றெல்லாம் புருஷன் துடித்தான். சில மைல்கள் தூரத்தில் ஆஸ்பத்திரி இருக்கிறது. கார் பிடித்தால் ஆஸ்பத்திரி போகலாம். ஆனால் இருட்டி விட்டது. இந்த நேரத்தில் சைக்கிள்கூடக் கிடைக்காதே. தவியாய்த் தவித்தான் அவன்.

'மேட்டு லயத்தின் மானத்தைக் காக்க வேண்டும் என்று 'மார்' தட்டியவர்கள் அவனுடைய பிரச்சினைக்கு முடிவு கூறவில்லை. கலங்கினான். பிறகு அவன் ஒரு முடிவுக்கு வந்தான்.

பணிய லயத்திற்குத் தானாகவே துணிந்து போனான் அவன். கிழவியைக் கூப்பிட்டான். கிழவியைப் போகக்கூடாது என்று தடுத்தார்கள் பணிய லயத்தார்கள். அவர்களைக் கிழவி முறைத்தாள்.

'ஆண்டவன் எனக்கு ஒரு கலையைக் குடுத்திருக்கான். அது படிக்காம, கேக்காம கெடைச்சது. அதை என் சொய நலத்துக்காக அடகு வைக்க விரும்பல்ல. மேட்டு லயத்தில் ஒரு ஜீவனைக் கடவுள் படைக்க விரும்புறான். அவனுக்கு ஒதவி செய்யப் போறேன். அதைத் தடுக்க யாராலையும் முடியாது" என்று ஆவேசமாகக் கத்தினாள்.

கிழவி மேட்டுலயத்தில் நுழைந்ததுமே குழந்தை பிறந்துவிட்டது. ஆயினும் பிரசவ வேலையை முடித்துக் கொண்டு பணிய லயத்திற்குப் போனபோது அவளோடு சண்டைக்கு வந்தார்கள். கிழவி எதுவுமே பேசாமல் காம்பராவில் கிடந்த பெட்டியைத் தூக்கிக் கொண்டு மேட்டு லயத்திற்குப் போனாள்.

மேட்டு லயத்தில் நல்ல வரவேற்பு அங்கேயே தங்கிவிட்டாள். பிறகு ஒரு நாள் பணிய லயத்தில் ஒருத்திக்குப் பிரசவ வேதனை. கிழவி இது தான் சந்தர்ப்பம் என்று மேட்டு லயத்தையும் ஒன்று சேர வைத்து ஒற்றுமைப்படுத்தி சமாதானக் குழந்தை பெற வைத்தாள். அந்தக் கிழவி இன்று போயே விட்டாள்.

மேட்டு லயத்திற்குப் போன வேலு, சுப்பையா தலைவரின் காம்பராவை எட்டிப் பார்த்தான். வேலுவைக் கண்டதும் சுப்பையா குரல் கொடுத்தார்.

"வாப்பா... வேலு! ஒன்யத்தான் பார்த்துக் கிட்டிருக்கோம்! வா... வா..."

வெளியே இருந்த பெரல் தண்ணியில் இரண்டு சொம்பு அள்ளி இரண்டு கால்களிலும் ஊற்றிக் கழுவிய வேலு, காம்பரா வாசலில் கிடந்த 'சாக்கில்' காலைத் துடைத்து விட்டுக் காம்பராவுக்குள்ளே போனான். உட்கார இடம் பார்த்து உட்கார்ந்தான். இதுவரை அங்கே எட்டுப் பேர் இருந்தார்கள். இப்போது அவனோடு அது ஒன்பதாகி விட்டது. இனிக் கூட்டத்தைத் தொடங்க வேண்டியதுதான். அது தோட்டக் கமிட்டியின் கூட்டம்.

"டேய்! மணி. தேத்தண்ணிச் சாயத்தைக் கொண்டா."

சுப்பையா தலைவரின் உரத்தரவின் பின் அங்கிருந்தவர்களின் முன்னால் வெறும் சாயத்தைக் கண்ணாடிக் கிளாஸ்களில் அவரின் மகன் கொண்டு வந்து வைத்தான். தொங்க லயத்துத் துரைசாமி சாயத்தை வாயில் ஊற்றிவிட்டு 'கூட்டம் தொவங்க முந்தியே குடிக்கக் கெடைக்குதே! அப்படியே சோறும் போட்டா விடிய விடியக் கூட்டம் போட்டிருக்கலாம்" என்றான்.

[13 ஆம் பக்கம் பார்க்க....]

# கனவும் நனவும்

நமது படைப்பின் எதிர்காலவியலைப் பூடகமாகக் காட்டிவிடும் தன்மை சிறந்த படைப்பாளிகளிடம் இயல்பாகவே காணப்படும். சிலம்பில் இருந்தும் கம்பராமாணயத்தில் இருந்தும் அத்தகைய இரு இடங்களைப் பார்ப்பது பயனுடைத்து.

சிலப்பதிகாரத்தின் உச்சக்கட்டக் காட்சியாக [Climax] அமைவது வழக்குரை காதையாகும். கோவலன் கொல்லப்பட்ட பின்னர் பாண்டிய மன்னனிடம் சபையேறி நீதி கேட்கும் கண்ணகியை இக்காதையில் இளங்கோ காட்டுகிறார்.

வாயிற் காவலனிடம் வந்த கண்ணகி "அறிவு இல்லாமற் போன புண்ணியமற்ற மனத்தினையுடைய இறைநீதி பிழைத்தவனுடைய வாயிற் காவலனே!" என விளித்துப் பேசுகின்றாள். பாண்டியன் வழங்கிய நீதி இருவரது இறப்பாக முடிகின்றது.

'மன்பதை காக்கும் தென்புலம் காவல்
என்முதற் பிழைத்தது கெடுக என் ஆயுள்'

எனக் கூறிப் பாண்டியன் உயிர் விடுகின்றான். தொடர்ந்து மதுரை மாநகர் தீயில் பொசுங்கிச் சிதையும் அளவுக்குச் சம்பவங்கள் இடம்பெறுகின்றன. இத்தகைய தீய நிகழ்வுகள் எதிர்காலவியலில் நிகழவிருப்பதை இளங்கோ முற்கூட்டியே காட்டியிருப்பது அவரது இலக்கியத் திறமையாகும்.

பாண்டிய மன்னனின் மனைவி கோப்பெருந்தேவி தீக்கனா ஒன்றைக் காண்கிறாள். செங்கோல், வெண்கொற்றக் குடை முறிந்து வீழ்வதாகவும், வாயில் மணி அடிப்பாரின்றி தானே ஒலிப்பதாகவும் இரவில் வானவில் தோன்றுவதாகவும் பகலில் நட்சத்திரங்கள் எரிந்து வீழ்வதாகவும் எட்டுத்திசைகளும் அதிர்வதாகவும் அக்கனவு அமைகின்றது. அக்கனவுத் திறம் உரைக்க அவள் மன்னன் இருக்கும் இடம் நோக்கிச் சென்றாள். அங்கு தன் தீக்கனாத் திறம் உரைத்தாள்.

கோப்பெருந்தேவியின் தீக்கனாப் பற்றிய செய்தியைக் கேட்கும் மன்னன். இருக்கும் நிலையைப் பதிவு செய்ய விழைந்த கவிஞர் தன் மனக் கருத்தோட்டத்தையும் வெளிப்படுத்தி விடுகின்றார்.

**கோப்பெருந்தேவி சென்று தன்**
**தீக்கனாத் திறம் உரைப்ப**
**அரிமானேந்திய அமளிமிசை இருந்தனன்**
**திருவீழ் மார்பின் தென்னவர் கோவே**

[வழக்குரை காதை வரி 23-24]

சிங்காசனத்தில் இருக்கும் தென்னவர் கோவான பாண்டியன் 'திருமகள் விரும்பும் மார்பை உடையவன்' என்பது வெளிப்படையான பொருள். எனினும் அற்றைநாள் வரை திருமகள் விரும்பும் மார்பை உடைய பாண்டியன். இனித் திருமகள் நீங்குகிற மார்புடையவனாக விளங்குகிறான்" எனப் பொருள் கொள்ளவும் முடிகின்றது. 'திருவீழ் மார்பு' என்பது பின்னாள்களில் பாண்டியனுக்கும் மதுரைக்கும் நேரவிருக்கும் வீழ்ச்சிகளைச் சொல்லாமற் சொல்கின்றதல்லவா?

★ ★ ★ ★ ★ ★

கம்பராமாயணத்திலும் இத்தகைய காட்சிகளைப் பல இடங்களில் காண முடியும். 'ஒரு சோறு பதம்' என்பதற்கமைய கைகேயி சூழ்வினைப் படலத்தில் அமையும் ஒரு காட்சியைக் காண்போம்.

கைகேயி, கேகயன் என்ற சக்கர வர்த்தியின் மகள். இதனாற்றானோ என்னவோ தசரதன் கைகேயி மீது அளவு கடந்த அன்பைக் காட்டுகிறான். முன்னன் ஆவி அன்னாள் என்ற கம்பர் கூற்றும் இங்கு நோக்கத்தக்கது. ஆனால் கைகேயி நல்லவளா? கெட்டவளா? என்பதைத் தீர்மானிப்பதற்கு கூடப் புலவனே இடர்ப்படுகிறான். தெய்வக் கற்பினள். தூமொழி மடமான். தூய சிந்தையள், என நற்சாட்சிப் பத்திரங்களை கொடுக்கும் அதே வாயால் இரக்கமிலாள், கூற்று, தீயவை யாவினும் சிறந்த தீயாள், பாவி, மாசுயத்தி, பெண்டிரில் கூற்றம் அன்னாள் என இழித்தும் கம்பர் உரைக்கிறான்.

மந்தரையின் சூழ்ச்சியால் மனம்மாறி தசரதனிடம் வரம் கேட்பதற்குக் கைகேயி ஆயத்தமாகின்றாள். அதற்காக ஒரு வேடப் புனைவை மேற்கொள்கின்றாள்.

## இலக்கியக் காட்சி 3

பணிப் பெண்ணாகிய கூனி [மந்தரை] விலகிச் சென்ற பின் சிறந்த மலர்களின் குவியலால் ஆன படுக்கையில் இருந்து இறங்கினாள். கருமேகம் போன்ற தன் நீண்ட கூந்தல் தொகுதியில் சூடியிருந்த பூமாலையைப் பிடுங்கிச் சிதைத்து எறிந்தாள்.

**கூனி போயின பின் குலமலர்க்**
**குப்பை நின்று இழிந்தாள்**
**சொனை வார்குழல் கற்றையில்**
**சொருகிய மாலை**
**வான மா மழை நுழைதரு மதி**
**பிதிர்ப்பான் போல்**
**தேன் அவாவுறு வண்டினம்**
**அலமர, சிதைத்தாள்.**

[கைகேயி சூழ்வினைப் படலம் பாடல் 01]

மலர்க்குப்பை என்பது ஆகுபெயராகப் படுக்கையைக் குறிக்கிறது. அங்கிருந்து இறங்கியவள், கார்கால மேகத்தில் நுழைந்த சந்திரன் போல் அவளது நீண்ட கரிய கூந்தலில் சூடியிருந்த பூமாலையைச் சிதைத்து எறிகின்றாள். இக்காட்சி கவிஞரின் பார்வையில் சந்திரனை இழித்துச் சிதைக்குமாற் போல் இருக்கிறது.

கூந்தலில் மாலை சூட்டிக் கொள்வது சுமங்கலிகளுக்குரிய தகுதிப்பாடுகளுள் ஒன்று. இங்கு 'கூந்தலில் சொருகிய மாலை சிதைத்தாள்' எனக் கம்பர் குறிப்பிடுவது கைகேயிக்கு நேரவிருக்கும் அமங்கலத்தை முற்கூட்டியே அறிவிப்பதாக அமைகிறதல்லவா?

கைகேயியின் மனதில் கூனியின் கூற்று ஆழமாகப் பதிந்தமையால் தன் அழகுக் கோலத்தையே அழிக்க முனைகின்றாள். பெண்மையின் நற்பண்புகளைக் கைவிட்டு மனம் திரிந்து மாறுபட்டுச் செயற்படுகிறாள். கம்பனின் கவிச்சுவை, கைகேயியின் செயற்பாட்டினை நடைமுறை வாழ்வியலோடு பொருத்தமுற அமைத்துள்ளது. தனது சுய அறிவைப் பயன்படுத்தாத கைகேயி, கேட்பார் புத்தி கேட்கும் தன்மையினால் பலரது துன்பத்திற்கும் காரணமாகும் நிலையைத் தோற்றுவிக்கிறாள். மாலையைச் சிதைத்தல், கூந்தலைப் பரப்பல், மேகலாபரணத்தை அறுத்தெறிதல், கைவளையல்களைக் கழற்றிவீசல், நெற்றித் திலகத்தை அழித்தல் எனத் தன் அழகுக் கோலச் சிதைப்பால் இதனை உணர்த்தி விடுகின்றாள். பின்னால் வரப் போகும் தீமையை உணரும் தொலை நோக்கான பார்வை பெண்ணுக்கு உண்டு. ஆனால் அதை அவள் மறந்து செயற்படும் நிலையைக் கம்பர் தன் குறிப்பால் சுட்டிக் காட்டுவது இங்கு மனங்கொள்ளத்தக்கது. ★


- ச.லலீசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேராண்டி



புது முகங்களான அரசு - குஷிமா ஆகியோரின் நடிப்பில் பேராண்டி என்னும் படம் தயாராகவுள்ளது. தங்கமணி என்பவர் இப்படத்தை இயக்குகிறார். நகைச்சுவையை மையமாகக் கொண்டு உருவாகவுள்ள இப்படத்தில் கஞ்சாகறுப்பு, மயில்சாமி, சத்தியன் ஆகிய நகைச்சுவை நடிகர்களோடு இணைந்து கலக்கவுள்ளார் ஆச்சி மனோரமா. படத்தின் பெயரே பேராண்டி என அமைந்துள்ளதால் வாழ்வில் சோதனைகளைச் சந்திக்கும் தன் பேரனுக்குத் துணை செய்யும் பாட்டியாக மனோரமா தோன்ற இருக் கிறார். வழக்கம்போல அவரது நகைச்சுவையை நம்பி எடுக்கப்படும் இத்திரைப்படம் ரசிகர் களிடம் பலத்த வரவேற்பைப் பெறும் என்று கூறுகிறார் படத்தின் இயக்குநர். ஊட்டி, குற்றாலம், கோவை, மூணாறு போன்ற குளிர் ததும்பும் பிரதேசங்களில் பேராண்டி படத்தின் காட்சிகள் எடுக்கப்படவுள்ளன.★

## அடுத்த படத்துக்கு ஆயத்தம்



பேராண்மை படத்தில் நடித்துவரும் ஜெயம்ரவி அடுத்த படத்துக்கும் ஆயத்தமாகிவிட்டார். இப் படத்துக்கு 'தில்லாலங்கடி' என்று பெயரிடப்பட்டுள்ளது. தெலுங்கில் வெளியாகி சக்கைபோடு போட்ட 'கிக்' என்ற படத்தின் தழுவலே 'தில்லாலங்கடி' என்று சொல்லப்படுகின்றது. ஜெயம்ரவிக்கு முக்கியமான தருணங்களில் வெற்றிப் படங்களைத் தந்த அவரது அண்ணன் ராஜாதான் இப்படத்தை இயக்க இருக்கிறார். ஜெயம்ரவிக்கு ஜோடியாக தமன்னா ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார். அத்துடன் வடிவேலு, பிரபு, சத்தியன், சந்தானம், சுஹாசினி போன்றோரும் இப்படத்தில் ஜெயம்ரவியோடு இணைந்து நடிக்கவுள்ளனர். படத்தின் இசை அமைப்பை யுவன்சங்கர்ராஜா பொறுப்பேற்றிருக்கிறார். ★

## 'ஜானி'யில் ஜீவன்



'நான் அவன் இல்லை' என்ற ரீமேக் படத்தில் நடித்து வெற்றி பெற்ற ஜீவன் இன்னுமொரு ரீமேக் படத்திலும் நடிக்கவுள்ளார். இப் படத்தையும் ஜீவன் நடித்த நான் அவன் இல்லை, தோட்டா ஆகிய படங்களை இயக்கிய செல்வாவே நெறியாள்கை செய்யவுள்ளார். இப்படம் அனேகமாக ரஜினி - ஸ்ரீதேவி நடித்து பெரு வெற்றிபெற்ற ஜானி படத்தைத் தழுவியதாக அமையவுள்ளது. இப்படத்திற்கு 'ஜானி' என்றே பெயரிடப்பட்டுள்ளது. புதிய ஜானியில் ரஜனியின் பாத்திரத்தில் ஜீவனும் ஸ்ரீதேவியின் பாத்திரத்தில் சிநேகா அல்லது வேதிகாவும், சுருளி ராஜனின் பாத்திரத்தில் மயில்சாமியும் நடிக்கவுள்ளனர். படத்திற்கு விஜய் அன்ரனி இசையமைக்க வுள்ளார். இப்போது ஜீவனின் நடிப்பில் 'நான் அவன் இல்லை' படத்தின் இரண்டாம் பாகத்தை இயக்கிவரும் செல்வா, அது முடிந்ததும் 'ஜானி'யை இயக்கவுள்ளார்.★

## விற்று முடிந்த ரிக்கற்றுகள்



பூஜை போட்ட தினத்தில் இருந்தே பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ள படம் 'கந்தசாமி'. இதில் விக்ரம் அமானுஷ்ய சக்தி கொண்ட நாயகனாக வருகிறார். இதுவரையும் எந்தத் தமிழ்ப் படத்துக்கும் இல்லாத அளவு இந்தப் படத்திற்கு அதிகளவு பிரதிகள் போடப்பட்டுள்ளன. ஏறக்குறைய ஒரே நாளில் 900 ஆயிரம் திரையரங்குகளில் கந்தசாமி வெளியிடப்படவுள்ளது. இதனால் கந்தசாமி படத்தை அது வெளியான முதல் வாரத்திலேயே பார்த்துவிடவேண்டுமென்ற ஆசையில் கந்தசாமி படத்தின் ரிக்கெற்றுக்காக ரசிகர்கூட்டம் அலை மோதுகிறது. ஓகஸ்ட் 21 இல் வெளியான இப்படத்தின் முதல் வாரத்துக்கான ரிக்கெற்றுக்கள் எல்லாமே விற்றுத் தீர்ந்து விட்டன. இதனால் படத்தில் போட்ட பணத்தை மிக விரைவிலேயே வட்டியும் முதலுமாக எடுத்தவிடலாம் எனத் தயாரிப்பாளர் தரப்பு மகிழ்ந்துள்ளது.★

## திரைவிமர்சனம்

## பொக்கிஷம்



மாயக்கண்ணாடி படம் தந்த தோல்விக்குப் பின்னர் சேரனின் இயக்கத்தில் வெளிவந்துள்ள படம் 'பொக்கிஷம்'. இதில் சேரன், பத்மப்பிரியா, விஜயகுமார், இளவரசு ஆகியோர் நடித்துள்ளனர்.

உடல் நலம் சரியில்லாத தந்தையை மருத்துவமனை ஒன்றில் சேரன் சேர்க்கிறார். அதே மருத்துவமனையில் தன் தாயை அனுமதித்த பத்மப்பிரியா சிகிச்சைக்காக பணம் கட்ட முடியாமல் தவிக்கிறார். அப்போது அவருக்கு சேரன் உதவுகிறார். இதில் இருந்து உருவாகும் இவர்களது நட்பு காலப்போக்கில் காதலாக மாறுகிறது. அதன் பின்னர் வேலை நிமித்தம் கொல்கத்தாவுக்குச் செல்கிறார் சேரன். ஆயினும் கடிதம் மூலம் இவர்களது காதல் வளர்கிறது. ஆரம்பத்தில் இருவரின் குடும்பமும் இவர்களது காதலை ஏற்றுக்கொள்ள மறுத்தாலும் பின்னர் ஒத்துக்கொள்கிறார்கள். திடீரென பத்மப்பிரியாவிடம் இருந்து கடிதங்கள் வருவது நின்றுபோகிறது. எனவே பத்மப்பிரியாவைத் தேடி நாகூருக்குப் போகிறார் சேரன். அங்கே பத்மப்பிரியாவும் அவரது குடும்பமும் இருந்த சுவடே இல்லை. அதன் பின்னர் தந்தையின் விருப்பத்திற்காக இன்னொரு திருமணம் செய்கிறார். அவருக்கொரு மகனும் இருக்கிறான். காதலியைக் கடைசிவரையும் காணாதவராய் இறந்து போகிறார் சேரன். பத்மப்பிரியா எங்கே சென்றார்? சேரன் அவருக்கு அனுப்பிய கடிதங்களுக்கு என்ன நடந்தது? என்பதைப் படத்தின் இறுதிக்காட்சி சொல்கிறது.

'ஆட்டோக்கிராப்' போல அழுத்தமான திரைக்கதை இல்லாவிட்டாலும் எல்லோருடைய அனுபவங்களை ஒருமுறை மீள் நினைவுக்குக் கொண்டுவருகிறது 'பொக்கிஷம்'. அந்த வகையில் சேரன் பாராட்டுக்குரியவர். முஸ்லிம் பெண்ணாக வரும் பத்மப்பிரியா பாத்திரத்திற்கு கனகச்சிதமாகப் பொருந்துகிறார். விஜயகுமார், இளவரசு இருவரும் தத்தம் பாத்திரங்களை உணர்ந்து செய்திருக்கிறார்கள்.

'பொக்கிஷம்' திரைப்படம் தமிழ்ச் சினிமாவுக்குக் கிடைத்த இன்னொரு பொக்கிஷம்.★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

HNB வணக்கம் யாழ்ப்பாணம்

என்றும் உங்களுடன் இணைந்திருப்போம்



## புதியதோர் நாள். புதியதோர் ஆரம்பம்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் வளங்கள் நிறைந்துள்ள போதிலும் இரண்டு தசாப்தங்களுக்கும் மேலாக இந்த வளங்கள் உரிய முறையில் பயன்படுத்தப்படவில்லை. யாழ்ப்பாண மக்கள் திறமைசாலிகள், கடின உழைப்பாளிகள், வியாபார நுணுக்கங்களை நன்கு அறிந்தவர்கள்.

1971ஆம் ஆண்டிலிருந்து யாழ்ப்பாணப் பிரதேசத்தில் தனது செயற்பாடுகளைத் தொடர்ச்சியாக மேற்கொண்டுவரும் HNB தற்சமயம் யாழ்ப்பாணம், சுன்னாகம், நெல்லியடி, ஸ்ரான்லி வீதி, மானிப்பாய் ஆகிய இடங்களில் ஐந்து வாடிக்கையாளர் நிலையங்களைக் கொண்டுள்ளது. ரூ.6.3 பில்லியன் மொத்த வைப்புக்களும் ரூ.2.7 பில்லியன் வரையிலான கடன்களும் யாழ்ப்பாண மக்கள் HNB மீது வைத்துள்ள அசையாத நம்பிக்கை, பல்லாண்டு காலமாக நிலவும் சிறந்த இருதரப்பு உறவுகள் என்பவற்றிற்கு சான்று பகருகின்றன.

இப்போது, ஹற்றன் நஷனல் வங்கி தனக்கே உரித்தான தீர்க்கதரிசனத்துடன் "வணக்கம் யாழ்ப்பாணம்" என்ற தலைப்பில் யாழ்ப்பாண எழுச்சி வாரம் ஒன்றை ஓகஸ்ட் 22ஆம் திகதி முதல் 28ஆம் திகதி வரை நடத்த இருக்கிறது. யாழ்ப்பாணத்தின் அபிவிருத்தி அடைந்துவரும் பொருளாதாரத்திற்கு உந்துசக்தி அளிப்பதும், அக்குடாநாட்டு மக்களுக்கு நிதியுதவி வழங்குவதும் நீடித்த சுபீட்சத்திற்கான வாய்ப்புக்களை விரிவுபடுத்துவதுமே இதன் நோக்கமாகும்.

# HNB யாழ்ப்பாண எழுச்சி வாரம் - ஓகஸ்ட் 22 - 28

### ஓகஸ்ட் 22
### விவசாயிகளுக்கான விழிப்புணர்வுத் திட்டம்



புதிய அறுவடை
நவீன விவசாய வழிமுறைகள் பற்றி யாழ்ப்பாண விவசாயிகளுக்கு அறிவூட்டுவதற்காக விவசாயத் திணைக்களம் மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்பவற்றைச் சேர்ந்த நிபுணர்கள் நடத்தும் பயிற்சிக்களம்.

### ஓகஸ்ட் 23
### மீன்பிடித்தொழில் ஊக்குவிப்புத் திட்டம்



சிறந்த "பிடி"
மீன்பிடித் துறையின் புதிய தொழில்நுட்பங்கள், களஞ்சிய முறைகள் என்பன பற்றி மீனவ சமூகத்தினருக்கு விளக்கம் அளிப்பதற்காக மீன்பிடித் திணைக்கள நிபுணர்கள் பருத்தித்துறையில் நடத்தும் அறிவூட்டல் கருத்தரங்கு

### ஓகஸ்ட் 24
### மாணவ முகாமையாளர்களின் மாநாடு




உங்களுள் ஒளிந்திருக்கும் வங்கியாளரை வெளிக்கொணரும் முயற்சி
யாழ்ப்பாணக் குடாநாட்டின் 32 பாடசாலைகளைச் சேர்ந்த 130 மாணவர்கள் கலந்துகொள்ளும் இந்த நிகழ்ச்சியில், பாடசாலைகளில் "சிறிய" வங்கிகளை வெற்றிகரமாக நடத்துவது குறித்து மாணவர்களுக்கு அறிவூட்டப்படும்.

### ஓகஸ்ட் 26
### நுண் கடனுதவி அரங்கு



குடிசையிலிருந்து மாடமாளிகைக்கு
150 தொழில் முயற்சியாளர்களுக்கென முதன்முறையாக யாழ்ப்பாண முகாமையாளர்கள் சங்கத்துடன் இணைந்து ஒழுங்கு செய்யப்பட்ட நுண் கடனுதவி அரங்கு.

### ஓகஸ்ட் 24
### சேமிப்புக்களுக்குப் பரிசுகள்



எம்மில் தொடர்ச்சியாக நம்பிக்கை வைத்திருக்கும் வாடிக்கையாளர்களுக்கு நாம் வழங்கும் பிரதியுபகாரம்

2009 ஓகஸ்ட் 24ஆம் திகதிக்கும் நவம்பர் 30ஆம் திகதிக்கும் இடையே யாழ் குடாநாட்டு மக்களுக்கென விசேட பண வைப்பு ஊக்குவிப்புத் திட்டம் ஒன்று மேற்கொள்ளப்படும். இத் திட்டத்தின் கீழ் குளிரூட்டிகள், சலவை இயந்திரங்கள், துவிச்சக்கர வண்டிகள் போன்ற பெறுமதிமிக்க பரிசுகளை வெல்லும் வாய்ப்பு வழங்கப்படும். ரூ.25,000/- வைப்புச் செய்து சேமிப்புக் கணக்கை ஆரம்பிக்கும் ஒவ்வொருவருக்கும் HNB வர்த்தகச் சின்னம் பொறிக்கப்பட்ட சுவர்க் கடிகாரம் ஒன்று அன்பளிப்பாக வழங்கப்படும். சிங்கிதி கணக்கில் ரூ.1,000/- ஐ அல்லது அதற்கு மேற்பட்ட தொகையை வைப்புச் செய்யும் அனைத்துச் சிறுவர்களுக்கும் HNB தொப்பியொன்று வெகுமதியாக வழங்கப்படும்.

### ஓகஸ்ட் 26
### யாழ்ப்பாண நூலகத்திற்கு கணனிகள் அன்பளிப்பு



யாழ்ப்பாணத்தினை தகவல் தொழில்நுட்ப உலகிற்கு மேலும் சமீபமாக்கும் ஒரு முயற்சி
HNB 25 கணனிகளை யாழ்ப்பாண நூலகத்திற்கு அன்பளிப்புச் செய்யும் நிகழ்வு இடம்பெறும்.

ஒவ்வொரு மாற்றத்தினூடாகவும் உங்களுக்காக நாம் மாறினோம்

HNB
உங்கள் முன்னேற்றத்தின் பங்காளி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளையாட்டு அரங்குகளில்

# வீனஸ் வில்லியம்ஸ் அதிர்ச்சித் தோல்வி



கனடாவில் நடைபெறும் டொரோன்டோ கோப்பை ரெனிஸ் தொடரின் 2ஆவது சுற்றில் அமெரிக்க வீராங்கனை வீனஸ் வில்லியம்ஸை, உக்ரேனிய வீராங்கனை பொன்டா ரென்கோ 1- 6, 7- 5, 6- 4 என்ற செற் கணக்கில் வீழ்த்தி 3ஆவது சுற்றுக்கு முன்னேறினார். இங்கு இது வரை 3 ரெனிஸ் தொடர்களில் பங்கேற்றும் ஒரு போட்டியில் கூட வீனஸ் வெற்றி பெற்றதில்லை என்பது குறிப்பிடத்தக்கது. முதல் செட்டை 28 நிமிடத்தில் வென்ற வீனஸ் வில்லியம்ஸ் அடுத்தடுத்த செற்களில் நிறைய தவறுக்ளைச் செய்தார். அதாவது அறியாமல் நடக்கும் பிழைகள் என்று கூறப்படும் அன் ஃபோர்ஸ் தவறுகள் நிறைய ஏற்பட்டது. இதனால்தான் தனக்கு அதிர்ஷ்டமில்லை என்று போட்டி முடிந்தவுடன் கூறினார் வீனஸ் வில்லியம்ஸ்.

# ஷெல்லி அன் ஃபிரேசர் சாதனை



ஜேர்மனியில் உள்ள பேர்லின் நகரில் நடைபெறும் 12 ஆவது உலகத் தடகள சம்பியன் போட்டிகளின் மகளிர் 100 மீற்றர் பிரிவில் ஜமெய்க்கா வீராங்கனை ஷெல்லி ஆன் ஃபிரேசர் முதலிடம் பிடித்து முதன் முறையாக இந்த தொடரில் சம்பியன் பட்டம் வென்றுள்ளார்.

ஏற்கனவே பீஜிங் ஒலிம்பிக்கில் தங்கம் வென்று அனைவரையும் வியப்பில் ஆழ்த்திய ஷெல்லி ஆன் ஃபிரேசர் 100 மீற்றர் தடகள ஓட்டப்பந்தயத்தில் 10.73 வினாடிகளில் இலக்கை எட்டி முதலிடம் பிடித்தார்.

100 மீற்றர் தடகள ஓட்டப்பந்தயத்தில் மகளிர் பிரிவில் 3 ஆவது சிறந்த சாதனையை தன் வசம் வைத்துள்ள ஷெல்லி ஆன் ஃபிரேசர் தற்போது ஒலிம்பிக் மற்றும் உலக சம்பியன் என்பது குறிப்பிடத்தக்கது.

# டெக்கான் சார்ஜர்ஸில் கிப்ஸ் இல்லை



இந்தியாவில் ஒக்டோபர் மாதம் நடைபெறும் சம்பியன்ஸ் லீக் 'ருவென்ரி-20' சர்வதேச கிரிக்கெட் போட்டியில் தென்னாபிரிக்காவிலிருந்து தகுதி பெற்ற கேப் கோப்ராஸ் அணிக்கு ஹெர்ஷல் கிப்ஸ் விளையாடுகிறார். ஐ.பி.எல். சம்பியன் டெக்கான் சார்ஜர்ஸ் அணிக்கு அவர் இந்த தொடரில் விளையாட மாட்டார்.

முதலில் டெக்கான் சார்ஜர்ஸ் அனிக்கே விளையாடுவேன் என்று கிப்ஸ் கூறினார். ஆனால் அவர் அவ்வாறு விளையாடினால் டெக்கான் சார்ஜர்ஸ் அணி கேப் கோப்ராஸ் அணிக்கு 2 லட்சம் டொலர்கள் இழப்பீடு தொகை கொடுக்க வேண்டி வரும். இதனால் டெக்கான் சார்ஜர்ஸ் அணி கிப்ஸை வலியுறுத்தவில்லை என்று தெரிகிறது.


தென்னாபிரிக்காவில் நடைபெற்ற இரண்டாவது ஐ.பி.எல்.'ருவென்ரி-20' தொடரில் அணித்தலைவர் ஆடம் கில்கிறிஸ்டிற்கு அடுத்தபடியாக, கிப்ஸ் அதிக ஓட்டங்களை எடுத்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

கேப் கோப்ராஸ் அணிக்கு விளையாடும் கிப்ஸின் முடிவு பற்றி டெக்கான் சார்ஜர்ஸ் அணி தரப்பிலிருந்து எந்த ஒரு பதிலும் தரப்படவில்லை. கேப் கோப்ராஸ் அணிக்கு தென் னாபிரிக்க அணியின் தலைவர் கிரேம் ஸ்மித் தான் தலைவர். இந்த அணியில் ஜே.பி. டுமினி உள்ளார். **************

# 200 மீற்றர் ஓட்டத்தில் டைசன் கே விலகல்?

பேர்லினில் நடந்து வரும் உலகத் தடகளப் போட்டியின் ஆடவர் 200 மீற்றர் ஓட்டப்பந்தயத்தில் இருந்து விலக அமெரிக்காவின் டைசன் கே முடிவு செய்துள்ளார்.

இதுதொடர்பாக அமெரிக்க அணி வெளியிட்டுள்ள அறிக்கையில், 200 மீற்றர் ஓட்டத்திற்கு பதிலாக, 4×100 மீற்றர்




ஓட்டத்தில் பங்கேற்பதற்கான நடவடிக்கைகளில் டைசன் கே கவனம் செலுத்துவார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த ஞாயிறன்று நடந்த 100 மீற்றர் ஓட்டத்தில் டைசன் கே வெள்ளிப் பதக்கம் வென்றாலும், அவரது உடல்நிலையில் பலத்த மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. எனவே அணியின் நலன் கருதியும், உடல்நலன் கருதியும் அவர் 200 மீற்றர் ஓட்டத்தில் இருந்து விலகியதாக அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.


வடக்கு, கிழக்கு வாடிக்கையாளர்களை JKOA அண்மிக்கிறது.


மட்டக்களப்பு மாவட்டத்தில் சகல வகையான TOSHIBA மற்றும் RISOசாதனங்களின் பாவனையாளர்களுக்கும் இலவச உதவிகள

இந்த வாய்ப்பு TOSHIBA ஃபோட்டோ பிரதி இயந்திரம் / நோட்புக் கணனி /புரொஜெக்டர் / தொலைநகல் இயந்திரம் மற்றும் RISO டிஜிட்டல் டுப்ளிகேட்டர்களின் பாவனையாளர்களுக்கானது.

முன்கூட்டியே ஏற்பாடுகளைச் செய்துகொள்வதன் மூலம், 2009 ஆகஸ்ட் 23ஆம் திகதிக்கும் 28ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலத்தில் உங்களது மட்டக்களப்பு அலுவலகங்களில் எங்கள் விற்பனை மற்றும் பராமரிப்பு ஆலோசகர் குழுவுடன் சந்திப்புக்களை ஏற்படுத்திக்கொள்ளலாம்.

உங்களது எல்லா விதமான புதிய உபகரணத் தேவைகள், உபகரணப் பராமரிப்புத் தேவைகள் என்பற்றிற்கான ஆலோசனைகளை இலவசமாகப் பெற்றுக்கொள்ள, முன்சந்திப்பு ஏற்பாட்டைச் செய்துகொள்ளவும்.

முன்சந்திப்பு ஏற்பாட்டைச் செய்வதற்கு, பின்வரும் தமிழ்மொழி பேசும் பிரதிநிதிகளைத் தொடர்புகொண்டு பதிவுகளை மேற்கொள்ளவும். தொலைபேசி இலக்கம்: 011-2313756.




முதல் 25 முன்பதிவுகளுக்கு பெறுமதி வாய்ந்த பரிசுகள் வழங்கப்படும்

ஜோண் கீல்ஸ் ஒபிஸ் ஓட்டொமேஷன் (பிறைவேட்) லிமிட்டட் (JKOA) என்பது உலகப் புகழ்பெற்ற TOSHIBA மற்றும் RISO தன்னியக்க அலுவலக உபகரணங்களின் அதிகாரம்பெற்ற விநியோக நிறுவனமாகும்.

JKOA

ஜோண் கீல்ஸ் ஒபிஸ் ஓட்டொமேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்
320/1, யூனியன் பிளேஸ், கொழும்பு 02.
உதவிச் சேவை: 2445760, தொலைபேசி: 2313[illegible], தொலைநகல்: 2431745
மின்னஞ்சல்: helpdesk@jkoa.lk இணையத்தளம்: www.jkoa.com


Digitized by Noolaham Foundation.

## சேவை

யாழ்ப்பாணம் - கொழும்பு ஆகிய இடங்களில் Bookkeeping, Audit மற்றும் வரி சம்பந்தமான சேவைகளும் செய்து கொடுக்கப்படும்.

தொடர்புகொள்க. 0773746884

## கடைகள் வாடகைக்கு

யாழ்ப்பாணம் முனீஸ்வரன் வீதியில் அமைந்துள்ள கடைகள் வாடகைக்கு விடப்படும்.

தொடர்பு: த.சிறி, தொ.பேசி: 021 222 7416


## பதினொராம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 21 . 05 . 1981

உதிர்வு 25 . 08 . 1998

### செல்வி நாகேந்திரம் நிஷாலினி (சுகி)

(பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, பழைய மாணவி)

திதி: ஆவணிச் சதுர்த்தி (23.08.2009)

பாசமுடன் நாம் வளர்த்த பாசச்சுகி- நீ
பாரை விட்டேகி பதினொராண்டாயினும்- உன்
பாசம் இன்னும் குறையவில்லை- பாவிஎம் நெஞ்சில்
பார் உள்ளவரை பரந்து நிற்கட்டும் பாச நினைவலைகள்.

உமது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

'சுகிஸ்தான்', அல்வாய் தெற்கு, அல்வாய்.

உமது பிரிவால் என்றென்றும் வாடி நிற்கும்: பெற்றோர், உறவினர்கள்.

(88040)


## சிறுநீரகம் தேவை

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 20 வயதுடைய பெண் நோயாளி தற்போது கொழும்பு அப்பலோ மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். அவருக்கு உடனடி சிறுநீரக மாற்று சிகிச்சை அளிக்கப்பட வேண்டியுள்ளது. (B NEGATIVE or O POSITIVE)

தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கங்கள்: 071 4214856, 011 2721087

Study & Work UK, USA, Australia, Malaysia & Singapore. Courses available in any field

HOTEL MANAGEMENT
6 MONTHS STUDIES + 6 MONTHS PAID INTERNSHIP GUARANTEED
Courses available in any field

70% SCHOLARSHIP IN SINGAPORE FOR HIGHER STUDIES

Flex Advertising Institute
The School of Graphic Design
(A Subsidiary of Flex Graphic)

Hotline: 0777-761346
No: 4, IBC Road, Colombo 6.

## திருமணசேவை

சுலபமான வாழ்க்கைத் துணை தெரிவுக்குச் சுயதெரிவுமுறையே! சுயதெரிவுமுறை பற்றிய வரன்முறையைத் தெரிந்திட திங்கள், புதன், வெள்ளி மாலையிலோ சனி, ஞாயிறு நண்பகலிலோ மூத்த புகழ்பூத்த சுயதெரிவுமுறை முன்னோடி தனிமனித நிறுவுநர், சர்வதேச சகலருக்குமான திருமணம் ஆற்றுப்படுத்துநர், குரும்ப சிட்டியூர் மாயெழு வேல் அமுதனுடன் தொடர்புகொள்க. கொழும்பு நேரடித் தொலைபேசி: 2560488, 2560694, 4873929. (87870)

## ஐஸ்கிறீம் மெஷின்
## ICE CREAM MACHINE



கோன் ஐஸ்கிறீம்

- எல்லா விதமான ஐஸ்கிறீம்களும் தயாரிக்கும் முறைகள் இலவசமாக கற்பித்துக்கொடுக்கப்படும்.
- இந்த ஐஸ்கிறீம் இயந்திரத்தின் மூலம் ஒரே முறையில் மூன்று விதமான ஐஸ்கிறீம்கள் தயாரித்துக்கொள்ள முடியும்.
- சோயா ஐஸ்கிறீம் தயாரிப்பதற்கும் மிக வசதியானது.
- கோன் ஐஸ்கிறீம்கள் கூல்ஸ்பொட், ஸ்னெக்பார், ஹோட்டல்கள், கொமினிகேசன், பாமசி போன்றவற்றில் விற்பனைக்கு மிகவும் உகந்தது.

விற்பனைக்கு பின் நல்ல பராமரிப்பு சேவையும் உண்டு.

WORLDWIDE EXPORTS
201, காலி வீதி, இரத்மலானை. (பிரிவெனா வீதி சந்திக்கு அருகில்)
Tel: 011 2721259, 011 2721055, 011 2738143, 0714 726220

## தபால் மூல கல்வி (சகல பாடநெறிகளும் தமிழ் மொழி மூலம்) இதழியல் /முகாமைத்துவம் /மனையியல்

விசேட சலுகைகள் செப்டெம்பர் 15வரை

| | |
|---|---|
| Diploma in Business Management | - வியாபார முகாமைத்துவம் |
| Diploma in Human Resources Management | - மனிதவள முகாமைத்துவம் |
| Diploma in Marketing Management | - சந்தைப்படுத்தல் முகாமைத்துவம் |
| Diploma in Office Management | - அலுவலக முகாமைத்துவம் |
| Diploma in Journalism | - இதழியல் |
| Diploma in Journalism & Mass Media | - இதழியல் மற்றும் பொது மக்கள் தகவல் தொடர்பு |
| Diploma in Child Psychology | - குழந்தை மனையியல் |
| Diploma in Montessori Teaching | - முன்பள்ளி ஆசிரியை பயிற்சி |

★ வயதெல்லை இல்லை ★ வீட்டில் இருந்தே கல்வி கற்கலாம்
★ இந்திய பாடத்திட்டம் ★ இந்திய மற்றும் ஐரோப்பிய சான்றிதழ்

பாடநெறி முடிவில் இந்திய SIGMA நிறுவன Diploma சான்றிதழ் மற்றும் UK International Corporation for Professional நிறுவனத்தாரின் உறுப்புரிமை (Member Ship) AICP (UK) சான்றிதழ் வழங்கப்படும். AICP(UK) தகைமை பெற்றவர்கள் தங்கள் பெயருடன் Title ஆகப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு:


SIGMA INSTITUTE OF MANAGEMENT
*169, George R De Silva Mawatha, Kotahena, Colombo 13*
*(Near Sampath Bank)*
*Tel :- 011 2434989, 0750 119669, 060 2135834*

USHA it's a better life

யாழ்ப்பாண விநியோகத்தர்
ஜப்னா இலக்ரிக்கல்ஸ்
இல.94(6), ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 2353

உத்தரவாதத்துடன்

உஷா தையல் மெசின்
உஷா மின் விசிறி



இலங்கைக்கு இறக்குமதி செய்பவர்
நெல்சன்ஸ் என்டபிரைசஸ்
*124, முதலாம் குறுக்குத் தெரு, கொழும்பு - 11. Tel: 2343586*

விநியோகத்தர்
K.I.R.ஹோல்டிங்ஸ் பிரைவேட் லிமிடெட்
186-C,அனகாரிக தர்மபால மாவத்தை, தெஹிவல, தொ.பே.: 2713580

Dickson Ad.


## நூல் வெளியீடு

வலி.வடக்கு பிரதேச செயலக ஆயுள்வேதப் பாதுகாப்புச் சபையினால் மூலிகை மருத்துவ விடயங்களை ஆவணப்படுத்தும் முகமாக மூலிகை மருத்துவ நூல் வெளியிடப்படவுள்ளது. இந் நூலுக்குரிய கட்டுரைகளை செப்ரெம்பர் மாதம் 7 ஆம் திகதிக்கு முன்னர் டாக்டர் வெற்றிவேல் சக்திவேல், செயலாளர் ஆயுள்வேத மருத்துவ பாதுகாப்புச் சபை கிளப் வீதி, தெல்லிப்பழைஎன்னும் முகவரிக்கு சித்த மருத்துவர்கள், அறிஞர்கள், ஆய்வாளர்கள், ஆர்வலர்கள்தபாலில்அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

(50-29)


## STUDY SINGAPORE / MALAYSIA / UKRINE

COURSES :-
* Computing & IT
* Business & Management
* Banking & Finance
* Travel & Tourism
* Art & Design
* Engineering
* Hospitality
* Medical Sciences
* Language & Education.

Sponsor உதவிகள் / ஆலோசனைகள் வழங்கப்படும்

INTAKES
- September
- October
- November
- January

WE HELP YOU WITH :-
* Visa Consulting
* Visa Processing
* Career Advice
* Scholarship
* Installement Payment
* Accomodation
* Part Time Jobs
* Airport Pick Up

No Interview

Admissions From 'A' Grade Colleges & Universities.

MINIMUM QUALIFICATION :- O/L

CLASSES AVAILABLE AT SIEG
* English
* IELTS
* Degree Foundation in IT
* Degree Foundation in Management

STUDENT VISA
DEPENDENT VISA
TOURIST VISA
VISIT VISA
SPOUSE VISA
Consulting ற்கு அணுகவும்.

New Applications / Administrative Review Appeals போன்றவற்றுக்கு ஆலோசனைகள் வழங்கப்படும்

CONTACT :-
SIEG - SRIRAM INTERNATIONAL EDUCATION GROUP
169, George R De Silva Mawatha, Kotahena, Colombo - 13.
(Near Sampath Bank)
Tel: 011 - 2434989 / 060 - 2135834


# REQUEST FOR QUOTATION

IOM International Organization for Migration

## SUPPLY OF RADAR REFLECTORS, IOM, JAFFNA, SRI LANKA

1.The International Organization for Migration (**IOM**) is an intergovernmental organization established in 1951 and is committed to the principle that humane and orderly migration benefits both migrants and society.

2.In the framework of the Australian Agency for International Development (AusAID) funded ***"Community Rehabilitation and Socio-Economic Support for Conflict Transformation"***, the IOM now invites interested Suppliers to bid for **Supply of 2,715 units of Radar Reflectors, IOM, Jaffna**. The intended time for supply of the Radar Reflector is one (01) week.

3.A complete set of Request for Quotation documents in English can be obtained on submission of a written application:
To: Field Procurement & Logistic Executive
International Organization for Migration, No. 70, Temple Road, Jaffna.

From: **24th August 2009 to 28th August 2009 between 09:00 a.m. to 16:00 p.m.**

4.The deadline for the submission is scheduled as follows:
**Closing Date of Submission: 15:00 p.m. on 31st August 2009**

5.Quotation must be delivered either by registered post or hand delivered at the address specified above. It is the exclusive responsibility of suppliers to ensure that the sealed envelopes containing the quotation reach the above address before the specified closing time. Delivery to any other IOM office location will be at the risk of the supplier and will not constitute timely delivery. **Quotation received after the above mentioned closing time will be automatically rejected.**

6.For further details, please contact the IOM Field Procurement / Logistics Executive on 021 222 8620 or 021 222 7680 (up to 2.00 p.m.).

7.IOM reserves the right to accept or reject any bid, and to cancel the bidding process and reject all quotations at any time prior to contract award, without thereby incurring any liability to the affected bidders.

Sd/-

***The Chairman, Bids Evaluation and Awards Committee (BEAC)***
***International Organization for Migration, No. 70, Temple Road, Jaffna.***

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நமக்கென்றொரு....

(08 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

அதற்கு ஒருத்தன் "ஆமாப்பா! இப்படியே குடிச்சிட்டும் தின்னுக்கிட்டும் இருந்தாப் போதும்... எல்லாம் சரியாப் போயிடுமா? இன்னைக்கிக் கெழவிக்கு நாளைக்கி நமக்கு!" என்று சத்தம் போட்டான்.

"அட... நீ ஒண்ணு. நான் தமாசுக்குச் சொன்னா... நீ என்னமோ ஏதோன்னு கத்துறியே! எனக்கு மட்டும் பிரச்சினை புரியாதுங்கிறியா?" என்று ஒரு கேள்வியை அங்கே அனைவருக்கும் முன்னால் தூக்கிப் போட்டு விட்டுத் தனக்குள் பதில் தேடினான் துரைசாமி.

அங்கிருந்தவர்களின் நெஞ்சில் விசுவரூபமாய் ஒருகேள்வி கிளம்பியிருந்தது. கிழவியை எங்கே புதைப்பது? பரம்பரை பரம்பரையாகத் தேயிலைத் தோட்டத்தையே தங்கள் உலகமாக்கிக் கொண்டு அதற்குள்ளேயே வாழ்ந்து, உழைத்து வந்தவர்களுக்கு இன்று செத்த பின்னர் எங்கே புதைப்பது என்றாகி விட்டது. உழைப்பவர்களுக்கு உலகமே மண்டியிடும் என்று ஆங்காங்கே மேடையில் முழங்குகிறார்கள். கேட்க இனிமையாக இருக்கிறது ஆனால் இங்கே இந்தத்தோட்டத்தில் உழைத்து அங்கேயே செத்தவர்களைப் புதைப்பதற்கு இடம் தேட வேண்டி இருக்கிறது.

தோட்டங்களை அரசாங்கம் தேசியமயமாக்கியபோது அந்தத் தோட்டம் முதலாளிக்கு ஒரு பாதி. அரசுக்கு மறுபாதி என்று பிரித்தது. கோயில், மயானம் முதலாளியின் கைக்குப் போய் விட்டது. பள்ளிக்கூடம் மாத்திரம் அரசு தோட்டத்தில் சேர்ந்தது. இது நடந்து பல ஆண்டுகள் ஆகிவிட்டன. இன்றுவரை இப்படி ஒரு பிரச்சினை வரவேயில்லை. அதற்குக் காரணம் யாரும் இதுவரை சாகவில்லை. இப்போதுதான் கிழவி செத்திருக்கிறாள். பிரச்சினை வந்தது. பிரச்சினையைத் தீர்க்கத்தான் இந்தக் கூட்டம்.

தலைவர் பேசினார். "தோட்டத்தைக் கவுருமெண்டு எடுக்கிற நேரம் இதைப் பத்திப் பேசியிருந்தா இன்னைக்கு இந்தப் பிரச்சினையே இல்ல. அன்னைக்கி நாங்க எல்லாரும் தோட்டத்த கவுருமெண்டு எடுத்தோன்ன எங்களயெல்லாம் வெளியே போட்டிருவாங்கன்னு தான் பயந்துக்கிட்டிருந்தோம். பரம்பரை பரம்பரையா பொதைச்ச மயானம் மொதலாளிவூட்டுத் தோட்டத்தோட போயிருச்சி!.... இப்ப இப்படி ஒரு பிரச்சினை வரும்னு யாரும் நெனைக்கல்ல... என்ன செய்யிறது?"

"பழைய மொதலாளியக் கேட்டா என்ன?" - இது ஒரு குரல்.

"மொதலாளி இங்க இல்லியே! டவுன்ல இல்ல இருக்காராம்!"

"டவுன்ல இருந்தா என்ன... விடிய முந்திப் போய் பார்ப்போம்!"

"சரி.. அவரு தரல்லேன்னுட்டாரு. அப்ப என்னா செய்யிறது?"

- இப்படிப் பல குரல்கள். கடைசியாக வேலுவின் குரல்.

"ஏனய்யா போக முந்தியே ஒப்பாரி வைக்கிறே! போய்க் கேட்டுப் பார்ப்போம்! இல்லேன்னா நம்ம தொரயக் கேப்போம்."

"ஆமா.. அதுதான் சரி.. அப்படியே செய்ங்க..!"

- இது மற்றவர்கள்.

விடிந்ததும் காலையில் டவுனுக்குச் சென்று முதலாளியைச் சந்திப்பது, அதன் பின்னரே மற்ற நடவடிக்கை என்று தலைவர் அறிவித்துக் காலையில் தன்னோடு டவுனுக்குப் போகச் சிலரைத் தெரிவு செய்து கொண்டார். அந்த மட்டில் அன்றைய கூட்டம் முடிந்தது.

விடிந்ததும் தலைவரும் மற்றவர்களும் வெறும் சாயத்தை மாத்திரம் குடித்துவிட்டு டவுனுக்கு ஓடினார்கள். டவுனில் இருக்கிற முதலாளியின் பங்களாவிற்கும் தோட்டத்திற்கும் இரண்டரை மைல் தூரம். அரை மணித்தியாலத்தில் அவர்கள் பங்களாவில் இருந்தார்கள். அவர்களைக் கண்டதும் முதலாளி நெற்றியைச் சுளித்தார்.

தலைவர் விடயத்தை மென்று விழுங்காமல் நேரடியாகவே சொன்னார். ஆனால் முதலாளி மறுத்துவிட்டார். கொழுத்த லாபம் தரக்கூடிய விளைச்சல் பகுதியை எடுத்துக் கொண்டு 'கரடு முரடான' பகுதியை அவருக்குக் கொடுத்ததில் அரசாங்கத்தின் மீது அவருக்குக் கோபம். தோட்டத்தைப் பிரித்ததினால் வருடத்தில் பல லட்சம் நஷ்டம் அவருக்கு. அந்த நஷ்டத்தையே நினைத்துக் கொண்டிருக்கிற அவரா செத்த கிழவிக்கு இடம் கொடுக்கப் போகிறார். தலைவரும் மற்றவர்களும் மறுபடியும் கேட்டுப் பார்த்தார்கள். முதலாளி அசையவே இல்லை.

தோல்வியைச் சுமந்துகொண்டு அவர்கள் லயத்திற்குத் திரும்பினார்கள். அப்படியே அரசாங்கத் தோட்டத்துத் துரையிடம் போனார்கள்.

துரையிடமிருந்து ஒரே ஒரு கேள்விதான் பதிலாக வந்தது.

"பொணம் பொதைக்க இங்க இடம் இருக்கா?"

"நீங்கதான் ஒரு இடத்தைப் பார்த்துச் சொல்லுங்க..." தலைவர் யோசனை சொன்னார்.

"புதுசா இடம் சொல்லவா? அதுக்கு கெட் ஓப்பீசில இருந்து லெட்டர் வரணும்" துரை அடித்துச் சொன்னார் அடிக்கடி தொழிற் சங்கத் துணையோடு பிரச்சினைக்காக வந்து அவர் தனக்குப் பிரச்சினை கொடுப்பதாக அவர் நினைவு! அதை இப்போது பழி வாங்கிக் கொண்டார். அவர் நினைத்தால் மனிதாபிமானத்தில் புதைக்க இடம் கொடுக்கலாம்.

"லெட்டர் வர்ர வரைக்கும் பொணத்தை வைச்சிருக்கேலுமா?"

சங்கிலித் தொடர்களாய்த் துரையும் தலைவரும் பேசினார்கள். கடைசியில் துரை கையை விரித்து விட்டார். தலைவரும் மற்றவர்களும் வேகமாக, ஆனால் எரிமலைக் குமுறலை நெஞ்சில் அடக்கிக் கொண்டு லயத்திற்குத் திரும்பினார்கள்.

லயத்தில் அப்போதே ஒரு கூட்டம் கூடியது. அந்தக் கூட்டத்தில் நிறைப் பேர் கூடியிருந்தார்கள். அவர்கள் அத்தனை பேரும் நெருப்பை மிதித்தவர்களைப் போல் இருந்தார்கள். பணியலயத்திலிருந்து "தப்புச்" சத்தம் வேறு கிளம்பிக் கொண்டிருந்தது. அது புதிய சரித்திரத்தைத் தொடங்க முழங்கும் சத்தமாக இருந்தது. கூட்டத்தில் ஒருத்தி ஒப்பாரி வைத்தாள்.

"தேயிலைத் தூருக்கே ஒழைச்சி ஓடாகிப் போன கெழவிக்கு இதே தேயிலைத் தோட்டத்தில் பொதைக்கக் காணி இல்லியாமே. இது அநியாயமுங்க..."

அதற்கு இன்னொருத்தி பதில் ஒப்பாரி வைத்தாள்.

"என்னைக்கி இந்தியாவில இருந்து வெள்ளைக்காரன நம்பித் தேயிலை தூரில மாசி பொறுக்க வந்தோமோ அண்ணையில இருந்து இதே பிரச்சினைதான். இன்னும் முடியில்ல..."

ஒருத்தி பாட்டே பாடினாள்!

"கொட்டும் மழையில உயிர்
கொல்லும் குளிரில
எரிக்கும் வெய்யில்ல
எக்காலம் நா உழைச்சோம்!
எக்காலம் உழைச்ச நமக்கு
எட்டடி பூமி இல்ல ஆண்டவனே!"

அவர்களின் ஒப்பாரிக்குத் தாளம் போடுவது போல் தப்புச் சத்தமும் சங்கின் சத்தமும் ஒலித்தது. அதையெல்லாம் கவனித்துக் கொண்டிருந்த வேலுவின் நெஞ்சில் பிரசவ வேதனை. நேரம் செல்லச் செல்ல அவன் நெஞ்சில் இருந்து எண்ணக் குழந்தை பிறந்தது.

1977. இந்த ஆண்டை எந்தத் தமிழனும் மறக்க முடியாது. அந்த ஆண்டு தமிழனுக்கெதிரா[illegible]கஸ்ட் மாதத்தில் இலங்கையில் நடந்த கலவரத்தில் பாதிக்கப்பட்ட அந்தத் தோட்டத்தைச் சே[illegible]த 'தப்படிக்கிற' சுப்பன் மூட்டை முடிச்சைத் தூக்கிக் கொண்டு பிள்ளை குட்டிகளோடு வன்னி மண்ணில் காலடி வைத்தான். போவதற்கு முன் அவனையும் அழைத்தான்.

"இனிமே தோட்டத்தில இருக்கிறதுல அர்த்தமில்ல. இன்னும் எத்தன வருசம் நாங்க இங்க இருந்தாலும் நமக்கு கஷ்டம்தான்... சொந்தமா எட்டடி மண்ணுகூட இருக்காது! முந்தி மொதலாளிமாருக தோட்டத்துச் சொந்தக்காரனுக. இப்ப அரசாங்கம் தோட்டதை எடுத்தபொறகு யார் யாரோ கால்சட்டை போட்டுக்கிட்டுச் சிங்களப் பயலுக தொரமாரா வர்றானுக. வர்ர நேரம் நெத்தலிப் பயில்வான் மாதிரி வர்றானுங்க. ரெண்டு மூணு வருசம் இருந்தோன்ன பயில்வான் மாதிரி கொழுத்திடறானுங்க. கவுருமெண்டு எதுக்குத் தோட்டத்த எடுத்தானுக தெரியுமா? சிங்களப் பயலுகளுக்கு வேலை கொடுக்கவும் அவனுக, தோட்டத்தில கொள்ளையடிக்கவும் தான்! தோட்டத்த கவுருமெண்டு எடுத்து காலம் காலமா ஒழைச்சிட்டு வந்த நமக்கு என்னத்தான் செஞ்சிருக்கானுக... நாங்க ஒழைச்சி ஓடாக வேண்டியதுதான்... பொதைக்கக்கூட சொந்தக் காணி இல்ல.... அதைக் கூடக் கேட்டுத்தான் பொதைக்கணும்!"

அவன் சொன்னது இன்று சரியாகப் போய் விட்டது. அவன் இன்று 'கிளிநொச்சியில் விவசாயம் செய்கிறான். போன மாதம் ஒரு கடிதம் எழுதியிருந்தான். அவன் அந்தக் கடிதத்தில் சில வரிகள் அவன் நெஞ்சில் இப்போது மின்னின.

"வேலு! நீ குடும்பத்தோட வர்றதுன்னா வா. காணி, பூமி குத்தகைக்கு வாங்கித் தாறேன். எனக்கு இப்ப சொந்தக் காணி, பூமி, மண் குடிசை இருக்கு! தோட்டத்தில இருந்தா என்னதான் சொந்தமா இருக்கு?.... என்னைய வுடேன்... இப்ப ஒனக்கு என்னதான் சொந்தமா இருக்கு சொல்லு!

டவுன்ல கொறஞ்ச வாடகை வீட்டுல இருக்கிறவங்களுக்கு இருக்கிற வீடு சொந்தமாம். நாங்க தோட்டத்தில் பரம்பரையா ஒழைச்சோம்! என்னா சொந்தமா இருந்திச்சி, இருக்கு? எத்தன நாளைக்கித்தான் சொ[illegible]டு, வா[illegible], காணி, பூமி இல்லாம இருக்கிறது? நமக்குன்னு ஒரு பூமி வேணும் இல்ல. ஒடனே வா!"

அவன் நினைவுகள் மெல்லக் கரைந்து அந்தக் கூட்டத்தோடு கலந்தது. தலைவர் பேசிக் கொண்டிருந்தார்.

"மொதலாளிக்கிட்டேயும் கேட்டாச்சி! தொரைக்கிட்டேயும் கேட்டாச்சி! சரிவரல்ல... இப்ப என்னா செய்யிறது? வளவளன்னு பதில் சொல்லாமப் பேசுங்க.."

ஒருத்தரும் பேசவில்லை. கடைசியில் தலைவரே பேசினார்.

"இனி யாரையும் கேட்டுக்கிட்டிருந்தாச் சரிவராது. இது நம்ம பூமி! நம்ம பரம்பரை கஷ்டப்பட்டு ஒழைச்ச பூமி! பரம்பரைய பொதைச்ச பூமி! கெழவிய இங்க இந்த மண்ணில்தான் பொதைக்கணும். நீங்க சரின்னு சொல்லுங்க நான் குழி வெட்டுறேன். தோட்டத்துக்கு மேற்குப் பக்கம் ஆத்தோரமா குச்சிச் செடி காடு இருக்கு... அங்க குழி வெட்டுவோம் ஆளுக்கொரு மண்வெட்டியோட வாங்க..."

அடுத்த சில நிமிடங்களில் ஆளுக்கொரு மண்வெட்டியோடும் கத்திகளோடும் குழிவெட்டக் கிளம்பினார்கள். வேலுவும் அவர்களோடு போனான். ஆனால் மனதில் பயமிருந்தது. குழி வெட்டும்போது துரை வந்தால்....?

அப்போதுதான் மறுபடியும் அவனுள் கிளிநொச்சியிலிருந்து வந்த "தப்படிக்கிற' சுப்பனின் கடிதத்தின் வரிகள் நெஞ்சில் மின்னத் தொடங்கின...

"நமக்குன்னு ஒரு பூமி வேணும் இல்ல... ஒடனே வா...!" வேலு ஆவேசத்தோடு மண்வெட்டியை ஓங்கத் தொடங்கினான். ★

[நன்றி:'மலையகச் சிறுகதைகள்' சிறுகதைத் தொகுதி]

## சொற்சிலம்பம் - போட்டி இல:75

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | 4 | | ■ | 5 |
| 6 | | ■ | 7 | | ■ | 8 | |
| 9 | | 10 | | ■ | 11 | | |
| | ■ | | ■ | 12. | | | ■ |
| ■ | 13 | | 14 | | ■ | 15 | 16 |
| 17 | | | | ■ | 18 | | |
| 19 | | | ■ | 20 | | ■ | |
| 21 | | ■ | 22 | | | | |

அனுப்புபவர் பெயர்:..............................

விலாசம்:..............................

..............................

கையொப்பம்:..............................

### மேலிருந்து கீழ்

1. தேவாரம்.
2. முழுவதை வெட்டினால் உருவாகும் பகுதி.
3. இரத்தம்.
4. மகிழ்ச்சியால் வருவதை பேச்சுவழக்கில் இப்படியும் அழைப்பர்.
5. திடீரென - திடுதிப்பென என்பதைக் குறிக்கும்.
8. கடவுளை நம்பாதவன்.
10. மறைவில் செய்வது.ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்துக்கு இரகசியமாக எடுத்துச் செல்வது.
11. உள்நுழை/ உட்செல்லு.
12. இணைக்கச் சொல்.
13. தலைமுறை.
14. தன்னிலை குறிப்பது.
16. படை.
17. பாக்குத் தருவது.
18. கருமையைக் குறிக்கும்.
20. மறி.

### இடமிருந்து வலம்

1. யுத்தகாலத்தில் தாக்குதல்களிலிருந்து பாதுகாப்புத் தருவது.
6. வலிமை/ பலம்.
7. சுவை.
8. தேசம்.
9. வேகத்துடனான சேவை
11. அறிவு.
12. யாகத்தில் ஓமத் தீயில் இடப்படுவது.
13. ஒலி.
15. சவுக்கு.
17. முருகனுக்கு ஒரு பெயர்.
18. திருமணமாகாத பெண்.
19. வியாபாரம் ஒன்றை ஆரம்பிக்க இது தேவை.
20. மரம்.
21. பாய்.
22. தகப்பன்- தாய்- பிள்ளைகள்.

### போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் மூன்று பேர்களுக்கு முறையே ரூபா 250/=, ரூபா 150/=, ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப்பெறும் ஐந்து அதிஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.
6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,

**சொற்சிலம்பம் போட்டி இல. 75**
நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்)லிமிட்டெட்,
இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், 02.09.2009 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

7. சொற்சிலம்பம் போட்டி இல. 75இல் வெற்றிபெறுவோர்களது விவரம் 06.09.2009 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

★ வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத்தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 73 இற்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**
(1)உபதேசம் (5)பாகு (7)கலக்கு (8)ஆண்டு (9)கனிதல் (11)தவம் (13)நாபி (14)நம்பன் (16)அதிகம் (18)தகுதி (20) கபடி (21)பனி (22)தின் (23) வேண்டுதல்.

**மேலிருந்து கீழ்**
(1)உகந்த (2)பல (3)தேக்கம் (4)சகுனி (5)பாண் (6)குடும்பி (8)ஆல் (10)தலம் (12)வயோதிபன் (13)நான்கு (14)நம் (15)பதனிடு (16)அகதி (17)கடி (19)திடல் (21)பண்.

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 73 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விபரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு** முரளிதரன் பிரதீப்,
உசனை, மணல் ஒழுங்கை,
தும்பளை, பருத்தித்துறை

**2 ஆம் பரிசு** கி.வே.கிருஸ்ணாநந்தன்,
இல.77, சிவன் பண்ணை வீதி,
யாழ்ப்பாணம்.

**3 ஆம் பரிசு** த.பரமேஸ்வரன்,
கந்தையா உபாத்தியாயர் வீதி,
கந்தரோடை, சுன்னாகம்

பரிசுக்கு உரியோராகத் தேர்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி 'உதயன்' அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.

### பாராட்டுப் பெறுவோர்

(1) செல்வி.நி.[illegible]
புனித அந்தோனியார் கோயிலடி,
நாவற்குழி, கைதடி.

(2) ப.பிரான்சிஸ்,
புனித சூசையப்பர் முதியோர் இல்லம்,
[illegible]

(3) [illegible]
புளியங்கூடல் வடக்கு, ஊற்காவற்றுறை.

(4) திருமதி ரோகினி குமாரு,
இல.19/2, புகையிரத வீதி, கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

(5) சுந்தரேஸ்வரன் பூர்வஜா
மாதகல் கிழக்கு, மாதகல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வித்துறை வீழ்ச்சியின் பிரதான காரணிகள் அனுமதிமுறை, பாடப்புத்தக விநியோகம் தராதரம் பார்த்தல் போன்ற சீர்கேடுகளே

இலவசக் கல்வி முறை மூலம் அதிஉயர் கல்வியறிவை இலங்கையில் ஏற்படுத்த காலகாலமாக பல்வேறு நடைமுறைகள் வந்தவண்ணமுள்ளன. எனினும் பாடசாலைகளில் நிகழ்ந்து வரும் குளறுபடிகளும் சீர்கேடுகளும் இவற்றுக்கு முட்டுக்கட்டையாகவே விளங்குகின்றன. பாடசாலை அனுமதி, பாடப்புத்தக விநியோகம், தராதரம் பார்த்தல் என்பன போன்ற பல சீர்கேடுகள் எமது கல்வித்துறையில் மலிந்திருப்பது 'ட்ரான்ஸ்பேரன்சி இன்டர்நஷனல் ஸ்ரீ லங்கா நிறுவனம்'



நடத்திய ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

சிறுவர்களின் பாடசாலை அனுமதி, முக்கியமாக தரம் 1இற்கு மற்றும் அதில் ஊழல் இடம்பெறுவது என்பன பாடசாலை அமைப்புக்குள் அதிகம் பேசப்படும் விடயம் ஆகும். சட்ட விரோதமாகக் கொடுப்பனவுகள் மேற்கொண்டமை அல்லது பாடசாலையின் பிள்ளைகளை அனுமதிக்க செல்வாக்கைப் பயன்படுத்தியமை போன்றவற்றை ட்ரான்ஸ் பேரன்சின் ஆய்வுக்கு உட்பட்ட பலரும் தெரிவிக்கவில்லை.

பிள்ளைகளுக்கான தரம்1இற்கான அனுமதி பற்றி பெற்றோர் கவனிக்கையில் பாடசாலைகளின் பிரசித்தம் முக்கிய பங்கு வகிக்கின்றது. பரீட்சைப் பெறுபேறுகளுக்கு மேலதிகமாக பாடசாலையின் பிரசித்தம் (உயர்ந்த தரத்திலான பாடசாலையா?) பாடவிதானத்துக்குப் புறம்பான நடவடிக்கைகள், விளையாட்டு வசதிகள் மற்றும் ஆங்கிலம் கற்பித்தல் என்பனவற்றை தமது பிள்ளைகளுக்கு பாடசாலை அனுமதி கோரும்போது மத்தியதர இல்லங்கள் கவனத்தில் எடுத்துக்கொண்டன. பல பெற்றோர் தமது பிள்ளைகள் பரீட்சைகளில் சித்தியடையாவிட்டாலும் சிறந்த பாடசாலையின் பழைய மாணவர்களாக இருப்பின், தனியார் துறையில் வேலை வாய்ப்பைப் பெறமுடியும் என்ற கருத்தைக் கொண்டிருந்தனர்.

### சிறந்த பாடசாலைகளுக்கான போட்டி

சிறந்த பாடசாலைகளுக்கான கிராக்கி பெரும் போட்டிக்கு வழிவகுத்தது. இது பாடசாலைகளிடையே வேறுபாடுகளை உருவாக்கியது. இது ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சை மற்றும் ஜி.சீ.ஈ. சாதாரண தரம்,

## உள்நோக்கு

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை என்பவற்றில் மாணவர்களின் செயற்பாட்டின் மூலம் பிரதிபலித்தது. ஆய்வின் பிரகாரம், அதிகரித்த போட்டி ஊழலுக்கு வழிவகுத்தது என்று 50வீதமான அதிகாரிகள் ஒப்புக்கொண்டனர். பாடசாலை அனுமதிகளுக்கான நடைமுறையைத் தெரியப்படுத்தும் கல்வி அமைச்சின் சுற்றுநிரூபம் 2006/20இல் வசதிக்கட்டணம், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்திற்கான கட்டணம் தவிர்ந்த வேறு கட்டணம் அறவிடப்படுவதை தடை செய்யும் பிரிவு 1,5 என்பன மீறப்பட்டதை இது சுட்டிக் காட்டுகிறது. சுற்று நிருபத்தில், ஆகக் கூடிய அல்லது

## சுயநலத்தை முன்நிறுத்தி நடைபெறும் இவற்றைக் களையும் பொறுப்பு பெற்றோர், பாடசாலைச் சமூகத்தினரிடமே

ஆகக் குறைந்த கட்டண எல்லை நிர்ணயிக்கப்படாதிருப்பது நிலைமையை மேலும் மோசமாக்கியுள்ளது.

யாழ். குடாநாட்டிலும்பெற்றோரிடமிருந்து பெருந் தொகைப் பணத்தை அறவிட்டபின்னரே பிள்ளைகளை புதிய அனுமதியில் உள்வாங்கும் செயற்பாடுகள் பிரபல பாடசாலைகளில் தொடர்ந்தபடி இருக்கின்றன.

இதுபற்றி பலர் சுட்டிக்காட்டியபோதும் இன்றளவும் இந்நிலையில் மாற்றமேதும் நிகழவில்லை.

### வதிவிட விதிமுறைத் துஷ்பிரயோகம் செய்தல்

பாடசாலைக்கு அண்மையில் வசிப்பது ஒரு முக்கிய அம்சம் என்ற வகையில் தரம் ஒன்றிற்கான நடைமுறை பிள்ளைகள் குறிப்பிட்ட விதிமுறையை பூர்த்தி செய்யும் தேவையைக் கொண்டுள்ளது. இது எப்படியோ ஊழலுக்கு வழி வகுத்துள்ளது.

குறிப்பிட்ட காலத்திற்கு முன்னதாகவே சில பெற்றோர் ஏற்பாடுகள் செய்வதை இந்த ஆய்வு புலப்படுத்தியுள்ளது. பாடசாலைக்கு அண்மையில் வீட்டைக் கொள்வனவு செய்தல், குத்தகைக்கு எடுத்தல் அல்லது வாடகைக்கு எடுத்தல் என்பது ஒரு முயற்சியாக உள்ளது. பல பெற்றோர் குறுக்கு வழிகளைப் பயன்படுத்துகின்றனர். இத்தகைய செயற்பாடுகள் ஊழலுக்கான வழிமுறையாகக் காணப்படுகிறது. அநேகமாக, குடும்பம் பாடசாலைக்கு அண்மையில் வசிக்கிறதா என்று கிராம சேவகரின் அத்தாட்சிப் பத்திரம் தேவைப்படாத போதிலும், வதிவிடம் பற்றி உண்மை நிலையைப் பார்க்கும்படி கிராமசேவகர்களை அதிபர்கள் கேட்பதுண்டு. இது சிலவேளைகளில், பெற்றோர் சான்றிதழை பெற முற்படாது விலை கொடுத்து வாங்குவதற்கு வழியமைத்துள்ளது.

வதிவிட விதியானது, வாடகைக்கு அல்லது குத்தகைக்கு எடுக்கப்படும் வீடுகளில் வசிக்கும் பெரும் எண்ணிக்கையிலான சிறுவர்களையும், ஆங்காங்கு சிதறி வாழும் வறிய குடும்பச் சிறுவர்களையும் பாதித்துள்ளதாக 90வீத ஆசிரியர்களும் 95வீத உத்தியோகத்தர்களும் ஒப்புக் கொள்கின்றனர். முக்கியமாக கண்டியின் பிரசித்த பாடசாலைகளுக்கு சமீபமாக பாரம்பரியமான ஆலயங்களுக்குச் சொந்தமான காணியில், பல குடும்பங்கள் வாடகைக்கு அல்லது குத்தகைக்கு வசித்து வருகின்றன. எனினும், வதிவிடத்தை நிரூபிக்க தகுந்த ஆவணங்கள் இல்லை என்ற அடிப்படையில் இவர்கள் அருகில் உள்ள பிரசித்த பாடசாலைகளுக்கு அனுப்பிய விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. வதிவிடத் தேவை பல குறைபாடுகளைக் கொண்டிருப்பதாக 80வீத ஆசிரியர்களும் 81வீத உத்தியோகத்தர்களும் கருதுகின்றனர். 60 -70வீத ஆசிரியர்கள் இது ஊழலுக்கு வழிவகுக்கும் என்று ஏற்றுக் கொண்டுள்ளனர்.

பாடசாலை அனுமதித் திட்டத்தின் கீழ் ஒரு பிள்ளைக்கு வழங்கப்படும் புள்ளிகள் குறித்தும், சில பெற்றோர் கேள்வி எழுப்பியுள்ளனர்.

### தரகர்களின் வகிபாகம்

எப்போதுமே தமது பிள்ளைகள் பிரபல பாடசாலைகளில் கல்வி கற்கின்றார்கள் என்று சொல்லிக்கொள்வதில் பெருமையடையும் பெற்றோரே யாழ்ப்பாணத்தில் அதிகம். இதற்காக தமக்கு மிக அண்மையில் உள்ள பாடசாலையில் தமது பிள்ளைகளைச் சேர்க்காது மிகத் தொலைவில் உள்ள- நகரப் புறப் பாடசாலைகளில் அவர்களை இணைப்பதி லேயே குறிப்பாக உள்ளனர். இதனால் பொருளாதார ரீதியாக பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொண்டாலும் கூட அவற்றையும் பொருட்படுத்தாது தமது பிள்ளைகள் பெரிய பாடசாலைகளில் படிப்பதையே அநேகர் விரும்புகின்றனர்.

இதனால் சில பகுதிகளில் தரகர்கள் கட்டணம் அறவிட்டுக் கொண்டு தேவையான ஆவணங்களைத் தயார் செய்வதுடன் பிரபல பாடசாலை அனுமதிக்கான உத்தரவாதத்தையும் வழங்குகின்றனர். அதிபர்கள், அனுமதிக்கான நேர்காணல் சபை உத்தியோகத்தர்கள் ஆகியோருடன் நெருக்கமான உறவைக் கொண்டிருப்பதாகக் கருதப்படும் இந்தத் தரகர்கள்,

ட்ரான்ஸ்பேரன்சி இன்டர்நஷனல் ஸ்ரீலங்கா நிறுவனம் வெளியிட்டுள்ள "இலங்கையின் கல்வித்துறை: ஊழல்களும் பரிமாணங்களும்" என்ற ஆய்வினை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட கட்டுரை இது

பெருந்தொகைப் பணத்தை சில சமயங்களில் பல லட்சம் ரூபாக்களை அறவிட்டுள்ளனர். இவர்களின் வகிபாகம் பற்றி ஏனைய பகுதிகளைப் பார்க்கிலும் காலியில் கூடுதலாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தரகர்கள் மூலம் குறுக்கு வழியைப் பயன்படுத்தி பாடசாலை அனுமதியைப் பெறும் நடைமுறை நமது பிரதேசத்தில் குறைவென்றுதான் கூற வேண்டும். எனினும் இந்த ஆய்வு நிகழ்த்தப்பட்ட பிரதேசங்களில் இந்த நடைமுறை தாராளமாக இருப்பதையும் அறியமுடிகின்றது.

தொடர்ந்து அந்தரங்கமாகப் பேணப்படும் என்று உறுதிமொழி வழங்கப்பட்ட போதிலும், பாடசாலை அனுமதி பற்றிய கேள்விக்குப் பதில் அளிப்பதில், மதிப் பீட்டுக்கு உட்படுத்தப்பட்டோர் தயக்கம் காட்டுவது தெரிய வந்துள்ளது. அவர்களின் சிறுவர்கள் ஏற்கனவே பாடசாலை யில் கல்வி கற்பதால் அவர்கள் பழிவாங்கப்படுவார்களோ என்று பயத்தின் காரணமாகப் பதிலளிக்க விரும்பவில்லை.

சில இல்லங்கள் (8.1வீத அல்லது 81 இல்லங்கள்) அதிபர்களுக்கு லஞ்சம் கொடுத்ததாக ஒப்புக் கொண்டுள்ளன. இவர்களில் 38வீத கண்டியில் இருந்தும், 18.5வீத அனுராதபுரத்தில் இருந்துமாகும். ஏனைய குறிப்பிடத்தக்க இடங்கள் காலி/ஹிக்கடுவை, நுவரெலியா என்பனவாகும். அதிபர்களுக்கு லஞ்சம் வழங்கிய சுமார் 57வீத இல்லங்கள் மத்திய தர வகுப்பைச் சேர்ந்தவை. 14 வீத ஆசிரியர்களும், உத்தியோகத்தர்களும் கூட தமது பிள்ளைகளை அனுமதிப்பதற்கு பெருந்தொகைப் பணத்தை அதிபர்களுக்கும்/ பாடசாலைகளுக்கும் வழங்கியுள்ளனர்.

பாடசாலை அனுமதி தொடர்பாக அதிபர்களுக்கு லஞ்சம் கொடுத்த குடும்பம் பற்றித் தெரியுமா என்று கேட்கப்பட்டபொழுது, 36வீத ஆசிரியர்கள், 34வீத உத்தியோகத்தர்களும் ஆம் என்று பதிலளித்தனர். பாடசாலைகளுக்கு சிறுவர்களை அனுமதிப்பதற்கு அதிபர்கள் வழமையாக லஞ்சம் வாங்குகின்றனர் என்பதே 89வீத ஆசிரியர்களினதும் 81வீத உத்தியோகத்தர் களினதும் கருத்தாகும். 90வீத ஆசிரியர்களும் உத்தியோகத்தர்களும் இதனைக் கண்டித்திருப்பது சுவாரஸ்யமான விடயமாகும்.

சுமார் 155 இல்லங்கள் (15.5வீத) தாம் பெருந்தொகைப் பணத்தை பாடசாலை அபிவிருத்திச் சங்கங்களுக்கு வழங்கியதாகவும், சுமார் 5வீதத்தினர் அரசியல்வாதிகளைத் தொடர்புகொண்டதாகவும், 7வீதத்தினர் உயர்கல்வி அதிகாரிகளை நாடியதாகவும் தெரிவித்தனர். பெற்றோர் அரசியல்வாதிகளுடன் தொடர்பு கொண்ட சம்பவங்கள் பற்றி தமக்குத் தெரிந்திருந்ததாக 19வீத ஆசிரியர்களும், 41வீத உத்தியோகத்தர்களும் தெரிவித்தனர்.

பாடசாலைகளில் சிறுவர்களை அனுமதிப்பதற்கு கல்வி உத்தியோகத்தர்கள் தமக்குத் தெரிந்த குடும்பங்களுக்கும், உறவினர்களுக்கும் உதவுவதாக 98வீத ஆசிரியர்களும், 89வீத உத்தியோகத்தர்களும் அறிவித்துள்ளனர்.

பிள்ளைகளுக்கு அனுமதி பெறுவதற்கு பெற்றோர் பாடசாலைகளுக்கு அநேகமான அன்பளிப்புக்களை வழங்கினர். சிலர் அந்தக் கொடுப்பனவுகளுக்கும் அப்பால் சென்று வகுப்பறைகளை அமைத்துக் கொடுத்தனர் அல்லது பாடசாலைக்குத் தளபாடங்களைக் கொள்வனவு செய்து கொடுத்தனர். இவை ஊழல் நடவடிக்கைகளா என்று கேட்டபோது, 21.4வீத ஆசிரியர்களும், 23உத்தியோகத்தர்களும் இவ்வாறு நினைக்கவில்லை. ஆனால், பாடசாலைகளை மேம்படுத்தத் "தாமாக விரும்பி வழங்கிய அன்பளிப்புகள்" என்றே கருதினார்கள். எனினும், எஞ்சிய 78.6வீத ஆசிரியர்களும், 77வீத உத்தியோகத்தர்களும், இந்த நடைமுறைகள், ஊழலை சிறிது புலப்படுத்துவதாக ஒப்புக்கொண்டனர்.

ஆய்வுக்குட்பட்ட பலரும் குறிப்பிட்டதுபோன்று, பாடசாலை அனுமதிக்கு "தகுந்த" திட்டம் இல்லாமை பல்வேறு வகையான ஊழலுக்கான காரணமாக உள்ளது. 2008/21 சுற்று நிருபத்தில் குறிப்பிடப்பட்டபடி புதிய அனுமதி நடைமுறைப் பிரச்சினைகளுக்கு வழிவகுக்கும் என்று 80 -85வீத ஆசிரியர்களும் உத்தியோகத்தர்களும் கருத்துகையில், பாடசாலைகளுக்கு அண்மையில் வசிப்பவர்களுக்கும், பாடசாலைப் பழைய மாணவர் களுக்கும், தமது பிள்ளைகளை அனுமதிப்பதில் இது உதவவில்லை என்று பெற்றோர் குறிப்பிடுகின்றனர்.

அனுமதி நடைமுறையில் உள்ள பிரச்சினைகளால், சில பிள்ளைகள் பாடசாலை நேரத்தை சில சமயம் ஓராண்டு வரை இழந்தனர். சுமார் 8வீத ஆசிரியர்களும் 22வீத உத்தியோகத்தர்களும் இத்தகைய பிள்ளைகள் பற்றி அறிந்திருப்பதாகத் தெரிவித்தனர்.

அனுமதி விதிமுறையில் குறைபாடு, பிரசித்த பாடசாலைகளுக்கான அனுமதியில் தீவிர போட்டி என்பவற்றினாலும் பாடசாலை அனுமதியில் ஒழுங்கீன நடவடிக்கைகள் இருப்பது தெரிகிறது. இது சிறுவர்கள் கல்வியைப் பெறுவதில் மாத்திரமல்லாது சமத்துவத்திலும், பாதிப்பை ஏற்படுத்தியது. காரணம் வசதியான பெற்றோர், பாடசாலைகளில் தம் பிள்ளைகளை சேர்ப்பதற்கு லஞ்சம் வழங்கவும், அல்லது செல்வாக்கைப் பயன்படுத்தவும் முடிந்த நிலையில் ஏனையோர் இதனால் பாதிக்கப்பட்டனர்.

### பாடப்புத்தகங்கள்

விநியோகத்தில் தாமதமும், தரம் குறைந்த பாடப்புத்தகங்களும், ஊழல் என்று வகுக்கப்பட முடியாவிட்டாலும், இந்தப் பிரச்சினைகள் அமைப்புத் திறமையின்மையையும், சரியான திட்டமிடல், மேற்பார்வை போன்றன இல்லாதமையையும் காண்பிக்கின்றன. இலங்கையில், அரசாங்கம் பாடசாலைப் பிள்ளைகளுக்கு இலவசமாகப் பாடப் புத்தகங்களையும், சீருடைகளையும் வழங்குகின்றது.

இல்லங்களில் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டில், 96.7வீத பிள்ளைகளின் காப்பாளர்கள் (1.741) இந்த விடயம் தொடர்பாகப் பதில் அளித்தனர். 6.2வீதமானோர் பாடப் புத்தகங்கள் கிடைக்கவில்லை என்றும், 23.3வீதமானோர் நேர காலத்தில் அவை கிடைக்கவில்லை என்றும் தெரிவித்தனர்.

95 வீதத்துக்கும் அதிகமான ஆசிரியர்களும்



உத்தியோகத்தர் களும், பாடப்புத்தக விநியோகத்தில் தாமதம் இருப்பதாக வும் அது கல்வியைப் பாதித்ததாகவும் கூறுகையில் 58வீத ஆசிரியர்களும், 56வீத உத்தியோகத்தர்களும் சீரற்ற போக்கு வரத்து ஏற்பாடுகளே காரணம் என்றும் குற்றம்சாட்டினர்.

நுவரெலியா, ஹட்டன், கண்டி ஆகிய பிரதேசத்தைச் சேர்ந்த சிறு எண்ணிக்கையிலான மாணவர்களே தாம் பாடப் புத்தகங்களுக்கு பணம் செலுத்த வேண்டியிருந்ததாகக் கூறினார் பாடப்புத்த கொள்வனவு அல்லது பிரதி எடுத்தல் தொடர்பான கொடுப்பனவு பற்றிய மதிப்பீட்டில், 2008 இல் ஒவ்வொரு மாணவரும், மாதாந்தம் சராசரி 525 ரூபாவை செலவிட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

பாடப்புத்தகங்கள் இல்லாமை, அல்லது அவற்றை விலைக்குக் கொள்வனவு செய்தல் என்பனவற்றால் சிறிய எண்ணிக்கையிலான மாணவர்களே பாதிக்கப்பட்ட போதிலும் விநியோகத்தில் தாமதம், கல்வித்தரத்தில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

துருவியன்


எனவே 'ட்ரான்ஸ் பேரன்சி' நிறுவனஆய்வினை அடிப்படையாகக் கொண்டு நோக்கும்போது, தனிப்பட்ட சுயநலத்துக்காக மேற்கொள்ளப்படும் சீர்கேடுகளால் கல்வித்துறைக்கு இடையூறு ஏற்படும் என்பது தெளிவாகின்றது. எனவே இத்தகைய சீர்கேடுகளை பெற்றோர், பாடசாலை சமூகத்தினர் என்போர் ஒன்றிணைந்து களைவதன் மூலம் ஆரோக்கியமான கல்விப் பாதைக்கு வழிசமைக்க முடியும். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித குலத்தையே இன்று அச்சுறுத்தி வரும் பயங்கர எதிரி பன்றிக் காய்ச்சல்

## விலங்கிலிருந்து மனிதனுக்கு.... சேதங்களும், தொற்று நோய்களும் 4

ஒரு காலத்தில் மோட்டார் சைககிள்ல் பயணிப்போர் மட்டுமே அணியும் முகக்கவசம் இப்போது நடப்பவர், இருப்பவர், தொழில் புரிபவர் என அனைவரும் அணிய வேண்டிய கட்டாய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். வெளிநாடுகளில் முகக் கவசத்துக்கு தட்டுப்பாடு ஏற்படுமளவுக்கு அனைவரையும் விட்டு விட்டுத் துரத்திக் கொண்டிருக்கிறது 'பன்றிக் காய்ச்சல்' (Swine influenza) என்னும் ஒரு தொற்று நோய். வெளிநாட்டு



H1N1 - பன்றிக் காய்ச்சல் இன்புளூ வென்சா A வைரசு

மோகத்திற்கு ஆப்பு வைப்பதுபோல அந்த நாடுகளிலே பன்றிக் காய்ச்சல் எதிர்பார்க்காத அளவுக்குப் பரவி வருவது அனைவரையும் ஆச்சரியத்திற்குள் ளாக்கியிருக்கிறது.

**மெக்சிக்கோவிலிருந்து....**

பன்றிக் காய்ச்சலின் ஆரம்பம் மெக்சிக்கோ ஆகும். மெக்சிக்கோ நாட்டில் உணவுக்காக வளர்க்கப்படும் பன்றிகளில் அவ்வப்போது வழமையாக வரும்நோய்தான் இது. எங்களுக்கு வரும் வைரசுக் காய்ச்சல் போன்றது. செல்லாச்சிக் கிழவி சுருக்கிச் சொல்வார். ''உதென்ன வைரசுக் காய்ச்சல்? நல்ல சுக்குத் தட்டி இரசம் வைத்து இரண்டு தரம் குடித்தால் காய்ச்சல் எல்லாம் பறந்துவிடும்'' என்பார். அவர் கூறியது போல எமக்கு வரும் சாதாரண வைரசுக் காய்ச்சல் போன்றது தான் இதுவும் எனப் புரிகிறதல்லவா! இதனால் பன்றிகளிலும் இதுபோன்ற வைரசுக் காய்ச்சல் வரு வதும் போவதுமாக இருந்ததனால் ஆரம் பத்தில் இந்நோயைப் பற்றி எவரும் அலட்டிக்கொள்ளவில்லை. மெக்சிக்கோவில் ஆரம்பத்தில் கண்டறியப்பட்ட இக் காய்ச்சல் பன்றிகளில் எந்தவிதமான பாதிப்பையும் காட்டாமலிருந்ததும் ஆச்சரியத்திற்குரியது. பன்றிகளுக்கு இக் காய்ச்சலினால், அதனை ஏற்படுத்தும் வைரசுவினால் பாதிப்பு எதுவுமில்லை என்னும்போது இதனை எவருமே ஆரம்பத்தில் பெரிதுபடுத்திக்கொள்ளவில்லை. மெக்சிக்கோவில் கூட இந் நோய் பற்றிய விழிப்புணர்வு ஆரம்பத்தில் ஏற்படுத்தப்படவில்லை. கவனியாது விட்டது நாளடைவில் விபரீதமாகிவிட்டது.

**பன்றிக் காய்ச்சல்**

பன்றிகளில் பரவலாக அதிக எண்ணிக்கையில் எந்தவொரு வைரசு பிரிவினாலும் ஏற்படுத்தப்படும் காய்ச்சலையே பன்றிக் காய்ச்சல் என அழைத்தனர். பன்றிகளை (Pigs) இன்னொரு வகையில் ஸ்வைன் (Swine) என அழைத்ததால் பன்றிக் காய்ச்சலுக்கு Swine Influenza என பெயரிடப்பட்டுள்ளது. இந்தக் காய்ச்சலை உண்டுபண்ணும் வைரசுக் காரணி பரவலாகப் பன்றிகளில் காணப்படும்போது அதனைப் பன்றிக் காய்ச்சல் வைரசு என அழைப்பர்.

பன்றியின் சுவாசத் தொகுதியில் விரைந்து தொற்று ஏற்படுத்தும் ஒரு வகைப் பன்றிக் காய்ச்சல் 'H' வகை வைரசுவினால் ஏற்படுத்தப்படுகின்றது.

**பன்றிக்கும் மனிதனுக்கும் இப்படியொரு தொடர்பு**

மனிதனில் புளுக் காய்ச்சலை ஏற்படுத்துவதில் மூன்று வகையான இன்புளுவென்சா வைரசுகள் முக்கியத்துவம் பெறுகின்றன.

இன்புளுவென்சா வைரசு A
இன்புளுவென்சா வைரசு B
இன்புளுவென்சா வைரசு C

ஆகியனவே இவை மூன்றுமாகும். இவற்றுள் இன்புளுவென்சா வைரசு A பன்றிகளில் பொதுவாக அதிகளவில் காணப்படுவது ஆகும். இன்புளுவென்சா வைரசு C பெரிதாக அதிகளவில் பன்றிகளில் காணப்படுவது இல்லை. ஆனால் இன்புளுவென்சா வைரசு B இதுவரையிலும் பன்றிகளில் காணப்படவில்லை. ஆனால், இன்புளுவென்சா வைரசுக்கள் A இற்கும் C இற்குமிடையில் பொதுவாக காணப்படும் இயல்புகளில் தனித்துவத் தன்மையுண்டு. இங்கே பன்றியிலிருந்து மனிதனுக்குத் தொற்றியதாகக் கருதப்படும் பன்றிக் காய்ச்சலுக்குரிய காரணியான இன்புளுவென்சா வைரசு A ஆனது பொதுவாக மனிதர்களில் வைரசுத் தொற்றுதலை ஏற்படுத்துவதாகும்.

**பரம்பரை அலகுகளும் பன்றிக் காய்ச்சலும்**

இன்புளுவென்சா வைரசுக்களானவை வெளிப்புறமாக வைரசு உறை ஒன்றினுள் வைரசு மூலக்கூற்றினை உள்ளடக்கியதாக இருக்கும். இந்த உறையானது புரத மூலக்கூறுக்களால் ஆனவையானாலும் இன்புளுவென்சா வைரசு A ஆனது இரண்டு வகைப் புரதங்களால் ஆக்கப்பட்டிருக்கும். அவையாவன ஹீமாக்குளூற்றினின் (Hemagglutinin) - Ha மற்றும் நியூறாமினினடேசு (Neuraminidase) என்பவை ஆகும். இதில் இன்புளுவென்சா வைரசு A ஒரு இறைபோநியூக்கிளிக் அமில (RNA) த்திலானதுடன் பிரிக்கப்பட்ட பரம்பரையலகுத் தொகுதியையுடையதாகும். இது எட்டு வேறுபட்ட நீளவுரு 'இறைபோநியூக்கிளிக்' அமிலத் தொகுதியை உடையதாகும். அவையாவன PB1, PB2, PA, NS (NS1 ம் NS2 ம்) NP மற்றும் M(M1 ம் M2ம்) ஆகிய பரம்பரையலகுகளாகும். இவற்றுடன் HA மற்றும் NA பரம்பரையலகுகளும் இணைந்திருக்கும்.

இறைபோநியூக்கிளிக் அமில வைரசுகள் மிகவும் அதிகளவில் திரிபடையக் கூடிய இயல்புகளுடையன. மிகவிரைவில் வைரசுக் கூறுகளை (Virions) மிகவும் குறைந்த நேரத்தில் அதனுடைய விருந்து வழங்கி கலத்தில் உற்பத்தி செய்யும் வலுவுடைய இவ்வகை வைரசுக்கள் பன்றிக் காய்ச்சலுக்கு காரணமானதால் அவற்றினது விருத்தி கட்டுக்கடங்காமல் போனதற்கு இதற்கு மேலான விளக்கம் தேவையில்லை அல்லவா! இன்புளுவென்சா வைரசு A அதி விசேடமான இயல்புகளுடைய வைரசு என்பதனை விட இதனது பிரிவுகளுடைய பரம்பரையலகுத் தொகுதியும் அதில் அடங்கியுள்ள பல்வேறு வகைகளில் இணையக்கூடிய அதி விசேடமான பரம்பரையல்கு அமைப்பும் இவ்வைரசு புதுவிதமான பொறிமுறையுடன் இயங்கவல்லனவாகத் தோற்றம் பெற்றிருப்பதாகவே கருதப்படுகின்றது. இதன்மூலம் இவ் வைரசு புதிய விருந்து வழங்கிகளில் இலகுவாக தன்னை விரைந்து இயைபாக்கக்கூடியதாக அமையப் பெற்றிருக்கின்றது.

என்னே! இயற்கையின் விந்தை. மனிதன் மாறிவிட்டான். விஞ்ஞானத்தை வாகனமாக்கி அண்டமெல்லாம் வலம் வருகின்றான். ஆனால் இங்கே ஆட்கொல்லி இன்புளுவென்சா வைரசு பன்றியை முதலில் வாகனமாக்கி தன்னை விருத்தி செய்துவிட்டு பின்பு

## அசுர வேகத்தில் பரவிவரும் பன்றிக் காய்ச்சலைக் கட்டுப்படுத்த இயலாது தடுமாறுகிறது மருத்துவ உலகு

ஆறறிவு படைத்த மனிதனையே வாகனமாக்கி மெக்சிக்கோவிலிருந்து உலகம் முழுவதும் வலம் வருகின்றது. குறிப்பாக மனிதன் பயன்படுத்தும் வானூர்திகளினாலேயே அதிகமாகப் பயணிக்கின் றது. அண்டை நாடான இந்தியாவிலும் அதிவேகமாகப் பரவி விஞ்ஞானத்தையே ஓர் உலுக்கு உலுக்கி அதிரவைத்திருக்கின்றதென்றால் பாருங்களேன்!

ஒரு காலத்தில் வெளிநாட்டு இந்தியர்கள் இந்தியாவுக்கு வருவதைத் தவிர்க்குமாறு அறிவுரை கூறிய இந்தியாவுக்கு தலையிடி மேல் தலையிடி. இந்தியாவிலிருந்து எவரும் தங்கள் நாட்டுக்கு வராதபடி பார்த்துக்கொள்ளுமாறு அறிவுரை கூறியிருக்கிறார்கள் அண்டை நாட்டவர்கள். ஆனைக்கும் அடி சறுக்கும் என்பது இதுதானா?

**இன்புளுவென்சா வைரசு A யின் கட்டமைப்பு**

அனைத்து இன்புளுவென்சா A வைரசுகளும் 'ஹீமாக்குளூற்றினின்' மற்றும் 'நியூராமினிடேசு' வினைக் கொண்டிருக்கின்றன. இதனது அமினோ அமில ஒழுங்கமைப்பு மூலமான புரத மூலக்கூறுகளிணைந்த கட்டமைப்பு ஒவ்வொரு வைரசுவிற்கும் வித்தியாசமானது. இவ்வகை வைரசுகளின் விரைந்து பிரிந்து பரம்பரையலகுகளில் திரிபுற்று விகாரமடையும் இயல்பு இவற்றினது சக்தியை அதிகரிப்பதாகவே தோன்றுகின்றது.

விகாரமடையும் இயல்பு மிகவும் அதிகமானதாக இருப்பதனால் இவற்றினால் புதுவகைத் தொற்றுக்களை இலகுவில் பரந்துபட்ட அளவில் ஏற்படுத்த முடிகின்றது. இந்த விரைந்து விகாரமடையும் இயல்பானது அவற்றில் காணப்படும் வைரசுக்கான நொதியமான 'றிவேஸ் டிரான்ஸ்கிறிப்டேசு' (REVETSE TRANSCRIPTASE) இன் மூலமாக நடைபெறுகின்றது. இந்த நொதியத்தின் உதவியுடன் இவ் வைரசு விகாரமடைந்து வீரியம் பெற்றெழுகின்றது. இந்த நொதியம் விருந்து வழங்கிக் கலங்களில் புதியவகை பரம்பரையலகுகளை உருவாக்கும் தன்மையுடையது.

மேலே குறிப்பிட்டதுபோல இன்புளுவென்சா A வைரசுக்களுக்கான பெயர்கள் HA மற்றும் NA இலக்கங்களை அடிப்படையாக வைத்தே, அதிலுள்ள இரண்டு புரத கூறுகளை வைத்தே வழங்கப்பட்டுள்ளன. இந்த இலக்கங்கள் HA மற்றும் NA ஆகியவற்றிலுள்ள அமினோ அமிலத் தொடரை அடிப்படையாக வைத்தும், குறிப்பாக ஹீமாக்குளூற்றினின் மற்றும் நியூராவமினிடேசு புரதங்களின் கட்டமைப்புக்களை அடிப்படையாக வைத்தும் வழங்கப்பட்டுள்ளன.

**பற்றிக் காய்ச்சலும் இன்புளுவென்சா வைரசுகளும்**

இன்புளுவென்சா வைரசு A யின் மேலுள்ள புரதவுறையிலுள்ள அமினோ அமில தொடர் கட்டமைப்புக்களை அடிப்படையாக வைத்து இவை இனங்காணப்படுகின்றன.

பன்றியிலுள்ள இன்புளுவென்சா வைரசுக்களில் பல்வேறு வகைகளுண்டு. அவை H1 N1, H1 N2, H3N1, H3 N2 மற்றும் H2 N3 என்பவையாகும். இவற்றுள் பன்றிகளில் இன்புளுவென்சா வைரசுவினுடைய வகைகளான H1N1, H3N2 மற்றும் H1N2 ஆகியவை உலகம் பூராவும் வலம் வந்து கொண்டிருக்கின்றன. அமெரிக்காவில் H1N1 வகையானது 1998 ஆம் ஆண்டுக்கு முன்னர் அதிகமான பன்றிகளில் காணப்பட்டது. ஆனால் 1998 ஒகஸ்ட் இலிருந்து H1N2 வகை அதிகளவில் பன்றிகளிலிருந்து பிரிந்தெடுக்கப்பட்டுள்ளன.

**2009 - பன்றிக் காய்ச்சல்**

இவ் வருடத்தில் பன்றிக் காய்ச்சலின் பரவலால் மனிதனுக்குப் பரந்துபட்ட அளவில் இதனை ஏற்படுத்தும் வைரசு திரிபடைந்து விருத்தியடைந்துள்ளது. மெக்சிக்கன் பன்றிக்காய்ச்சல் வைரசு நான்கு வித்தியாசமான வைரசு வகைகளின் கூட்டாகும். அவையாவன:

01. வட அமெரிக்கா பன்றிக்காய்ச்சல் வைரசு
02. வட அமெரிக்கா பறவைக் காய்ச்சல் வைரசு
03. மனித இன்புளுவென்சா A (H1N1) வைரசு
04. ஆசிய ஐரோப்பாவிலுள்ள பன்றிக்காய்ச்சல் வைரசு.

இவை நான்கும் ஒருங்கிணைந்ததால் இப்போது இங்கே பரவும் H1N1 இன்புளுவென்சா வைரசு மிகவும் வீரியமான வேகமுள்ள வைரசுவாக புதுப்பொலிவு பெற்றிருக்கிறது.

ஒரு வகைக்கான நோயெதிர்ப்பு (Vaccine) இருந்தாலும் ஒன்றுக்கு மேல் இணையும் போது அவற்றைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பது மிகவும் கடினம். ஆனாலும் நாம் எடுக்கும் தற்காப்பு நடவடிக்கைகள், முன்னேற்பாடான வழிமுறைகளை அவசியம் கவனத்திலெடுக்கும் பட்சத்தில் இந் நோய்த் தொற்றிலிருந்து எம்மைக் காத்துக் கொள்ளலாம்.

அது குறித்த விவரங்களைத் தொடர்ந்து விரிவாக ஆராய்வோம்.

(வளரும்)



கலாநிதி கு.மிகுந்தன்
தலைவர், விவசாய உயிரியல்துறை,
விவசாயபீடம், யாழ்.பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ESOFT
## Computer Studies Pvt. (Ltd.)

### இலங்கை அரசாலும், சர்வதேசத்தாலும் அங்கீகரிக்கப்பட்ட ISO 9001 - 2008 தரச் சான்றிதழ் பெற்ற கணனி நிறுவனம் உங்கள் யாழ் மண்ணில் உதயமாகிறது


## 23/08/2009

ESOFT Computer Studies (Pvt) Ltd.

Committed to Systematic IT Education

www.esoft.lk

**114, Navalar Road, Jaffna. T.P: 021 2224142**





### அருளாசிச் செய்தி

அன்புசார் பெருந்தகையீர்:

ESOFT COMPUTER STUDIES நிறுவனமானது வடகிழக்கு மக்களின் நன்மை கருதி வட யாழ் மாணவர்களுக்கு யாழ் மாவட்டத்தில் இன்று கல்விப் பணியாற்ற முன்வந்திருப்பது மகிழ்ச்சி. நீண்ட காலமாக பல துன்பங்களைச் சுமந்து கொண்டிருக்கும் மக்களுக்கு கணினிக் கல்வி வரப்பிரசாதமாக அமைந்திருக்கின்றது. இன்று உலகளாவிய ரீதியில் கணினி கல்வி வளர்ச்சி அடைந்து காணப்பட்டாலும் யாழ்ப்பாண இளைய சமுதாயத்தினருக்கு கணினிக் கல்வியை வழங்க இந்நிறுவனம் முன்வந்திருப்பது அனைவருக்கும் மகிழ்ச்சி. இன்று இலங்கை நாட்டினதும் சர்வதேச நாட்டினதும் அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது வரவேற்கத்தக்கதாகும். கொழும்பு பல்கலைக்கழகத்தில் BIT கற்பதில் முதல்வனாய் திகழ்கிறது. இது பல்வேறு சான்றிதழ்களையும் வழங்கியுள்ளது. யாழ்ப்பாண மாணவர்கள் கணினி கல்வியைப் பெறுவதற்கு வழிகாட்டியாக அமைகின்றது. இன்று ஆரம்பமாகும் இந்நிறுவனம் பல மாணவர்களை உருவாக்கி சிறந்ததொரு கல்வியை வழங்க இறைவனை வேண்டுகின்றோம். இப்பணியை செய்யும் அனைவரையும் இறைவன் ஆசீர்வதிப்பாராக!

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"
இரண்டாவது குருமஹா சந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக
ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்
ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிகள்



### யாழ் ஆயரின் ஆசிச் செய்தி

ESOFT COMPUTER நிறுவனம் தனது சேவையை யாழ் மண்ணிலும் இன்று (23.08.2009) ஆரம்பிப்பதையிட்டு நாமும் மகிழ்ச்சி அடைகின்றோம். இந்நிறுவனம் பல இடங்களில் தனது சேவையை ஆற்றி நற்பெயரைப் பெற்றதுடன் தகவல் தொழில் நுட்ப அறிவையும், கணினியின் பரிமாண வளர்ச்சிப் படிகளையும் இளம் சந்ததியினருக்கும், அனைவருக்கும் கொடுத்து அறிவை வளர்க்கின்றமை வரவேற்கத்தக்கது.

நீண்ட கால யுத்தத்தால் இத்தகைய தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியில் பின்தங்கிய நிலையில் இருந்த எம் யாழ் மண்ணிலும் இவர்களது சேவை ஆரம்பிக்கப்பட்டு எம் மாணவ, இளம் தலைமுறையினருக்கு நல் அறிவையும், வெற்றியையும் இத்துறைகளில் பெற்றுக் கொடுக்க முன்வந்துள்ள ESOFT நிறுவனத்துக்கும் அதன் அங்கத்தவர்களுக்கும் எம் ஆசியையும் வாழ்த்துக்களையும் தெரிவிப்பதில் நாமும் மகிழ்ச்சி அடைகின்றோம்.

மேதகு இ.தோமஸ் சவுந்தரநாயகம்
யாழ் ஆயர்
ஆயர் இல்லம்,
யாழ்ப்பாணம்.
22.08.2009



### சமகால தகவல் தொழில்நுட்பத்தின் வளர்ச்சிக்கான திறவுகோல்

ESOFT கணினிக் கற்கைநெறி நிறுவனத்தின் திறப்புவிழா நிகழ்விற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். 2009ஆம் ஆண்டினை தகவல் தொழில்நுட்ப ஆண்டென அரச பிரகடனப்படுத்தியமையைத் தொடர்ந்து அதன் வளர்ச்சி உத்தியோகபூர்வமான முறையிலும், உத்தியோகபற்ற வகையிலும் அபரிமிதமாக அமைந்திருப்பதைக் காண முடிகிறது. இதன் காரணமாக தகவல் தொழில்நுட்பத்தைக் கற்கும் ஆவல் மாணவர்களிடையே பெருக்கெடுத்து ஓடுவதை அவதானிக்க முடிகின்றது.

[illegible]

[illegible]

க.தேவராஜா
பதில் துணைவேந்தர்,
யாழ். பல்கலைக்கழகம்.



### Message from Managing Director

It is truly a significant day today. The People of Jaffna are being given the opportunity to progress themselves along the same academic and professional pathways that are available to their brothers and sisters in the Southern part of this beautiful country.

ESOFT Computer Studies Private Limited is a well known entity that operates in several parts of Sri Lanka, and we are renowned for providing leading educational programmes including undergraduate courses such as the BIT Degree.

Gone are the days that Parents had to send their children out of their traditional homes, seeking better infrastructure for education. With organizations such as ESOFT opening branches in the North and the East, parents can safely tent to the educational needs of their children in the comfort of their own town and city.

With the dawn of peace in Sri Lanka, His Excellency the president, Mahinda Rajapaksa has initiated the "Uthuru Wasanthaya" (Northern Spring) to develop the Province according to a home-grown strategy. Infrastructure development, electricity, water supply and sanitation, agriculture, irrigation, livestock development, inland fisheries, health, solid waste disposal, education, sports, cultural affairs and transportation are some of the areas that are being covered under this program. We at ESOFT are happy to participate in this effort in our own small way and look forward to a long and healthy relationship with the people of Jaffna.

Dr.Dayan Rajapakse,
Managing Director / CEO
ESOFT Computer Studies Private Limited



### ஆசியுரை

ESOFT கணினிக் கல்லூரியின் திறப்புவிழாவிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். அரசாங்கம் 2009இல் ஆங்கில தகவல் தொழில்நுட்ப ஆண்டாகப் பிரகடனப்படுத்தியுள்ள வேளையில் இவ்வாறான ஒரு சிறந்த கணினி நிறுவனம் தனது சேவையை யாழ்ப்பாணத்திற்கு விஸ்தரிப்பதை நான் மிகவும் வரவேற்கின்றேன். மேலும் கொழும்பு பல்கலைக்கழகத்தில் BIT பட்டப்படிப்பு, BIT பட்டப்படிப்பு போன்ற பயிற்சி நெறிகளுக்கு இலங்கையின் சூழி நிறுவனமாகத் திகழும் இந்நிறுவனத்தின் வருகை யாழ் மாணவர்களுக்கு பெரிதும் பயன்பெறும் என்பதில் எவ்வித ஐயப்பாடும் இல்லை. இவர்களது சேவை மேன்மேலும் வளர எனது இதயப்பூர்வமான வாழ்த்துக்கள்.

சி.கந்தவேள்
பிராந்திய இணைப்பாளர்,
யாழ் பிராந்திய நிலையம்,
திறந்த பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.



### கற்றல் கற்பித்தலில் தகவல் தொழில்நுட்பத்தின் பங்கு

தகவல் தொழிநுட்பம் அபரிமிதமான வளர்ச்சியடைந்துள்ள போதிலும் நமது பிரதேசம் குறிப்பிடத்தக்க வளர்ச்சி பெற்றுள்ளது என்ற நிலை இல்லை என்றே கூற வேண்டும். நவீன கற்றல், கற்பித்தலில் தகவல் தொழில்நுட்பத்தின் பங்கு மிகக்காத்திரமானதாகும். இந்த நவீன முறைக் கற்றல் கற்பித்தலுக்காக சகல ஆசிரியர்கட்கும் தகவல் தொழில்நுட்ப அறிவு வழங்கப்பட வேண்டியது அவசியமாகும். இன்றைய நிலையில் சகல தொழிற்துறையினரும் தகவல் தொழில்நுட்ப அறிவைப் பெறவேண்டிய தேவையுள்ளது. இத்தகைய அறிவை வழங்குவதில் ESOFT நிறுவனத்தினரும் அளப்பரிய சேவையை வழங்க வேண்டும் எனக் கோருவதுடன் அவர்களின் பணி சிறக்க வாழ்த்துகின்றேன்.

திருமதி அ.வேதநாயகம்
வலயக் கல்விப் பணிப்பாளர்
யாழ்ப்பாணம்.



### வாழ்த்துச் செய்தி

காலம் அறிந்து, தேவைகளை உணர்ந்து, தரம் வாய்ந்த, சர்வதேச அங்கீகாரம் பெற்ற தனது அயராத சேவைகளின் மூலம் விடியலைத் தேடும் யாழ் மண்ணை விழித்தெழச் செய்ய வேண்டுமென்ற பேரவாவுடன் இன்று தடங்களைப் பதிக்கும் "ESOFT COMPUTER STUDIES" நிறுவனத்தினருக்கு எனது உள்ளத்தின் ஆழத்தில் இருந்து வாழ்த்துக்களையும், நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கிறேன். தனது சேவையிலே வெற்றி கண்டு, சாதனை புரிந்து, சரித்திரம் படைத்திட வேண்டுமென்றும் வாழ்த்துகிறேன்.

திரு.ம.இக்னேசியஸ்,
அதிபர்,
பலாலி ஆசிரியர் கலாசாலை.



### Message

It gives me great pleasure in writing a message to ESOFT computer studies on the day of opening this enterprise in Jaffna. As the year 2009 is the year for ICT and English, a well equipped computer learning centre is necessary for our students. The opening of this new enterprise will definitely quench the thirst of our young learners.

I wish ESOFT computer studies centre to Extend their valuable service in Jaffna in the future.

Vigneswaran
Zonal Director of Education
Valikamam.



### வாழ்த்துச் செய்தி

யாழ். மண்ணில் தமது கணினிக் கற்கையை யாழ். மக்களுக்குப் புகுத்தும் நோக்கில் இன்று கால் பதித்தமையையிட்டு யாழ் மண்ணில் நானும் ஒருவராக சிறியவர் முதல் பெரியவர்வரையும் கணினி அறிவையூட்ட விளைகின்றது இந்நிறுவனம். எம்மக்கள் அனைவரையும் இவ் உலகத்துடன் இணைக்க விளைவது சர்வதேசத்தையும் எம்மக்கள் கைக்குள் கொண்டுவரும் காங்கரியமே. அத்துடன் சர்வதேச தரம் மிக்க சான்றுகளை இந்நிறுவனம் வழங்குவதும் எம்மவர் எங்கு சென்றாலும் தொழில் பெற வாய்ப்பளிக்கும் வழிப்படுத்தலே.

அத்துடன் இந்நிறுவனம் வழங்கும் கற்கைநெறிச் சான்றுதல் மூலம் சர்வதேச கற்கை வாய்ப்புக்களை ஏற்படுத்துவதும் நல்நோக்கே. ESOFT நிறுவனம் எம்மாணவர்களுக்கு சிறந்த தலைவர்கள் என்ற ஏற்புடைமையையும் இம்மண்ணில் நிறுத்த வேண்டும் எனவும் வேண்டிக் கொள்கின்றேன். ESOFT யாழ் மண்ணில் நிலைத்து மணங்களைத் தொட்டு வளர என் வாழ்த்துக்களும் ஆசீர்வாதங்களும் உரித்தாகட்டும்.

பவர் சின்னையா
அதிபர்,
கோப்பாய் ஆசிரிய கலாசாலை.



### வாழ்த்துச் செய்தி

இன்றைய நவீன உலகிற் கணினி அறிவும், ஆங்கில அறிவும் மிகவும் அவசியமாக வேண்டப்படுகின்றது. இந்த இரண்டும் இருந்தாற்றான் தொழில் உலகில் புகவும், தொழில் பெற்றவர்கள் பிரகாசிக்கவும் முடியும். எனவேதான் எமது யாழ்ப்பாண மக்களும் கணினி அறிவைப் பெற்று நன்மை பெறவேண்டும் என்ற உயரிய நோக்குடன் ESOFT நிறுவனத்தினர் அதன் கிளையை இங்கே உருவாக்கியுள்ளனர். இதன்மூலம் மாணவர்களும், தொழில் புரிவோரும் நன்மை பெறவேண்டும். ESOFT என அவாவி நிற்கின்றேன். இன்று ஆரம்பமாகும் நிறுவனம் நீண்டகாலம் சிறப்புறச் சேவையை வழங்க வேண்டும் என மனதார வாழ்த்துவதிற் பெருமையடைகின்றேன்.

சைலேந்திரா
ESOFT
வடக்கு கிழக்கு இணைப்பாளர்.

# ESOFT Computer Studies Pvt. (Ltd.)

114,
Navalar Road, Jaffna.
T.P: 021 222 4142

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாபூர்வ வெளிப்பாட்டின் முழு நிறைவினை உணர்த்திய ரமா வைத்தியநாதனின் நடனக் கோலங்கள்

கலை ஓர் உள்ளுணர்வுடன் கூடிய தரிசன மாக லயித்து ஈடுபடும் ஒன்று என்பதனை திருமதி ரமா. வைத்தியநாதனுடைய நடன ஆற்றுகையின் அனுபவமாயமைந்தது. புதிய வலுவூட்டும் வகையிலமைந்த ரமாவின் நடனம் உறைந்து போயிருந்த மனங்களுக்கு ஓர் உத்வேகத்தைத்தந்தது.

14.08.2009 அன்று நல்லூர் சாதனா பாடசாலை மைதானத்தில் மாலை 6.30இற்கு ஆரம்பித்த ரமா வைத்தியநாதன் அவர்களின் நடனம் 9.00 அளவில் விடைபெற மனமில்லாது வைத்து நிறைவடைந்தது.

பாடசாலை மைதானத்தில் ஒரு பக்கமாக தற்காலிக மேடை அமைக்கப்பட்டிருந்தது. மேடை மங்களகரமான நிகழ்வுகளிற்குப் பயன்படுத்தப்படும் பந்தலாலும் பவளக்கால் சொக்கட்டான் தூண்களாலும் அமைக்கப் பட்டிருந்தமை பரத நாட்டிய வெளிப்பாட்டிற்கு ஏற்ற பொருத்தமான பௌதீகத் தளத்தினை வழங்கியது.



ஆடற்பட்டியல் நேரத்தின் அளவினையும் பார்வையாளரையும் கருத்திற் கொண்டு அமைக்கப்பட்டதாக இருந்தது. ஆடற்பட்டியல், வழமையான கட்டமைப்பாக இருந்தாலும் கூட அன்றையதினம் நல்லூர்க் கந்தசுவாமி கோவில் கார்த்திகைத் திருவிழா என்பதனால் ஆடற்பட்டியலில் முருகன் - மயில் என்பன கருப்பொருளாக பிரதிபலித்து நின்றன.

முருகஸ்துதியுடன் ஆரம்பமாகி அலாரிப்பு, வர்ணம் (மோகமான, களஹரப்பிரியா)

காவடிச்சிந்து (மாலைப் பொழுதினிலே, ராகமாலிகை) கீர்த்தனை (நந்தனார்) வருகலாமோ ஐயா, மாஞ்சிராகம், தில்லானா, நிறைவாக ஏறுமயில்... எனும் திருப்புகழ் மங்களமாக நிறைவடைந்தது.

பக்கவாத்தியங்களான மிருதங்கம், புல்லாங்குழல்,பாட்டு வழமையான நவீன நாட்டியக்கச்சேரிகளில் இடம்பெறும் நட்டுவாங்கத்தின் பணியினை மிருதங்க கலைஞர் மிருதங்கதினூடாகவும் கொன்னக் கோனினூடாகவும் நிகழ்த்தியமை மிகவும் அற்புதமாக இருந்தது. நடனத்திற்கெனவே பக்கவாத்தியங் கள் வாசிப்பதில் தேர்ச்சி பெற்ற புராதன கலைஞர்களை நினைவிற்குக் கொண்டு வந்தது பக்கவாத்தியகலைஞர்களின் வெளிப்பாடு சஞ்சாரி பாவங்களின் போதும் சில இட்டு நிரப்பப்படும் சந்தர்ப்பங்களிலும் புல்லாங்குளில் இசையைத் தனித்து பயன்படுத்தியமை நடனத்தின் பாவத்தினை மேலும் அழுத்தி நிற்பதாக அமைந்தது.

நடன ஆற்றுகை முருகஸ்துதியுடன் ஆரம்பமாகி தொடர்ந்து அலாரிப்பு மயிலின் நடையின் அசைவு இயக்கங்களை அடிப்படையாகக் கொண்டு அமைப்பாக்கம் செய்யப் பட்டிருந்தது. வழமையாக இடம்பெறும் நேர்கோட்டு அசைவுகளைத் தவிர்த்து சாய்வான மற்றும் பக்கங்களுக்கான அசைவுகள் (Slande and profile movements) தான் அதிகம் காணப்பட்டன. அத்துடன் உறைநிலை (Pro file still poses) மிகவும் அழகாக இருந்தது. படச்சட்ட வெளிக்கு மிகவும்பொருத்தமான வகையிலான அசைவுகளும், சிலைகளை ஒத்த உறைநிலையும் மிகவும் லயிப்பை ஏற்படுத்துவனாக அமைந்தன.

வர்ணத்தின் ஆரம்பம் ஓர் அறிமுக இசையுடன் ஆரம்பித்து பின்பே பாடல் வரி பாடப்

## அடுத்தது என்ன என்ற எதிர்பார்ப்பை தோற்றுவித்த சிறப்பு மிகுந்த ஆற்றுகை

படுகிறது. வர்ணம் பேசும் பொருள் சிருங்காரமாக இருந்தாலும் பக்திக்கு சிருங்காரம் ஒரு பயண வழி என்ற நிலையிலேயே நட னவாக்கம் செய்யப்பட்டிருந்தது. சிருங்காரம் எதுவிதமான விரச உணர்வுமின்றி வெளிப்பட்டு நின்றது.

வர்ணத்தின் சஞ்சாரி பாவங்களில் நாடகத்தனம் நிறைந்திருந்தமை கருவை தெளிவாக வெளிப்படுத்தியது, தலைவனும் தலைவியும் சேரும் ஒரு சந்தர்ப்பத்தினை உதாரணமாகக் கூறலாம். இதில் பூவில் வண்டு வந்து தேன் குடிப்பதாக அமைப்பாக்கம் செய்யப்பட்டது. வண்டு பறந்து திரிதல் மேடை முழுவதும் காட்டப்பட்டு பின் திடீரென முன் மேடையில் பூவில் வண்டு தேன் குடிப்பதாக அதைலைக்காட்டி திடீரென பின் திருப்பி பின்மேடைக்குச் சென்று பிற்பகுதி உடல் அசைவாலும் முத்திரைகளாலும் மட்டும் வண்டு தேன் குடிப்பதைக் காட்டியமை எண்ணற்ற வியாக்கியானங்களை தோற்றுவித்தது. பரதநாட்டியமொழியில் தேர்ச்சியும் அதனை லாவகமாகக் கையாளும் திறனும் வெளிப்பட்ட சந்தர்ப்பமாக இதனைக் கொள்ளலாம்.

சில நடனவியாக்கியானங்கள் ஜதிக்கோர்வையின் பின்னணியில் மட்டுமே நிகழ்த்திக் காட்டப்பட்டது. சிவதாண்டவத்தினை விவரிக்கும் போது உறைநிலை, ஆடல் திடீர் உறைநிலை என்ற வகையில் மேடையின் இருபக்கங்களுக்கும் மாறிமாறி அசைந்து ஆடியமை சிவதாண்டவத்தின் முழுமையையும் ஒரு கணத்தில் அனுபவித்த உணர்வு அனுபவமாக அமைந்தது.

தொடர்ந்து 'வருகலாமோ ஐயா....' மாஞ்சிராக நந்தனார் சரித்திரக் கீர்த்தனை - கோபால கிருஸ்ணபாரதியார் இயற்றியது- கெஞ்சல், இயலாமை, மனச்சோர்வு,விடாமுயற்சி என்ற உணர்வுகள் எல்லாம் ஒருங்கிணைந்த வெளிப்பாடாக அமைந்தது. பாவம் ஆடல் முழுவதும் நிறைந்திருந்தது. இக் கீர்த்தனை அனை வரது மனங்களையும் பிடித்து உலுப்பியது போன்ற உணர்வைத் தந்தது. எதுவித விருப்பங்களும் நிறைவேறாத மனிதனாக நந்தனார் ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்லும் காட்சி. நடனத்தின் முடிவில் பல்லவியாகவும் கருப்பொருளை பிரதிபலிக்கும் (Theme line) வரியாகவும் அமைந்து நடனத்தின் முடிவில் ஒலிக்கும் 'வருக லாமோ ஐயா .....' என்ற பாடல் வரி மீண்டும் மீண்டும் வெவ்வேறு சங்கதிக ளு டன் பாடப்பட, கால்களை பின்னோக்கி பின்னிப்பின்னி வைத்தவாறு தளர்நடையுடன், ஏமாற்றமுற்ற முக பாவத்துடன் மேடையின் இடது மூலையால் இயலாமையுடன் வெளியேறியமை, அந்த ஏமாற்ற உணர்வை அப்படியே மேடை வெளி முழுவதிலும் நிரப்பி விட்டுச் செல்வதாக இருந்தது.

இந்த கீர்த்தனையில் மேடைவெளியின் கையாட்சி முக்கியமானது. மேடையின் மத்திய பகுதிக்கு முன்புறம் சிதம்பரமாகவும் , நடனம் முழுவதுமேமேடையின் மத்திய பகுதிக்கு பின்னுள்ள பகுதியினுள் மட்டும் மட்டுப் படுத்தப்பட்டிருந்தமை நந்தனாரின் இக்கட்டான, இயலாமையின் உணர்வுகளை அழுத்திக் காட்டுவதாயமைந்தது. தனி ஒரு பரதநாட்டியக் கலைஞர் தனிநடன ஆற்றுகையில் (Solo performence) ஆற்றுகை வெளியை இவ்வளவிற்கு பயன்முனைப் புடையதாகக் (effectitle) கையாண்டமை குறிப்பிட்டுக் கொல்ல வேண்டிய அம்சமாகும்.

பொதுவாகவே (Perfection) என்பது ரமா அவர்களின் நடனம் முழுவதும் விரவியிருந்தது. துல்லியமான பாவ வெளிப்பாடு, நடனத்திற்கான பாடல் பெண் குரலிலும், ஜதி சொல்லுதல் ஆண்குரலிலும் வெளிபட்டமை மிடுக்காவும், நடனத்திற்கு கனதி சேர்ப்பதாகவும் அமைந்தது.

ஒரு நல்ல நடனக் கலைஞருக்கு கலைஞனின் உடல் தவிர்ந்த ஏனைய ஆடை அலங்காரங்கள் அனைத்தும் இரண்டாம் பட்சமானது என்பதற்கு ரமா அவர்களின் நடனம் நல்ல எடுத்துக் காட்டாகும். பரத நாட்டியத்தில் ஆடை ஒப்பனை வெறும் அலங்காரத் திற்கானது என்ற தன்மையிலிருந்து விடுபட்டு அவையும் நடனத்தின் ஒரு பகுதியாகிச் செய்தியினைக் காவிநின்றன.

நந்தனார் கீர்த்தனை ஏற்படுத்திய உணர்வினை சமநிலைக்குக்கொண்டு வரும் படியாக தில்லானா அமைந்தது. தரையில் கால் எப்போதுமே சில அங்குலங்கள் மிதந்திருப்பதான உணர்வு தில்லானா முழுவதிலும் விரவியிருந்தது. தொடர்ந்து திருப்புகழ் (ஏறு மயில்) மத்தியமாவதி ராகத்தில் பாடப்பட்டு அதுவே மங்களமாகவும் அமைந்தது. மயிலில் முருகன் ஏறி விளையாடும் சஞ்சாரி பாவம்



வொன்றுமே வெவ்வேறு வகையான உணர்வினைக் கொண்டிருக்கிறது என்பதனை இந்த நடனத்தினை பார்த்த பின்பு தான் உணரமுடிந்தது.

நடனம் ஆரம்பமாகி நிறைவெய்தும் வரை பார்வையாளரது எதிர்வினை அடுத்தது என்ன என எதிர்பார்த்து நிற்கும் தன்மையே காணப்பட்டது. 'இன்னமும் கொஞ்ச நேரம் நடந்திருக்கலாம்' , வேறு எங்காவது யாழ்ப் பா ணத்தில் இந்த நிகழ்ச்சி நடைபெறுமா?'' ''எவ்வளவு காலத்தின் பின்பு இப்படி ஒரு நிகழ்ச்சியினைப் பார்த்திருக்கிறோம்...... இவ்வாறு பல எதிர்வினைகளுடன் நடனம் நிறைவெய்தியது.

இந் நடன நிகழ்ச்சியினை ஒழுங்கமைத்தமை நல்லதொரு விடயம் எனினும் சில விடயங்களைக் கருத்திலெடுத்திருந்தால் மேலும் சிறப்பாக இருந்திருக்கும்.

-நெருடல்கள்-

முக்கியமாக 3 ஒளிப்பதிவுக் கருவிகளும் சிறிய மேடை போன்ற அமைப்பில் மேடைக்கு முன்னால் அமைக்கப்பட்டு அதன் மீது படப்பிடிப்பாளர்கள் நின்றமை பார்வையாளருக்கு மிகவும் இடை யூறாக இருந்ததாக உணரப்பட்டது. அது மேடையிலுள்ள கலைஞர்களுக்கும் எத்தகைய இடையூறினை விளைவிக்கும் என் பது ஆற்றுகைக்கலைகளில் ஈடுபடும் கலைஞர்களால் தான் (Live performance Artist ) உணர முடியும்.

புதிது புதிதான கற்பனைகள், வியாக்கியானங்கள், புதிதளித்தல்கள் (Improvaisation) மறுதலிக்காமை என்பவற்றுடன் ரமாவின் நடனம் ஏற்படுத்திய அதிர்வுகள் தரும் பரவசம் எங்குமே எல்லோரிடமுமே வியாபித்திருந்தது. ★

## 'ஈசொவ்ற்' கணனி நிலையத் திறப்பு விழா இன்று

யாழ்ப்பாணம், ஒக. 23

'ஈசொவ்ற்' கணனி நிறுவனத்தின் அலுவலகம் இன்று காலை 9.30 மணிக்கு 114, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் உள்ள கட்டடத்தில் திறந்து வைக்கப்படவிருக்கிறது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வணிகத்துறை பீடாதிபதி கே.தேவராஜாவும் கௌரவிருந்தினராக 'ஈசொவ்ற்' நிறு வனத்தின் நிர்வாகஇயக்குநர் டாக்டர் டயான் ராஜபக்ஷவும் விசேட விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக தொலைக் கல்வி நிலைய இணைப்பாளர் கே. சிவராஜாவும் கலந்து கொள்வர்.

அலுவலகதிறப்பு விழாவை ஒட்டி கிரிக்கெட் போட்டி ஒன்று பி.ப. ஒரு மணிக்கு யாழ்.இந்துக் கல்லூரி மைதானத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இரண்டாவது பிறந்ததின வாழ்த்து



கஜிதரன் - பாலஉமா
தம்பதியாரின் செல்வப் புதல்வன்
க.கலையம்சன்
K.Kalaiyamsan
இன்று (23.08.2009) ஞாயிற்றுக்கிழமை
தனது இரண்டாவது பிறந்த தினத்தை
அவரது இல்லத்தில் கொண்டாடுகிறார்.
க.கலையம்சன் பல்லாண்டு காலம் வாழ
வாழ்த்துகின்றோம்.
பெற்றோரும் உற்றோரும்
சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அருகாமை ஒழுங்கை,
கற்பாளையடி, சண்டிலிப்பாய்.

கார் விற்பனைக்கு

ஆங்கில இலக்கமுடைய சிறியரக SUZUKI (JAPAN) கார் மற்றும் VAN விற் பனைக்குண்டு.
தொடர்பு : 077 7292199
077 9783408
(88156)

அம்பாள் திருமண சேவை
AMBAL MARRIAGE SERVICE
எம்மிடம் சகல சமூகத்தினருக்கும் பொருத்தமான மணமக்கள் உள்ளனர். நேரடியாக, தொலைபேசி, அஞ்சல் மூலம் தொடர்பு கொள்ளவும்.
T.P.0772845385 தகவல்கள் இரகசியம் பேணப்படும்.
அம்பாள் திருமண சேவை
புஸ்பா வீடியோ, நாவலி வீதி, ஆனைக்கோட்டை
(C/560428)

திருமண வாழ்த்து

நிகழும் மங்கள விரோதி வருடம் ஆவணித்திங்கள் ஏழாம் நாளான (23.08.2009) இன்று



புங்குடுதீவுகிழக்கு
திரு.திருமதி. இலட்சுமணன்,
ஜெயப்பிரேமா
தம்பதியரின் சிரேஷ்டபுத்திரன்
செல்வன் துஷ்யந்தன்
அவர்கட்கும்

பண்டத்தரிப்பு
திரு. திருமதி. அழகரத்தினம்
சறோஜினி தேவி
தம்பதியரின் கனிஷ்ட புத்திரி
செல்வி. சிவமாலினி
அவர்கட்கும்



பிரான்சில் (SALON SABRINA 42,CHEMIN DES FOURCHES 93380 PIERREFITTE)
நடைபெறும் திருமணத்திற்கு சீரும் சிறப்புடன்
வாழ்வில் மனமொத்த தம்பதியினராய்
எல்லாம் பெற்று இன்பமுடன் வாழ வாழத்துகின்றோம்

27/30, பரகும்பா பிளேஸ்,
வெள்ளவத்தை, கொழும்பு
0114915886 / 0718818641

என்றும் அன்புடன்
திருமதி அழகரத்தினம், சறோஜினிதேவி (அம்மா-மாமி)
சிவரூபன் (அண்ணா-மைத்துனன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொள்வனவு செய்யப்படும்

பழைய பித்தளை IK160/=, பழைய அலுமினியம் IK 90/=
கொள்வனவு செய்யப்படும்.
தொடர்பு: செல்வா கார்ட்வெயார்ஸ்
120, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். தெ.பே: 021 222 2873
(88132)



அம்மா பகவான் சரணம்

## சாரங்கன் பூஞ்சோலை

எம்மிடம் நல்லின செம்பரத்தைகளும், பல வர்ணக் குறோட்டன்களும், பயன்தரும் மரங்களும் சகல விதமான பூங்கன்றுகளும், பூங்கன்றுகளை நோய்த் தாக்கத்திலிருந்து பாதுகாப்பதற்குத் தேவையான சகலவிதமான மருந்துகளும், பிளாஸ்ரிக் மற்றும் சிமெந்திலான பூச்சாடிகளும் விற்பனைக்குண்டு.

295, ஆலடிச் சந்தி,
பலாலி வீதி, திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
(சி/560421)


**விபத்தில் காயம்**

உழவு இயந்திரம் தடம் புரண்டதில் அதில் பயணித்தவர் தூக்கி வீசப்பட்டு காயமடைந்தார். இச்சம்பவம் கச்சாயில் இடம்பெற்றது.

இரு உழவு இயந்திரங்கள் ஒன்றையொன்று முந்திச் செல்ல முயன்ற வேளையில் இச் சம்பவம் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது. இதே இடத்தைச் சேர்ந்த என்.குகன் என்பவர் தலையில் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார். (203-207)





அன்புடையீர்!
நாளை (24.08.2009) திங்கட்கிழமை பிற்பகல் 4 மணியளவில் எமது செல்வப் புதல்வன் நிவேஸ் அவர்களுக்கு 3 ஆவது பிறந்ததின விழாவை எமது இல்லத்தில் வெகு விமர்சையாகக் கொண்டாடவிருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து இரவு நடக்கும் விருந்துபசாரத்திலும் கலந்து வைபவத்தைச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தாங்கள் நல்வரவை நாடும்
சுகுமாரன் - சாந்தினி.
மிலேனியம் றெஸ்ரோறன்ஸ்,
இல-76/60, இராமநாதன் வீதி,
யாழ்ப்பாணம்.
(88150)



A LIFE - TIME CHANCE

# STUDY MEDICINE

3rd Batch arrived @ Belarus on 18th August


ஆன் டில்கானி சொய்சா
வனித கன்னிகாஸ்திரிகள் ஜூனிம மடம்
பம்பலப்பிட்டி


மொகம்மது இப்றாகிம் மின்னத்துல் ஆஷா
பள்ளிவாசல்துறை.


நிமந்தி தினேஷா குலசிங்க
வீக்ஸ் - இன்ரநெஷனல்
பாணதுர.


நுவந்தி ரஷிக்கா பெர்னான்டோ
செல்.பிறிஜெட் கொன்வென்ட்
கொழும்பு.


சாப்றி மொகமெட் சப்றாஸ் மொகமெட்
சாகிறா கல்லூரி கல்முனை.

MBBS / MD Degree's - recognised by Medical Council's in Sri Lanka, Maldives, USA, UK, Australia WHO & worldwide.

## LITHUANIA
(Schengen & E.U.)

**MD**
Doctor of Medicine
KAUNAS UNIVERSITY OF MEDICINE
6 year (English Medium) Course Fees. 5500Euro per year
Engineering/Management Degrees also Available From
KAUNAS TECHNOLOGICAL UNIVERSITY

## BELARUS
(Eastern Europe)

**MD**
Doctor of Medicine
VITEBSK STATE MEDICAL UNIVERSITY
6 year (English Medium)
Course Fees: USD 3800 Per year

## NEPAL

**MBBS**
Bachelor of Medicine / Bachelor of Surgery
KATHMANDU UNIVERSITY
4 1/2 yr + 1 yr Internship (English Medium)
Approx. Rs. 780,000 per semester (for 8 Semester)

Student with O/L, A/L & Pending Result can Apply

Colombo Ads - 077 741 24 75

## PATHE ACADEMY
The People's Academy...
PEOPLE'S ACADEMY FOR TERTIARY AND HIGHER EDUCATION
Overseas Student Placement Department
111- 1/2, Maya Avenue, Kirulapona, Colombo - 06. Tel : 2586418

For Admissions contact
0773017883 (Tamil)

www.patheacademy.org



## தேவை

கொழும்பில் பிரபல இலத்திரனியல் பொருள்கள் விற்பனை, பழுதுபார்த்தல், சேவையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் ஸ்தாபனத்திற்கு லிகிதர்(Quick book அனுபவத்துடன்), சந்தைப் படுத்துபவர்கள், இலத்திரனியலாளர் (எலக்ரோனிக்/எலக்ரிக்கல்) அனுபவமுள்ளவர்கள், பயிலுநர்கள் இரு பாலரும் விண்ணப்பிக்கலாம். இரண்டு நற்சாட்சிப் படுத்துபவர்களின் விவரங் களுடனும், தொலை பேசி இலக்கத்துடனும் விண்ணப்பிக்கவும்.

★ 177, பழைய சோனகத்தெரு, கொழும்பு-12
★ 90, கந்தபிரகாசம் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 0777382343
(88138)



## ஐங்கரன் திருமண சேவை

எங்களிடம் U.K Citizen 30, 35, 38 வயது கனடா Citizen 31, 34 வயது, பிரான்ஸ் Citizen 29 வயது, அமெரிக்கா கிறீன்காட் விசா 36 வயது ஆகிய மணமகன்மார் உள்ளனர். தகுதியான மணமகள்மாரை எதிர் பார்க்கின்றனர். 24 மணிநேர தொலைபேசி வசதி உண்டு.

Fax:-
0442086810701
0442086720673

லண்டன் ஐங்கரன்:-
00447535384166
00447508295863
(88136)



## DELL LAPTOP FOR SALE

ORIGINAL VISTA HOME EDITION (INCLUDING RECOVERY AND HOME EDITION DVD) WITH 8 MONTHS INTERNATIONAL WARRANTY. MODEL - INSPIRON - 1525, INTEL CORE 2 DVO CPV T5850 & 2.18 GHZ. RAM-2GB, HDD-160 GB, DVD RAM, HTML PORT, DVI PORT, SVHOVT, WIFI, BLUE TOOTH, SCREEN 15.4, WEB CAM-2.0. WITH MULTIMEDIAREMOTE.CONTACT-0779150238.
(88153)



# யாழ் மண்ணில் CAREKLEEN நிறுவனம்....

தென்னிலங்கையில் கொழும்பு உட்பட ஏனைய அனைத்து மாவட்டங்களிலும்
பிரபல வங்கிகள், தனியார் நிறுவனங்கள், தொழிற்சாலைகள்
மற்றும் பிரபல தனியார் வைத்தியசாலைகள் அனைத்திலும்

1. Janitorial Services - அலுவலக பராமரிப்பு மற்றும் சுத்திகரிப்புச்சேவை
2. Messenger Services - அலுவலக சிற்றூழியர் சேவை(Peon Service)
3. Steward Services - உபசரணையாளர் சேவை

போன்ற அனைத்துச் சேவைகளையும் பொறுப்பேற்று சிறந்த முறையில் சேவையினை வழங்கிவரும் **CAREKLEEN** நிறுவனம்

எதிர்வரும் 24ஆம் திகதி (24.08.2009) யாழ் நகரில் தனது சேவையை ஆரம்பிக்கவுள்ள சம்பத் வங்கியில்
எமது நிறுவனம் தனது சேவையை ஆரம்பிக்கின்றது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்
ஏனைய நிறுவனங்களுக்கும் எமது சேவையை விஸ்தரிக்கக் காத்திருக்கின்றோம்

## Jaffna Office

CARE KLEEN
140, Temple Road, Jaffna.
Mobile: 0774528818
E.Mail:m...@yahoo.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழக காங்கிரஸுக்கு புத்துயிர்! ராகுல்காந்தி முயற்சி!!

காங்கிரஸ் கட்சி முன்னர் வலுவாக இருந்த பல மாநிலங்களில் கட்சியைப் புனரமைக்கும் நடவடிக்கையில் ராகுல் காந்தி இறங்கியுள்ளார். முதலாவதாக, இந்த வரிசையில் உத்தரப் பிரதேசத்தில் அவர்



வெற்றியும் கண்டார். நடந்துமுடிந்த லோக் சபா தேர்தலில் உத்தரப் பிரதேசத்தில் காங்கிரஸ் கட்சிக்கு நல்ல அறுவடை கிட்டியது.

1989 இலிருந்து 20 வருடங்கள் உத்தரப் பிரதேசத்தில் காங்கிரஸுக்கு 10 இற்கும் குறைவான இடங்களே கிடைத்துவந்தன. ராகுல் காந்தியின் வாய்ப்பாட்டை அடியொற்றி நடந்து, காங்கிரஸ் கட்சி 21 இடங்களை வென்றெடுத்தது.

ஆனால், இதற்குமுன் 2007 இல் அங்கு நடந்த சட்டசபைத் தேர்தலில் ராகுல் கடுமையாக உழைத்தும் அவரால் வெற்றியை ஈட்ட முடியவில்லை. எனினும், விடாமுயற்சியைத் தொடர்ந்து லோக்சபை தேர்தலில் கைமேல் பயன் கிட்டியது. இதனால் இளைஞர் காங்கிரஸ் முகாமில் அகில இந்திய அளவில் உற்சாகம் கரைபுரண்டு ஒடுகிறது. காங்கிரஸ் பலவீனமாக உள்ள பீஹார், தமிழ்நாடு, மேற்கு வங்கம் ஆகிய மாநிலங்களில் இதே பாணியில் கட்சியைப் பலப்படுத்த ராகுல் காந்தி திட்டமிட்டுள்ளார். இந்த மாநிலங்கள் முன்பு காங்கிரஸின் அசைக்க முடியாத கோட்டைகளாக விளங்கியவை. ஆனால், இடையில் நேரு குடும்பம் அரசியலில் இருந்து விலகி இருந்தமை, 1991 - 1998 காலப்பகுதியில் இங்கு பெரும் தொய்வு ஏற்பட்டது.

அந்த இடைவெளிக்குள் மாயாவதி, தமிழகத்தில் பாட்டாளி மக்கள் கட்சி, மேற்கு வங்கத்தில் மம்தா பானர்கி என பல கட்சிகள் புகுந்துகொண்டன. அக்கால இடைவெளியில் மத்தியில் காங்கிரஸ் ஆட்சி பீடம் ஏற முடியாததால், கட்சி இம் மாநிலங்களில் மேலும் பலவீனமடைலாயிற்று. இப்போது மீண்டும் காங்கிரஸ் கட்சி அரியணை ஏறி இருப்பதால், அதைப் பயன்படுத்திக் கட்சியை மீளக் கட்டியமைக்க ராகுல் காந்தியை சோனியா களமிறக்கியுள்ளார்.

இதேபோன்று, காங்கிரஸ் கட்சியில் இந்திரா காந்தி - சஞ்சிவ் காந்தி (1970 - 1980), இந்திரா காந்தி - ராகுல் காந்தி இணை என தாய் - தனயன் அரசியல் தலைமை செயற்பட்டிருந்தது என்பது உண்மையே. ஆயினும், இன்றைய நாளில் சோனியா காந்தி - ராகுல் காந்தி இணை இந்த முன்னைய இணைகளைக்காட்டிலும் சுறுசுறுப்பான ஒன்றாக விளங்கி வருகிறது. அது மட்டுமன்றி, முன்பு இந்திராவும் மகன்களும் இருந்த காங்கிரஸ் கட்சி தனிக்காட்டு ராஜாவாக இந்திய அரசியலில் ராஜாங்கம் நடத்திய காலம். இன்றுள்ள நிலையில் பல்வேறு பிராந்தியக் கட்சிகள் புதிது புதிதாக முளைத்து இந்திய அரசியலில் கோலோச்சி வருகின்றன. இதனை எதிர்த்து எதிர்நீச்சல் போடவேண்டிய கட்டாயம் சோனியா - ராகுல் இணைக்கு ஏற்பட்டுள்ளது. ஆனால், பிரதமர் மன்மோகன் சிங் நிர்வாகத்தைக் கவனிப்பதால், சோனியாவுக்கும் ராகுல் காந்திக்கும் கட்சியைப் பலப்படுத்துவதில் முழுமூச்சாக ஈடுபட சந்தர்ப்பம் கிட்டியுள்ளது.

உத்தரப் பிரதேசத்தில் கண்ட வெற்றியின் உற்சாகம் பீஹாரிலும், தமிழகத்திலும் காங்கிரஸ் கட்சியைப் புனரமைக்கும் ராகுல் காந்தி வாய்ப்பாட்டை அமுல் நடத்தத் தூண்டியுள்ளது. ஆனால், தமிழகத்தில் இலங்கை அகதிகள் இருப்பதால் இவர்களில் புலி உறுப்பினர்கள் இருக்கக்கூடும் என்பதான எச்சரிக்கையை உளவுத்துறை தொடர்ந்து விடுத்து வருகிறது. இதனால் ராகுல் காந்தியோ, சோனியா காந்தியோ சமீபத்தில் தமிழகத்துக்கு வருவதில் தடைகள் உள்ளன.

இருந்தும் ராகுல் காந்தியின் நெறிப் படுத்தலில் தமிழக காங்கிரஸில் பல அதிரடி மாற்றங்களைக் கொண்டுவரவும் திட்டமிடப்பட்டுள்ளது. இதில்

**எஸ்.சுரேந்திரஜித்**

வேடிக்கை என்னவென்றால், உத்தரப் பிரதேசம் போலன்றி தமிழகத்தில் காங்கிரஸ் கட்சிக்குள் ஆயிரம் கோஷ்டிகள் உள்ளன. மத்திய உள்துறை அமைச்சர் சிதம்பரம், மாநில காங்கிரஸ் தலைவர் தங்கபாலு, மூப்பனார் மகனும் மற்றொரு மத்திய அமைச்சருமான வாசன், முன்னாள் மாநில தலைவர்கள் குமரி ஆனந்தன், இளங்கோவன், கிருஷ்ணசாமி என கோஷ்டிகளுக்குப் பங்கமில்லை. இவர்களை ஒன்றிணைத்து வேலை வாங்குவது என்பது உத்தரப் பிரதேசம் போல் ராகுல் காந்திக்கு எளிதான வேலையுமில்லை. நடந்துமுடிந்த இடைத்தேர்தலில் 5 தொகுதிகளில் இரண்டில் போட்டியிடும் வாய்ப்பு காங்கிரஸுக்குக் கிடைத்தது. அது இரண்டுமே சிதம்பரம், தங்கபாலு ஆதரவாளருக்குக் கிடைத்ததால், வாசன் தரப்பு பெரும் புகைச்சலில் இருப்பதாகத் தெரிகிறது. தங்கபாலு தான் போட்டியிட்ட தொகுதியில் [illegible] வாசன் ஆதரவாளர்களின் ஒத்துழையாமையே என்று கூறப்படுகின்றது. இதனால் வாசன் முகாம் பற்றி மேலிடத்தில் தங்கபாலு போட்டுக் கொடுத்ததால் தான் வாசன் தரப்புக்கு இடைத் தேர்தலில் போட்டியிட இடமளிக்கப்படவில்லை. இவ்வாறு இடியப்பச்சிக்கல் போலுள்ள தமிழகக் காங்கிரஸில் கோஷ்டிச் சிக்கலுக்கு ஒரு முடிவே இல்லை எனும் நிலையே உள்ளது. இவற்றை இணைத்து உருப்படியாகக் காரியம் சாதிப்பது ராகுல் காந்திக்குப் பெரும் வேலையாகத்தான் இருக்கும். அவர் வேறு நேரடியாகத் தமிழகத்துக்கு விஜயம் செய்ய முடியாத இக்கட்டில் உள்ளார்.

இது தவிர, தமிழகக் காங்கிரஸாருக்கு ஆட்சியில் பங்கு தரவேண்டுமென்ற கோரிக்கையும் அவ்வப்போது தி.மு.கவிடம் முன்வைக்கப்பட்டு, பின்னர் பின்தள்ளிப்போய் வருவது வழக்கமாகிவிட்டது. இதனால் தமிழக காங்கிரஸார் பெரும் வயிற்றெரிச்சலில் இருப்பது கண்கூடு. தமிழகத்தில் தி.மு.க. ஆட்சியானது காங்கிரஸின் தயவில் நடப்பதால், ஆட்சியில் காங்கிரஸுக்கு பங்கு தராதிருப்பது பெரும் அநீதி என்ற அபிப்பிராயம் காங்கிரஸாரிடையே மேலோங்கியுள்ளது. ஆனால், சோனியா காந்தியோ வேறுவிதமான சிந்தனையில் உள்ளார். ஜெயலலிதாவுடன் ஒப்பிடுகையில், கூட்டணி உறவைப் பேணுவதில் கலைஞர் எவ்வளவோ மேல் என அவர் கருதுவது தெளிவான உண்மையாகும். ஆனால், ராகுல் காந்திக்கு கலைஞர் தரப்பு பற்றி அவ்வளவு நல்ல அபிப்பிராயம் கிடையாது. தந்தையின் கொலைக்கு கலைஞர் காரணம் என்ற அந்த பழைய ‘பிரமை’யில் ராகுல் காந்தி உள்ளார். இதன் காரணமாகவே லோக் சபாத் தேர்தலுக்குமுன் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்துடன் கூட்டணி வைப்பதில் தவறில்லை எனக் கூறினார் என்பதும் கவனிக்கத்தக்கது. இக்கருத்து கலைஞருக்கு சற்றே மனக் கசப்பைத் தந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.



காங்கிரஸை தமிழகத்தில் புனரமைப்பது என்று ராகுல் காந்தி தொடங்கியுள்ள இந்தப் புதிய நடவடிக்கையும் திராவிட முன்னேற்றக் கழகம் மீது அவர் கொண்டுள்ள உள்ளார்ந்த காழ்ப்புணர்ச்சி மற்றும் பகையின் வெளிப்பாடே.

இது தி.மு.கவுக்கும் புரியாததல்ல. காங்கிரஸ் - தி.மு.க உறவு என்பது சுட்ட மண்ணும் பச்சை மண்ணும் போல ஒட்டியும் ஒட்டாத உறவாகவே தொடர்கிறது.

ஜெயலலிதாவின் அகங்காரம் என்ற ஒரே காரணிதான். இந்த இரு கட்சிகளையும் பிணைத்து வைத்திருக்கும் விடயமாகும். ஒருவேளை ஜெயலலிதா தனது ஆணவ வியாதியிலிருந்து மீண்டால் சோனியா காந்தியின் காலமும் முடிவடைந்தபின் ராகுல் காந்தி உடனடியாக அ.தி.மு.கவுடன் உறவை ஏற்படுத்திக்கொண்டுவிடுவர் என்பது உணரப்படுகிறது.

இதேவேளை, பாரதிய ஜனதாவுடன் அ.தி.மு.க. கூட்டணி வைக்கவேண்டுமென சுப்பிரமணியசுவாமி மீண்டும் திருவாய் மலர்ந்தருளியுள்ளார். இந்த இருவரும் இவரை ஒத்த மற்றொரு பிராமணப் பேயுமான துக்ளக் ராமசாமி (சோ)யும் அ.தி.மு.கவுடன் ஜெயலலிதாவைப் பிணைத்துவிடப் படாதபாடுபட்டும் இயலவில்லை. சிறுபான்மை மக்களின் இரத்தத்தைக் குடித்து வெறியாட்டம் போடத் துடிக்கும் இந்த இரு பிராமண முதலைகளுக்கும் அ.தி.மு.க., பி.ஜே.பி. பிளவு ஒரு பெரிய இழப்பே. ஜெயலலிதாவின் குணநலன்களை நன்கு அறிந்த ஒருவராயினும் சுப்பிரமணியசுவாமி திருந்தினாரில்லை. அவ்வாறாயின், அவரது உள்நோக்கம் தெளிவானது. ஜெயலலிதாவும் பிராமணப் பேய்; சிறுபான்மையினரைக் கடித்துக் குதற தயாராக உள்ளவர். எனவே, அவருடன் சேர்வதால்தான் இயற்கையான ஒரு கூட்டணி உருவாகும் என்பதை சுவாமி உணர்ந்துள்ளதையே இது காட்டுகிறது. எனினும் இதே சுவாமி ஈழத் தமிழர்களுக்காக தேர்தலுக்கு முன் குரல் கொடுத்த எவரும் இப்போது தேர்தலுக்குப் பின் குரல் கொடுப்பதில்லை என வருத்தமும் தெரிவித்துள்ளார்.

இது ஜெயலலிதாவைக் குறி வைத்தா அல்லது ராமதாஸ் மற்றும் திரையுலக ஈழ அனுதாபிகளைக் குறி வைத்தா என்பது தெரியவில்லை. எவ்வாறாயினும், பாரதிய ஜனதா ஜெயலலிதாவை வளைத்துப் பிடிக்க முயல ஜெயலலிதாவோ தி.மு.கவிடமிருந்து காங்கிரஸைப் பிரிக்க படாதபாடுபட்டு வருகிறார். சென்ற நாடாளுமன்றத்தில் ஜெயலலிதாவுக்கு ஒரு எம்.பி. கூட இருக்கவில்லை. இந்த முறை தட்டுத்தடுமாறி 8 எம்.பிக்களை அவர் வென்றெடுத்துள்ளார். அதனால், சோனியா காந்தி இவரை ஒரேயடியாக எடுத்தெறியவும் முடியாத நிலை உள்ளது. தி.மு.க. அளவுக்கு மீறி ஏதாவது செய்தால் ராகுல் காந்தியின் ஊடாக அ.தி.மு.க. - காங்கிரஸ் உறவு மலரவும் வாய்ப்பு உண்டு என்பதை மறுப்பதற்கில்லை.

★★★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## நாகபூஷணி திருமண சேவை

உள்நாட்டு வெளிநாட்டு மணமகன்கள், மணமகள்கள் மற்றும் CIMA Acountants, Engineers, Doctors, Teachers, Bankers, B.Sc., MSc., Ph.d மற்றும் பட்டதாரி, சகல அரசதுறைகளிலும், தனியார் துறைகளிலும் பணிபுரியும் மணமகன்கள் மணமகள்கள் எம்மிடம் உண்டு.

துரிதமாகவும் மிகச் சிறந்த முறையிலும் நீங்கள் விரும்பும் மணமகன்/மணமகளைப் பெற்றுக் கொள்ள நேரிலோ/ Fax மூலமோ தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ளலாம். பதிவுகள் யாவும் இலவசம்.

தொடர்பு: நாகபூஷணி திருமணசேவை
125, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
Fax No: 021 222 9306, T.P.No: 077 138 7596 (88111)

## இதய அஞ்சலி

எமது பிரதேச செயலகத்தில் கடமையாற்றும்
திருமதி கந்தராஜா கெங்கேஸ்வரியின் அன்புத் தந்தை
**செ.திருநாவுக்கரசு**

20.08.2009 புதன்கிழமை காலமாகிவிட்டார். அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குவதோடு அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

பிரதேச செயலகம், வலி.மேற்கு, சங்கானை.
பிரதேச செயலரும், அனைத்து நலன்புரிச் சங்க அங்கத்தவர்களும். (88129)

## நீங்கா நினைவுகளுடன் ஓராண்டு.....

மண் மகிழ 19.12.1981
மனம் நெகிழ 03.09.2008



அமரர்
**கந்தையா புவனேஸ்வரன் (மோகன்)**
(சாரதி, தனியார் சிற்றூர்திச் சேவை, புங்குடுதீவு)
திதி: ஆவணிச் சதுர்த்தி (23.08.2009)

ஆண்டொன்று ஆனதுவோ! ஆறவில்லை எம்துயரம்
ஆற்ற எமக்கு நீயன்றி யார் வருவார்?
உன் குழந்தை உன்முகம் காணத் தவிக்குதையா!
ஓடோடி வந்து எம்துயர் நீக்கமாட்டாயா?

5 ஆம் வட்டாரம், நயினாதீவு. (88116)
என்றும் உன் நினைவில்....
உன் உயிரின் உயிரான உறவுகள்.

## மணமகன் தேவை

யாழ்.இந்து, பல்கலைக்கழக விரிவுரையாளருக்கு (வயது 31) தகுந்த மணமகன் தேவை. தொடர்புக்கு: 060- 2737449. வெளிநாடு விரும்பத்தக்கது. (88025)

## வீடு வாடகைக்குத் தேவை

சிறிய குடும்பம் ஒன்று வசிப்பதற்கு யாழ். நகர்ப் பகுதியில் ஸ்ரான்லி வீதி, கஸ்தூரியார் வீதி (வின்சர் சந்திக்கு அருகில் விரும்பத்தக்கது) ஆகிய பிரதேசங்களில் வீடு வாடகைக்குத் தேவை. (ஐந்து சந்திக்கு அருகாமையிலும் விரும்பத்தக்கது)

(88125) தொடர்பு: 0777 555855

## தேவை

நிறுவனம் ஒன்று காரியாலயம் கட்டுவதற்கு யாழ்.அரசடி வீதிக்கும் ஸ்ரான்லி வீதிக்கும் இடையில் வீட்டுடன் கூடிய காணி அல்லது வெறும் காணி 2 பரப்புக்கு மேல் தேவை.

தொடர்பு: விளம்பர இல. 3929,
(சி/560409) மே/பா, உதயன்.

## தேவை

பலாலி வீதியில் திருநெல்வேலி பெற்றோல் ஷெற்றிற்கும் ஆலடிச் சந்திக்கும் இடையில் அல்லது ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி சந்தைக்கு அருகில் அல்லது இராமநாதன் வீதி, பரமேஸ்வராச் சந்திக்கு இடையில் தையல் வேலைகளுக்கு வசதியான அறையுடன் கூடிய விறாந்தை தேவை.

தொடர்புகளுக்கு:
திருமதி அரியமலர் நடராசா (மலர் அக்கா)
கற்பகப்பிள்ளையார் கோயிலடி,
உரும்பிராய் வடக்கு.
T.P.: 077 4733346 (88023)

## Inkaran Wedding Services


இந்தியாவில் சென்னை, மதுரை, திருச்சி ஆகிய நகரங்களில் திருமணத்திற்கான சகல ஒழுங்குகளும் மிகக்குறைந்த செலவில் செய்து தரப்படும். மண்டபம், உணவு, ரைவருடன் வாகனம், ஹொட்டல், தனிவீடு, ஆண்கள், பெண்கள் தங்குவதற்கான Hostel வசதிகளும் செய்துகொடுக்கப்படும்.

லண்டன் தொடர்பு:
00447502340714 - ஐங்கரன்
இந்தியா தொடர்பு:
0091600172435 - பாஸ்கரன்

## வீடு வளவு விற்பனைக்கு

உடுப்பிட்டி, இலக்கணாவத்தை,
கற்பகவிநாயகர் கோயிலுக்கு
அருகில் 3 பரப்புக்
காணியுடன் கூடிய வீடு
விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0777 294249 (88140)

## மரண அறிவித்தல்



### சரவணமுத்து சுப்பிரமணியம்

(இளைப்பாறிய கணக்காளர் - இந்தியன் ஓவர்சிஸ் வங்கி)

சங்கானை, மாளிகாவத்தையைப் பிறப்பிடமாகவும் கணேஸ்வரம், அளவெட்டியை வசிப்பிடமாகவும் கல்வளை, சண்டிலிப்பாயை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட சரவணமுத்து சுப்பிரமணியம் 22.08.2009 சனிக்கிழமை அதிகாலை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சரவணமுத்து - அன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற தேவிகாராணியின் பாசமிகு கணவரும் கந்தையா - சொர்ணம்மா தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற மைதிலி மற்றும் மிருணாளினி, மந்தாகினி (லண்டன்), சுபாங்கி (கனடா), ஸ்காந்தரூபன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் கலையரசன் (கால்நடை அபிவிருத்தி போதனாசிரியர், சுன்னாகம்), சிவாஜி, ஸ்ரீஸ்கந்தராஜா (லண்டன்), வரதராஜன் (கனடா), சஞ்சலா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனும் கலைப்பிரியா (மலேசியா), பவித்திரா, கீர்த்திகா, தாமரா, சரணியன், ஜிஸ்ணு (கனடா), பங்கஜன் (பிரான்ஸ்) ஆகியோரின் பேரனும் காலஞ்சென்றவர்களான நாகராசா, சிவபாக்கியம், சிவக்கொழுந்து, குணமணி, சின்னத்தம்பி ஆகியோரின் அன்புச் சகோதரனும் மற்றும் இரத்தினவேல் (இளைப்பாறிய விமானப்படை அதிகாரி), காலஞ்சென்ற சகுந்தலாதேவி, அகிலராணி, சண்முகவேல் (இளைப்பாறிய கல்வி அதிகாரி), ரஞ்சிதமலர் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.08.2009) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் சண்டிலிப்பாயில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மானிப்பாய் பிப்பிலி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கல்வளை, சண்டிலிப்பாய். (88129)
தகவல்: ந.சிவாஜி (மருமகன்).

## ஆவணிச் சதுர்த்தி

கெருடாவில், ஓக.23


கெருடாவில் சித்திவிநாயகர் ஆலயத்தில் ஆவணி மாத விநாயக சதுர்த்திப் பூசை இன்று ஞாயிற்றுக்கிழமை நண்பகல் விநாயகப் பெருமானுக்கு அபிசேகமும் இரவு விநாயகப் பெருமான் வீதியுலா வருதலும் இடம்பெறும். (203-253)

* * *

நல்லூர் வடக்கு சந்திரசேகரப் பிள்ளையார் ஆலய ஆவணிச் சதுர்த்தி பூசைகள் இன்று இடம் பெறவுள்ளன.

விநாயகப் பெருமானுக்கு 1008 சங்காபிஷேகமும் பஞ்சமுக அர்ச்சனையும் நடைபெறவுள்ளன. (203)


உறுதியும் நம்பிக்கையும் பெற்ற
விவசாய மற்றும் மரவேலை உபகரணங்கள்



வியாபார தொடர்புகளுக்கு:
KAMSON HARDWARE
Direct Importers
235, Old Moor Street, Colombo - 12
Tel: 2435413, 2332834, 2337353


## 14ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 08 . 01 . 1947



விண்ணில் 13 . 09 . 1995

### சிற்றம்பலம் தவராஜா

(முன்னாள் உதவிப் பொலிஸ் அதிகாரி- பொலிஸ் நிலையம், காங்கேசன்துறை)
திதி: சதுர்த்தி

*எங்கள் அருமை அப்பாவே! உங்கள் ஆத்மா சாந்தியடைய எங்கள் பிரார்த்தனைகள்.*

1705 - 25 Silver Spring Blvd, Scarborough- ont, mv lmg Canada.ph: 0041 66626134.
அன்பு மகள்- பு.பத்மதர்ஷினி, அருமை மருமகன்- பு.புவனசிறிகரன் (கனடா) மற்றும் குடும்பத்தினர். (88131)

## மரண அறிவித்தல்கள்

### கனகசபை கைலநாதன் (J.P.)



வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபை கைலநாதன் 21.08.2009 வெள்ளிக்கிழமை காலமானார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.08.2009) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.06, கனகசபை லேன்,
வண்ணார்பண்ணை,
சிவலிங்கப்புளியடி, யாழ்ப்பாணம்.
T.P.: 021 222 8680 (சி/560417)
தகவல்: உமைபாலன் (மகன்).

### மாரிமுத்து பாலசிங்கம் (சிங்கம்)

(லொறிச் சாரதி)



புத்தூர் மேற்கு, நவக்கிரியைப் பிறப்பிடமாகவும் சரவணையை வசிப்பிடமாகவும் தற்போது நவக்கிரியில் வசித்த வருமான மாரிமுத்து பாலசிங்கம் (சிங்கம்) 21.08.2009 அன்று காலமானார்.

அன்னார் மாரிமுத்து- தங்கமுத்து தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும் புஸ்பராணி (சிவகிளி)யின் அன்புக் கணவரும் முத்தம்மா காலஞ்சென்ற வேலுப்பிள்ளை மற்றும் சின்னத்துரை காலஞ்சென்ற பாலர் மற்றும் லக்சுமி, பாக்கியம் ஆகியோரின் சகோதரனும் யோகம்மா, சிவயோகம் காலஞ்சென்ற தர்மகுணசிங்கம் மற்றும் தர்மராசா, வர்ணகுலசிங்கம் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.08.2009) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு அன்னாரின் நவக்கிரி, புத்தூர் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக நிலாவரை இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நவக்கிரி, புத்தூர். (88144)
தகவல்: குடும்பத்தினர்.


STUDY IN LONDON 100% Guarantee INTERNATIONAL CITY COLLEGE



ONLY WITH O/L
NO NEED ENGLISH
NO INTERVIEW
Sports Management
Business Management
Hospitality Management
Banking and finance
Gem/Jewelry/Arts
Engineering
Building constrution
Computing
Clothing Technology
Cricket coaching

Separate classes for girls
INDIVIDUAL CLASSES
Classes conducted by: Dr. Surandraraj M. Anzeer Bsc. UK
வெளிமாணவர்களுக்கு கொழும்பில் தங்குமிட வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

தேவையான Document ஒழுங்குகள்
மூன்றே வாரத்தில் விசாவுக்கான ஒழுங்குகள்
பணவீதியான ஒழுங்குகள்

ENGLISH CLASSES
IELTS SPOKEN DIPLOMA
Visit us: www.icclanka.com

No: 07, W.A Silva Mawatha Wellawatte, Colombo - 06, Sri Lanka Tel: 0114 594 104
Opposite To HNB & Sarvanabavan Hotel | 10 METERS FROM GALLE ROAD
UK USA MALAYSIA SINGAPORE INDIA
தமிழ் மொழிமூல அழைப்புக்கு - 077 2 955 977
LAWYERS: Mr. M.Zahir, Mr. S.Dones, Miss. Subasiny
COMMISSIONER FOR COMPANY SECRETARY

HND, BBA, B.com, BBM, BA, MA, BEng, LLB, MBBS, MA, MSc, MBA, PhD Tel: 0114 554910, 07712 50 789 ISO CERTIFIED INSTITUTION


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# நாட்டில் தொடரும் முடியாட்சி

இன்றைய இலங்கையின் அரசியல் சீரழிவுநிலைமைக்கான பிரதான காரணங்களில் ஒன்றை வெளிப்படையாகச் சுட்டிக்காட்டியிருக்கின்றார் இலங்கையின் முன்னாள் வெளிவிவகார அமைச்சரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மக்கள் பிரிவின் தலைவருமான மங்கள சமரவீர எம்.பி.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையின் காரணமாகவே நாட்டில் வன்முறைச் சம்பவங்கள் உயர்வடைந்துள்ளன என்றும் 31 வருட நிறைவேற்று அதிகார ஆட்சி முறையின் காரணமாகவே நாட்டின் பொருளாதார, சமூக, அரசியல் விழுமியங்கள் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன என்றும் அவர் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

நாட்டின் முழு அதிகாரமும் தனி ஒரு மனிதரிடம் குவிக்கப்பட்டிருப்பதால் இலங்கையின் மக்கள் பிரதிநிதித்துவ சபையான நாடாளுமன்றம், தனது தனித்துவம், செல்வாக்கு, அதிகாரம் போன்றவற்றை இழந்து வெறும் இறப்பர் முத்திரையாகிவிட்டது. சட்டமியற்றும் அதிகாரம் நாடாளுமன்றம் வசம் இருந்தாலும், அது தொடர்பான முடிவுகளை எடுக்க வேண்டிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் பிற அதிகாரங்களுக்கும், செல்வாக்குகளுக்கும், பதவிகளுக்குமாக ஜனாதிபதியின் தயவில் தங்கியிருக்கவேண்டியவர்களாக இருக்கின்றார்கள். இதனால் நாடாளுமன்றின் சுயதனித்துவம் தாழ்ந்து போய்விட்டது.

ஒரு ஜனநாயக தேசத்தில் நீதி, நெறிமுறையான - மாண்புமிக்க - விதந்துரைக்கப்படத்தக்க ஆட்சி நிலவவேண்டுமானால் அதற்கு முக்கியமான மூன்று துறைகள் தனித்துவமாகவும் செழுமையாகவும், நீதியாகவும் இயங்க வேண்டியமை மிகமிக அவசியமாகும்.

நீதித்துறை, நிறைவேற்றுத்துறை, சட்டவாக்கற்துறை (நாடாளுமன்றம்) ஆகியவையே அவையாகும். இந்த மூன்றும் ஒன்றில் ஒன்று தங்கியும், அதே வேளை தமது தனித்துவத்தையும் செயன்முறைப் போக்குச் சிறப்பையும் பேணியும் இயங்குவது அவசியமாகும்.

ஆனால் இந்தத் தேசத்திலோ நிலைமை தலைகீழ்.

சட்டமாக்கும் துறையான நாடாளுமன்றம் நிறைவேற்று அதிகார ஜனாதிபதியின் காலடியில். நாட்டின் பாதுகாப்புப் படை உட்பட சகல செல்வாக்கு அதிகாரத்துறைகளும் ஜனாதிபதியின் சொற்படி நடக்கும் நிலைமை. நீதித்துறையின் உயர்பதவிக்கு உரியவர்களை நியமிக்கும் அதிகாரம்கூட ஜனாதிபதியிடம்தான்.

சர்ச்சைக்குரிய எரிபொருள் கொள்வனவு தொடர்பான 'ஹெட்ஜிங்' வழக்கில் உயர்நீதிமன்ற உத்தரவுகளை நடைமுறைப்படுத்த ஜனாதிபதியும், அரசும் மறுத்துவிட்டநிலையில் தனது உத்தரவுகளை வாபஸ் பெற்றுகொண்டு, வாலைச்சுருட்டிக்கொண்டு பின்வாங்க வேண்டிய இக்கட்டு உயர்நீதிமன்றுக்கு.

நீதித்துறை நிர்வாகம், பொலிஸ்துறை, தேர்தல்கள், பொதுச்சேவைகள் என்பனவற்றை அரசியல் தலையீடின்றி சுதந்திரமாக இயங்கவைத்து முன்னெடுக்கும் திட்டத்துடன் இலங்கையில் உள்ள அரசியல் கட்சிகள் எல்லாம் ஒன்றிணைந்து அரசமைப்பின் 17ஆவது திருத்தத்தைக் கொண்டு வந்தன. ஆனால் நாட்டின் ஜனாதிபதி பதவியில் இருப்பவரோ அந்த அரசமைப்புத் திருத்தத்தைத் தூக்கிக் கடாசிக் குப்பைக்குள் போட்டுவிட்டுத் தம்பாட்டில் காரியமாற்றுகின்றார். அரசமைப்பின் 17ஆவது திருத்தத்துக்கு அமைவாக அரசமைப்புக்குக் கவுன்ஸிலை நிறுவி, அதன்மூலம் மேற்படி துறைகளை நிர்வகிப்பது தொடர்பான சுயாதீன - சுதந்திர - ஆணைக்குழுக்களை அமைக்க வேண்டிய நடவடிக்கையை முன்னெடுக்காமல், அந்தத் துறைகள் சார்ந்த அதிகாரங்களைத் தம்வசமே தொடர்ந்து வைத்திருந்து தம்மிஷ்டப்படி காரியங்களைச் செய்விக்கின்றார் ஜனாதிபதி.

கட்டுமட்டில்லாத அதிகாரத்துடன் தனி ஒருவராக ஜனாதிபதிப் பதவி. அந்தப் பதவி யில் இருப்பவரின் செயற்பாடுகளைத் தட்டிக்கேட்டு மீறி உரைத்துப் பார்க்க வக்கற்ற நீதித்துறை.அந்த ஜனாதிபதியின் காலடியில் வீழ்ந்து கிடக்கும் நாடாளு மன்றம். அந்த நாடாளுமன்றத்தில் அரைவாசிக்கும் மேற்பட்டோருக்கு அமைச்சர் பதவி என்ற பதவி ஆசைக்கான எலும்த்துண்டைத் தூக்கிப்போட்டு, அந்த நாடாளுமன்ற உறுப்பினர்களை தமது பெரும் விசுவாசிகளாக மாற்றியிருக்கும் ஜனாதிபதி.

இந்தக் கட்டமைப்பின் கீழ் ஜனாதிபதி பதவியில் இருப்பவர்கள் முடியாட்சிக் காலத்து சர்வாதிகாரி போல விளங்குவதில் வியப்பில்லை. இந்த அரசியல் கட்டமைப்புப் போக்கிலிருந்து தன்னை விடுவித்து, நல்லாட்சி முறைக்கான நவீனத்துவ பண்பியல்புகளைக் கொண்ட புதிய ஆட்சிக் கட்டமைப்பு முறைக்கு இலங்கை, மாறாத வரை, இத்தகைய 'மன்னராட்சி' மாண்புமுறையை ஒழிக்கவே முடியாது. அத்தகைய மாற்றத்துக்கு இலங்கைத் தேசம் தயாரா?

# யாழ்.மாவட்டத்தில் சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்வதற்கு அரசு நடவடிக்கை

வலி.வடக்கு,ஒக.23

யாழ்.மாவட்டத்தில் சுற்றுலாத் துறையை அபிவிருத்தி செய்ய இலங்கை சுற்றுலாத்துறை நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளது.

சுற்றுலாத் துறையை அபிவிருத்தி செய்யும் நோக்கில் யாழ்.மாவட்ட பிரதேச செயலாளர் பிரிவுகள், உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் ரீதியாக சுற்றுலாத்துறை தொடர்பான விவரங்களை அறியத் தருமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சுற்றுலாப் பயணிகளைக் கவரக் கூடிய இடங்கள், வரலாற்றுச் சரித்தி பிரசித்திபெற்ற இடங்கள், தொல்பொருள் ஆராய்ச்சி இடங்கள், புகழ்மிக்க இடங்கள் சம்பந்தமான விவரங்களை அனுப்பி வைக்கும்படி சுற்றுலாத்துறை அமைச்சு அறிவித்துள்ளது.

யாழ்.குடாநாட்டில் வரலாற்றுப் புகழ் மிக்க பல இடங்கள் கடற்கரையோரங்களை அண்டிய உயர்பாதுகாப்பு வலயப் பகுதிகளில் அமைந்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (50-86)

## நல்லூர் உற்சவ காலத்தில் படையினரின் தாகசாந்தி நிலையங்கள்

யாழ்ப்பாணம், ஒக. 23

நல்லூர் பெருந்திருவிழாவில் கலந்து கொண்ட பக்தர்களுக்கு 51 ஆவது படையணியைச் சேர்ந்த இராணுவத்தினர் சிற்றுண்டி, குளிர்பானங்கள் தாக சாந்தி நிலையங்களை அமைத்து வழங்கினர்.

பாரிய அசம்பாவிதங்கள் எதுவுமின்றி வழிபாடுகளை மேற்கொள்ளக் கூடியதாக இருந்ததாக மக்கள் தமது அபிப்பிரயாத்தைத் தெரிவித்தனர்.

மேலும் பெருமளவு பக்தர்கள் தடையின்றி திருவிழாவில் கலந்து கொள்ளும் பொருட்டு ஊரடங்குச் சட்டமும் பாதுகாப்புத் தரப்பினரால் முழுமையாக தளர்த்தப்பட்டது.



51 ஆவது படையணித்தலைமையகம் நல்லூர் உற்சவம் தொடர்பாக வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசுவாமி கோயில் வருடாந்த பெருந்திருவிழா இம்முறையும் வெகு சிறப்பாக நடைபெற்றது. கடந்த மாதம் 27 ஆம் திகதி ஆரம்பமான திருவிழா இம்மாதம் 22 ஆம் திகதி வைரவர் மடையுடன் நிறைவு பெற்றது.

யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டதைத் தொடர்ந்து யாழ்.குடாநாட்டில் ஏற்பட்ட சமாதானச் சூழலை அடுத்து பெருந்தொகையான பக்தர்கள் இவ்விழாவில் கலந்து கொண்டமை சிறப்பம்சமாகும். திருவிழா ஆரம்பமான நாள் முதல் விழா நிறைவு பெறும்வரை 51 ஆவது படையணியைச் சேர்ந்த இராணுவமும் பொலிஸாரும் இணைந்து தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தமையால்

மேலும்51 ஆவது படையணியைச் சேர்ந்த இராணுவத்தினர் திருவிழா காலங்களில் சிற்றுண்டி, குளிர்பான தாக சாந்தி நிலையங்களை அமைத்து பக்தர்களுக்கு தமது ஒத்துழைப்பை வழங்கியதுடன், தென்பகுதியில் இருந்து கொண்டு வரப்பட்ட மலர்களை விமானப்படையினர் ஹெலிகொப்டர் மூலம் வானிலிருந்து கந்தனுக்குத் தூவி ஆசீர்வாதம் பெற்றனர்.

இம்முறை திருவிழாவில் தென் பகுதியைச் சேர்ந்த பக்தர்கள் சிறிய தொகையினரே கலந்து கொண்டதுடன், அடுத்த வருடம் நடைபெறவி ருக்கும் திருவிழாவில் தென்பகுதி யில் இருந்து பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் கலந்துகொள்வதற்கு வச திகளை ஏற்படுத்திக் கொடுப்பதே பாதுகாப்புத்தரப்பினரின் ஒரே பிரார்த்தனையும் குறிக்கோளுமாகும் - என்று உள்ளது. (1)

## மல்லாகம் நீதிமன்றத்தில் பொருள்கள் ஏல விற்பனை

யாழ்ப்பாணம்,ஒக்.23

மல்லாகம் மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தால் பறிமுதல் செய்யப்பட்டதும் உரிமை கோரப்படாததுமான துவிச்சக்கர வ்ண்டிகள், மோட்டார் சைக்கிள்கள், தொலைக்காட்சிப் பெட்டிகள், வானொலிப் பெட்டிகள் உட்பட வேறு சில பொருள்களும் எதிர்வரும் சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்குப் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன.

ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ள பொருள்கள் அன்றையதினம் அரை மணித்தியாலத்துக்கு முன்னர் பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்படும். ஏலத்தில் வாங்கப்படும் பொருள்களுக்கு பணம் உடன் செலுத்தி நீதிமன்ற வளாகத்திலிருந்து அப்புறப்படுத்தப்படவேண்டும் எனவும், பொருள்களை ஏலத்தில் வாங்குபவர்கள் தமது அடையாள அட்டையைக் கொண்டு வரவேண்டும் எனவும் மல்லாகம் மாவட்ட நீதிவான் நீதிமன்றப் பதிவாளர் அறிவித்துள்ளார். (201)

## முகாமைத்துவ உதவியாளர் தரமுயர்வு பரீட்சையில் யாழ். மாவட்டத்தில் ஒருவர் மட்டுமே சித்தி

யாழ்ப்பாணம், ஒக. 23

முகாமைத்துவ உதவியாளர் தரம் II பதவியில் முகாமைத்துவ உதவியாளர் தரம் I க்கு உயர்த்துவதற்கான 2008 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட பரீட்சையின் பெறுபேறுகள் இணையத்தளத்தில் வெளியாகியுள்ளன.

இப் போட்டிப் பரீட்சையில் யாழ். மாவட்டத்தில் இருந்து ஓர் உத்தி யோகத்தர் மட்டுமே சித்தியடைந்துள்ளார்.

யாழ்.மாவட்ட செயலகத்தில் பணிபுரிந்து தற்போது தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் பணிபுரிந்து வரும் திருமதி ஜெயந்தி ஜெகசீலன் என்பவரே இப்பரீட்சையில் சித்தியடைந்தவராவார்.

யாழ். மாவட்டத்தில் உள்ள பல திணைக்களங்களில் பணிபுரிவோர் இப்பரீட்சைக்குத் தோற்றியபோதும் ஒரு உத்தியோகத்தர் மட்டுமே சித்தியடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இப்பரீட்சை மத்திய அரசின் கீழ் உள்ள திணைக்களங்களில் பணிபுரியும் உத்தியோகத்தர்களுக்கே நடத்தப்பட்டது.

நாடளாவிய ரீதியில் தமிழ் மொழி மூலம் பரீட்சையில் 08 உத்தியோகத்தர்களே சித்தியடைந்துள்ளனர் எனவும் சிங்கள மொழியில் 37 உத்தியோகத்தர்கள் சித்தியடைந்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டது. (50-131)

## இடம்பெயர்ந்து வசிக்கும் மக்களுக்கு 51 நிரந்தர வீடுகள் அமைப்பு

வண்ணை, ஒக. 23

பாதுகாப்பு வலயமாக உள்ள வலி. வடக்குப் பிரதேசத்தில் இருந்து இடம் பெயர்ந்து பல வருடங்களுக்கு மேலாகச் சண்டிலிப்பாய் பிரதேசத்தில் வாழும் மக்களுக்கு கரித்தாஸ் - கியூடெக் நிறுவனம் 51 நிரந்தர வீடுகளை அமைத்து வருகிறது.

ஒவ்வொன்றும் 10 லட்சம் ரூபா செலவில் கட்டி வழங்கப்படும் மேற்படி வீடுகளைப் பெறும் பயனாளிகள் அப்பகுதியில் சொந்த நிலங்களை சுவீகரித்துக் கொண்டதன் பேரிலேயே மேற்படி நிரந்தர வீடுகள் அமைத்து வழங்கப்படுவதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (50-160)

## முதலாம் தர அதிபர்களாக 1,500 பேருக்குப் பதவி உயர்வு

கொழும்பு,ஒக்.23

இலங்கை அதிபர் சேவை தரம் 2 -1 இலிருந்து ஆயிரத்து 500 பேர் முதலாந்தர அதிபர்களாகப் பதவி உயர்வு பெற்றுள்ளதாகக் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

10 வருடங்களின் பின் அதிபர்களுக்குப் பதவி உயர்வு வழங்கப்படுவதாகத் தெரிவித்து இது தொடர்பாகத் தகவல் வெளியிட்டுள்ள கல்வி அமைச்சு அதிகாரி ஒருவர், நாடெங்கிலும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டிருந்த அதிபர் சேவை 2- 1 ஐச் சேர்ந்த 6 ஆயிரம் பேரிலிருந்தே குறிப்பிட்ட ஆயிரத்து 500 பேரும் தெரிவாகியிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

இவர்களுக்கான நியமனக் கடிதங்களை, எதிர்வரும் 30ஆம் திகதி கொழும்பு டி.எஸ். சேனநாயக்கா வித்தியாலயத்தில் நடைபெறவிருக்கும் வைபவத்தின்போது, கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த வழங்க விருப்பது குறிப்பிடத்தக்கது. (50)

### நாளை

| | |
|---|---|
| ஆவணி 8 | 24.08.2009 |
| | திங்கட்கிழமை |
| திதி: | சதுர்த்தி |
| | மு.ப. 9.41வரை |
| நட்சத்திரம்: | அத்தம் |
| | மு.ப. 7.30வரை |
| சுபநேரம்: | 12.05-01.35 |
| ராகுகாலம்: | 07.35-9.05 |

## வவுனியா நலன்புரி நிலைய மக்களுக்கு தற்காலிக அடையாள அட்டை

வவுனியா,ஒக்.23

வவுனியா நலன்புரி நிலையங்களில் உள்ள மக்களுக்கு ஜனாதிபதி செயலகத்தினால் தற்காலிக அடையாள அட்டைகள் தொடர்ந்தும் வழங்கப்பட்டு வருகின்றன.

இதுவரை ஒரு லட்சத்து நாற்பதாயிரத்திற்கும் அதிகமான மக்களின் தரவுகள் ஜனாதிபதி செயலகத்தினால் பதியப்பட்டுள்ள போதிலும் ஒரு லட்சத்தி ஐயாயிரம் பேருக்கான அடையாள அட்டைகளே வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த அடையாள அட்டையில் பெயர் முகவரியுடன் அவர்களது தொழில், இறுதியாக வாழ்ந்த பிரதேச செயலாளர் பிரிவு, அடையாள அட்டை இலக்கம் போன்ற விவரங்களுடன் இவர்களுக்கான தொடர் இலக்கங்கள் பதியப்பட்டுள்ளன. பிளாஸ்டிக் மட்டையில் புகைப்படமும் உள்ளது.

இந்த அடையாள அட்டையில் காணப்படும் 'பார்கோட்' எனப்படும் பகுதியில் குடும்பத்தினரது முழு விவரங்களும் மறைமுகமாக அடங்கியிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

நடமாடும் சேவை மூலம் செயற்படுத்தப்படும் இந் நடவடிக்கையில் 35 முதல் 40 உத்தியோகத்தர்கள் ஈடுபடும் அதேவேளை, அடையாள அட்டைகள் பொலிஸார் மூலமாகவும் உரியவர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. (50)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முறைப்படி விசா பெறாமல் தங்கியிருந்த வெளிநாட்டு வர்த்தகர்கள் 120 பேர் கைது

கொழும்பு, ஓக. 23

உரிய விதிகளின் பிரகாரம் விசா பெறாமல் நாட்டில் இருந்து வர்த்தகத்தில் ஈடுபட்ட 120 வெளிநாட்டவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் 75 பேர் நாடு கடத்தப்பட்டுள்ளனர்.

குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் விசாரணைப்பிரிவில் உதவிக் கட்டுப் பாட்டளர் டபிள்யூ. தேவேந்திர ராஜா இத்தகவலை வெளிவிட்டுள்ளார்.

முறைப்படி விசா அனுமதியின்றி நாட்டில் தங்கியிருந்து வர்த்தக நடவடிக்கையில் ஈடுபட்டவர்கள் என 120 வெளிநாட்டவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் 75 பேர் அவர்களது நாட்டுக்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

மேலும் 29 பேர் மிரிஹான தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இந்தியா, பாகிஸ்தான், சீனா, தாய்லாந்து ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்களே கைது செய்யப்பட்டுள்ளனர்- என்று அவர் மேலும் கூறினார். (அ-1)

# பரீட்சை மேற்பார்வைக்கான கொடுப்பனவு அதிகரிப்பு

கோப்பாய், ஓக.23

பரீட்சைத் திணைக்களத்தால் நடத்தப்படும் ஜி.சீ.ஈ உயர்தர மற்றும் புலமைப் பரிசில் பரீட்சையில் பணிபுரியும் பணியாளர்களுக்கான நாள் கொடுப்பனவு இவ்வருடம் நடைபெறுகின்ற உயர்தரப் பரீட்சையுடன் அதிகரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் இணைப்பு நிலையங்களில் பணிபுரியும் இணைப்பு அலுவலருக்கு ஆயிரம் ரூபா எனவும், உதவி இணைப்பு அலுவலருக்கு தொளாயிரம் ரூபா எனவும், அலுவலகப் பணியாளருக்கு ஐந்நூறு ரூபா எனவும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

பரீட்சை நிலையங்களில் பணிபுரியும் பரீட்சை மேற்பார்வையாளருக்கு தொளாயிரம் ரூபா எனவும், உதவி மேற்பார்வையாளருக்கு எழுநூற்று ஐம்பது ரூபா எனவும், சாதாரண நோக்குநருக்கு அறு நூற்றைம்பது ரூபா எனவும், மண்டப ஊழியருக்கு நானூற்ரைம்பது ரூபா எனவும் நாளொன்றுக்கான கொடுப்பனவு அதிகரித்துள்ளது. (50-72)

## அரசாங்கம் புலிகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதனையும் வழங்குவதில்லை என்று இந்தியா வெளிப்படையாகக் கூறி வந்தாலும் -

2006 ஆம் ஆண்டில் 5 எம்.ஐ.-17 ரக ஹெலி கொப்படர்களை இலங்கை விமானப் படைக்கு சத்தம் போடாமல் வெகுமதியாக வழங்கியது. குறிப்பிட்ட ஹெலிக்கொப்டர்களை இலங்கை விமானப் படையின் குறியீட்டுடன் பயன்படுத்தப்பட வேண்டும் என்று இந்தியா கடும் நிபந்தனை விதித்திருந்தது - என்றும் கோகலே தனது நூலில் ஆதாரங்களுடன் எழுதியுள்ளார்.

'போரில் இருந்து அமைதிக்கு' என்ற நூலில் முக்கிய பகுதிகள் சில வருமாறு:-

2002 ஆம் ஆண்டில் 'சுகன்யா' என்ற ஆழ மற்ற கடலில் பயணிக்கக்கூடிய சுற்றுக்காவல் கப்பலை இந்திய கரையோரக் காவல் படை இலங்கை கடற்படைக்கு வழங்கியது.

இலங்கை ஆழ ஊடுருவும் படையணிகள் அதற்கு எதிரான விடுதலைப் புலிகளின் ஊடறுப்புத் தடுப்புப் படையணிகளால் சுற்றிவளைக்கப்பட்ட வேளைகளில் எல்லாம் இந்த கடற்கலம் முக்கியமான உதவிகளை அரச படையினருக்கு வழங்கியுள்ளது.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த ஆழமான பகுதிகளுக்குள் காயமடைந்த இலங்கைப் படையினரை வான் வழியாக எடுத்துச் செல்வதற்கும் இந்தக் கடற்கலம் முக்கிய உதவியையும் பங்களிப்பையும் வழங்கியுள்ளது.

கடற்புலிகளின் முதுகெலும்பை உடைப்பதில் இந்திய மற்றும் இலங்கைப் படையினருக்கு இடையில் 2006 முதல் 2009 ஆம் ஆண்டுவரை மிகச் சிறந்த முறையிலான ஒருங்கிணைப்பு செயற்பாடுகள் இருந்துள்ளன.

இலங்கைப் கடற்படைத் தளபதி அட்மிரல் வசந்த கரன்னகொட, விடுதலைப் புலிகளின் குறைந்தது 10 ஆயுதக் கப்பல்களையாவது தமது படையினர் அழித்தனர் எனத் தெரிவித்திருந்தார். அந்தக் கப்பல்களில் ஆயுதங்கள், வெடிபொருள்கள் மற்றும் கவச வாகனங்கள் ஏற்றப்பட்டிருந்தன. இந்த நடவடிக்கைகளில் இந்தியக் கடற்படையின் ஒத்துழைப்பை கரன்னகொட குறிப்பிட்டுச் சொல்லி இருந்தார்.

தமிழ்நாட்டின் ராம்நட் என்ற இடத்தில் பொருத்தப்பட்டிருந்த கடற்படை றாடர்கள் மூலம் இலங்கையின் கடற்பிராந்தியம் ஒரு நாளைக்கு சில தடவைகள் என்றாலும் தீவிர கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட்டன. அது தொடர்பான புலனாய்வுத் தகவல்கள் இலங்கைக்கு வழங்கப்பட்டன.

எப்போது எல்லாம் சந்தேகத்திற்கிடமான கப்பல்களின் நடமாட்டம் தென்படுகிறதோ உடனடியாக அது பற்றிய தகவல்களை இந்திய கடற்படை இலங்கைக்கு அறிவிக்கும். இந்த உடனடி உளவுச் சேவையால் விழிப்புப் பெறும் இலங்கை கடற்படையினர் பின்னர் புலிகளின் கப்பல்களைத் தேடிச் சென்று தாக்கியழிப்பார்கள் - என்று உள்ளது.

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியைக் கொலைசெய்ய எடுத்த முடிவே புலிகளின் தலைவரது போர்த் தந்திரங்களில் ஏற்பட்ட மிகப்பெரும் பின்னடைவாகும் என்று கேகலே தமது நூலில் எழுதியுள்ளார்.

புலிகளுக்கு எதிரான போரை இலங்கை வெற்றி கொள்வதற்கு ஏதுவாக இருந்த அதனது போர்த் தந்திரங்கள் பற்றிய விவரங்களையும் அவர் வெளிப்படுத்தியுள்ளார்.

விடுதலைப் புலிகளின் கடைசி நாள்கள் பற்றிய தகவல்களும் நூலில் விரிவாக எழுதப்பட்டுள்ளன. (அ-1)

## முகாம்களில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குத் தயார் செய்வதற்கான விசேட வகுப்புகள் நடத்தப்பட்டன. அந்தந்த முகாம்களிலேயே அவர்கள் பரீட்சை எழுதுவதற்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

அவர்களுக்குத் தேவையான அப்பியாசப் புத்தகங்கள், எழுது கருவிகள் என்பனவும் வழங்கப்பட்டதுடன், பரீட்சை எழுதுவதற்குத் தேவையான அனைத்து பொருள்களும் வழங்கப்பட்டிருக்கின்றன.

இந்த மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றவுள்ள முகாம்கள் ஒன்றிரண்டைத் தவிர ஏனைய இடங்களில் இவர்களுக்குத் தேவையான தளபாட வசதிகள் இல்லாததனால், இந்த மாணவர்கள் நிலத்தில் இருந்தே பரீட்சை எழுத வேண்டியுள்ளது. இத்தகைய மாணவர்களுக்குப் பரீட்சை எழுதுவ தற்கு வசதியாக 'காட்போட்' துண்டுகள் வழங்கப்பட்டுள்ளன.

ஒழுங்கு செய்யப்பட்டுள்ள கூடாரங்களில் மழை ஒழுக்கு அல்லது நிலத்தில் ஈரம் காணப்பட்டால், பாதிப்பின்றி மாணவர்கள் பரீட்சை எழுதுவதற்கு அவர்க ளுக்கு வழங்கப்பட்டுள்ள 'காட்போட்' உதவியாக இருக்கும் - என்றார் அவர். (அ-1)

## ஜி.சீ.ஈ.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணத்தில் ஜி.சீ.ஈ உயர்தர விடைத்தாள்கள் திருத்தும் பணிகள் நடைபெற் றன. அதன் பின்னர் பாதுகாப்புக் காரணங்களுக்காக அந்த பணி நிறுத்தப்பட்டிருந்தது.

மீண்டும் இவ்வருடம் இந்தப் பணியை மேற்கொள்ள பரீட்சைகள் ஆணையாளர் ஏற்பாடு செய்துள்ளார்.

இம்மாதம் 30 ஆம் திகதி தொடக்கம் வேம்படி மகளிர் கல்லூரியில் விடைத் தாள்கள் திருத்தும் பணி ஆரம்பமாகவிருக்கிறது.

கலை, வர்த்தகப் பாடங்களுக்கான விடைத்தாள் திருத்தும் பணியே இங்கு நடைபெற உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (அ-1)

## நாட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னர் இருந்த இராணுவ பலம் தரைப் பாதுகாப்புக்குப் போதுமானது. ஆனால் இப்போது தரை, கடல், வான் பகுதிகள் யாவும் அரசின் கட்டுப்பாட்டில் வந்துள்ளன. ஆகவே தற்போதுள்ள படை பலம் போதுமானதல்ல.

அரசுப்பகுதியின் பாதுகாப்பு மட்டு மல்ல விடுதலைப் புலிகளின் பகுதியின் பாதுகாப்பும் இப்போது படைகளின் கையிலேயே சேர்ந்துள்ளது. முழுப்பகுதியி னதும் பாதுகாப்பை உறுதி செய்ய நாட்டின் படை பலம் அதிகரிக்கப்பட வேண்டும். அதற்கு போதிய ஆளணி உள் வாங்கப்பட வேண்டும் - என்று கூறினார். (அ-1)

## யாழ்.மாவட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கீழ் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன. யாழ். மாவட்டத்தில் பாடசாலை அபிவி ருத்திக்கு முன்னுரிமை வழங்கப்படும். ஒவ்வொரு பாடசாலையும் 32.5 மில்லியன் ரூபா செலவில் அபிவிருத்தி செய்யப்படும்.

யாழ்.மாவட்டத்தில் ஆசிரியர் பற்றாக்குறை இல்லை. எதிர்காலத்தில் பற்றாக் குறை ஏற்படுவதை தவிர்ப்பதற்காக இப்போது ஆசிரியர்களை சேர்த்து வருகிறோம். இந்த அபிவிருத்திப் பணிகளை பார்வையிட அங்கு விரைவில் செல்ல விருக்கிறேன்- என்றார் அமைச்சர்.

## குடாநாட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆகிய கல்வி வலயங்கள் உள்ளடங்கிய யாழ்.பிரிவு ஒன்றைச் சேர்ந்த 3,520 மாணவர்களும் நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள 205 மாணவர்களும் இன்றைய பரீட்சைக்குத் தோற்றுகின்றனர்.

வலிகாமம், வடமராட்சி ஆகிய கல்வி வலயங்களில் உள்ளடங்கிய யாழ்.பிரிவு இரண்டைச் சேர்ந்த 5,545 மாணவர்களும் நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள 7 மாணவர்களும் பரீட்சைக்குத் தோற்றுகின்றனர்.

வவுனியா நலன்புரி நிலையத்தில் இருந்து யாழ்ப்பாணம் வந்த குடும்பங்களைச் சேர்ந்த 8 மாணவர்களும் பரீட்சையில் தோற்ற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பரீட்சைக்கான சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன என்று திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (அ-1)

## எவரது அழுத்தம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னியா நலன்புரி முகாம்களில் தங்கியுள்ள அகதிகளின் மீள்குடியேற்றம் தொடர்பாக அமெரிக்க அரசுத் தரப்பில் உயர் அதிகாரிகள் அடுத்தடுத்து வெளியிட்ட கருத்துக்கள் குறித்து இலங்கை அரசின் நிலைப்பட்டைக் கேட்டபோது அமைச்சர் மேற்கண்டவாறு சொன்னார்.

இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கு வழங்கப்படும் நலன்புரி விடயங்களிலேயே அமெரிக்கா உள்ளிட்ட சர்வதேச நாடுகளின் உதவிகள் தங்கியுள்ளன என்று மத் திய ஆசிய விவகாரங்களுக்கான அமெரிக்காவின் உதவி அமைச்சர் ரொபட் ஓ. பிளேக் தெரிவித்திருந்தும்-

இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கான சுதந்திர நடமாட்டத்துக்கு அனுமதி வழங்கப்படவேண்டும் என்றும் சுதந்திர நடமாட்டம் விளையாட்டாக கொள்ளப்படக் கூடாது என்று சனத்தொகை மற்றும் அகதிகளுக்கான அமெரிக்காவின் உதவி அமைச்சர் எரிக் ஸ்வார்ட்ஸ் தெரிவித்திருந்ததும் அறிந்தவையே.

இக்கருத்துக்கள் குறித்து அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபே வர்த்தன கூறியதாவது:

இடம்பெயர்ந்துள்ள மக்களை விரைவாக மீள்குடியேற்றுவது அரசாங்கத்தின் பொறுப்பாகும். அந்தப் பொறுப்பை அர சாங்கம் ஒருபோதும் தட்டிக்கழிக்க வில்லை. எதிர்காலத்திலும் அவ்வாறு செய்யப்போவதுமில்லை. கடந்த நாள்களில் இயற்கை அனர்த்தம் காரணமாக சில பிரச்சினைகள் ஏற்பட்டன. அவற்றை எதிர்கொண்டு தற்போது ஏற்ற நடவடிக்கை களை எடுத்து வருகின்றோம்.

ஆனால் யாரினதும் அழுத்தம் காரணமாக இடம்பெயர்ந்துள்ள மக்களை உடனடியாக மீளக்குடியேற்றிவிட முடியாது. காரணம் அந்த மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும். எனவே மீட்கப்பட்ட பிரதேசங்களில் நிலக்கண்ணி வெடிகளை முற்றாக அகற்றிய பின்னரே மக்களை மீள்குடியேற்ற முடியும். அழுத்தங்கள் காரணமாக நிலக்கண்ணி வெடிகளை அகற்றும் முன்னர் மீள்குடியேற்ற முடியாது. இடம்பெயர்ந் துள்ள மக்களின் பாதுகாப்பு தொடர்பான பொறுப்பு அரசாங்கத்துக்கே இருக்கின்றது. அதனை மீறமுடியாது. அரசாங்கம் அது தொடர்பில் மிகவும் உறு தியாக இருக்கின்றது.

எனினும் எங்களுக்கு சர்வதேச நாடுகளின் உதவிகளும் தேவைப்படுகின்றன. அவற்றைப்பெற்றுக்கொண்டு நாங்கள் மீள்குடியேற்ற நடவடிக்கைகளை சாத்தியமானளவு விரைவாக மேற்கொள்வோம். சர்வதேச உதவிகள் தேவையானவையாகும்.

சுதந்திர நடமாட்டம் குறித்து பேசப்படுகின்றது. இடம்பெயர்ந்துள்ள மக்களின் சுதந்திர நடமாட்டம் என்ன என்பதை நாங்கள் உணர்கின்றோம். அது எங்க ளுக்கு புரிகின்றது. அதனை மிதிப்பதற்கு நாங்கள் தயாரில்லை. அதனை நாம் மதிக்கின்றோம். கடந்த 30 வருடகாலமாக புலிகளிடம் சிக்கியிருந்த இந்த மக்களுக்கு அரசாங்கமே தற்போது சுதந்தி ரத்தை வழங்கிவருகின்றது. இதனை யாவரும் உணரவேண்டும்.

தற்போதுகூட அந்த மக்களுக்கு நிவாரணக்கிராமங்களுக்குள் நடமாட முடியும். ஆனால் புனர்வாழ்வு அளிக்கப்படுவர்கள். அவ்வாறு நடமாட அனுமதிக்கப்படவில்லை. தொடர்ந்து புலி உறுப்பினர்கள் அடையாளம் காணப்படுகின்றனர். எனவே உடனடியாக நிவாரணக் கிராமங்களில் உள்ள மக்களுக்கு சுதந்திர நடமாட்டத்துக்கு அனுமதிப்பது சாத்தியமான தல்ல. அது தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத் தலாகவும் அமையலாம்.

இதேவேளை இடம்பெயர்ந்துள்ள மக்கள் முகாம்களில் உள்ளனர் என்று கூற முடியாது. சுனாமி ஏற்பட்டபோது பாதிக் கப்பட்ட தெற்கு மக்கள் முகாம்களில் இருந்தனர். ஆனால் வவுனியாவில் நிவா ரண கிராமங்களிலேயே மக்கள் உள்ளனர். இதிலும் வித்தியாசம் காணப்படுகின்றது -என்றார்.

மருத்துவ பட்டப்படிப்பினைத் தொடர விரும்பும் மாணவர்களுக்கு
ரஷ்ய நாட்டில் மருத்துவப்பட்டப் படிப்பினைத் தொடர விரும்பும் மாணவர்களுக்கான ஆலோசனை மற்றும் வழிகாட்டல், ரஷ்யாவில் கல்வி பயில்கின்ற மருத்துவ பீட மாணவர்களினால் வழங்கப்படுகின்றன.
தொடர்பு : 077 1028756
E.mail :- Sentgolanka @ yahoo.com
K.Gobikirshnan (Medical Student in BSMU) (88109)

Sun Communication and Sun net cafe
Browsing 50/= மணித்தியாலத்திற்கு
ஐரோப்பிய நாடுகள் மற்றும் கனடா, அமெரிக்கா, சிங்கப்பூர், மலேசியா இந்தியா கையடக்க தொலைபோசி உட்பட இன்ர நெற் அழைப்புக்களுக்கு நிமிடம் ஒன்றிக்கு 4/= மட்டுமே
அரபு நாடுகளுக்கு 20/- மட்டுமே.
வெளி நாட்டில் உள்ளவர்களுடன் முகம் பார்த்து கதைப்பதற்கும் ஒழுங்குகள் செய்து தரப்படும்.
T.P 021 222 5760
Email Sun net 26 @ homtmail. com
No. 21, Manipay Road, Arukalmadam, Anicoddai.

சாவகச்சேரி வாழ் மக்களின் நலன் கருதி முதன் முறையாக
நவீன கணனி மயப்படுத்தப்பட்ட மருத்துவ ஆய்வு கூடத்தில் சகல விதமான குருதி, சல பரிசோதனைகள் மேற்கொள்ள முடியும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.
LAVA LABORATORIES
அம்பிகா பார்மஸி,
கண்டி வீதி, சாவகச்சேரி. (சி/560414)

யாழ் மண்ணிலும் ஒலிக்கிறது...
▶ வெளிநாட்டு அழைப்புக்களுக்கு 7/-
▶ உள்வரும் வெளிநாட்டு அழைப்புக்களுக்கு 50 சதம் வழங்கப்படும்
லங்கா பெல்
முகவர் : அஸ்வினி மல்ரி பிளாசா
அழையுங்கள்: 021 567 7777




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 23.08.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.